# எரிமலை

பங்குனி 1994



www.tamilarangam.net
தமிழீழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ்தேவி 93

ஓவியர் மகாவினால் வரையப்பட்ட இவ் ஓவியத்திற்குப் பொருத்தமான கவிதை எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதையெனக் காணப்படும் கவிதை எமது இதழில் பிரசுரிக்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பதின்மூன்றாம் ஆண்டு
பங்குனி 1994

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42

## சிங்கள இனவாதப் புயலில் சீரழியப் போவது சிங்கள தேசமே

www.tamilarangam.net

தமிழீழப் போர்வானில், புயலுக்கு முந்திய, சலசலப்புடனான சிற்றமைதி நிலவுகின்றது. சிறீலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகள், போர் மேகங்கள் கருக்கொண்டு வருவதைத் தெளிவாகவே புலப்படுத்துகின்றன. சிறீலங்கா அரசாங்கம் 1994ம் ஆண்டை, யுத்த ஆண்டாகக் கருதியே செயற்பட்டு வருகின்றது. ஆறு மாத காலத்துள் "பயங்கரவாதத்தை" அழித்தொழிப்பேன் என்ற ஜனாதிபதியின் தூளுரை, அரசாங்கம் வகுத்துள்ள போர்த் தந்திரோபாயத் திட்டத்தின் கால எல்லையைக் குறிப்பதாகவே உள்ளது. இராணுவ ஆக்கிரமிப்பில், துப்பாக்கி முனையில் கிழக்கு மாகாணத்தில், உள்ளூராட்சித் தேர்தலையும், பின்னர் குடியொப்பத்தையும் வைத்துத் தென்தமிழீழப் பகுதிகளை, வடக்கிலிருந்து அரசியல் ரீதியாகப் பிரித்த பின்னர், வடக்கின் மீது பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு, விடுதலைப் புலிகளை நிர்மூலம் ஆக்குவதும், தமிழீழப் போராட்டத்தை முற்றாக நசுக்குவதுமே இந்தத் திட்டத்தின் குறிக்கோளாகும். இதற்கான ஆயத்தங்கள், ஆட்திரட்டல்கள், ஆயுத வாங்கல்கள், பிரச்சாரம், ராஜதந்திர நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. 10 ஆயிரம் சிங்கள இளைஞர்களை இராணுவத்திற்கு அணிதிரட்டலும், சீனா, ரஷ்யா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளிடமிருந்து 1000 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட, சிறு ஆயுதங்கள், வெடிமருந்துகள், எறிகணைகள், கைக் குண்டுகள், பீரங்கி விசைப்படகுகள், கவசவாகனங்கள், எம்.ஐ.8 உலங்கு வானூர்திகள் என்ற ஆயுதக் கொள்வனவும் இடம்பெற்று வருகின்றன. இக்கொலை ஆயுதங்கள், இராணுவத்திடமிருந்து விடுதலைப் புலிகளால் களையப்படும் வரை, பொது மக்கள் மீது ஏராளமான அழிவுகளை ஏற்படுத்தப் போவது உண்மை.

"பெரும்பான்மைச் சிங்கள இனமே, முதன்மையான இனம், ஏனைய இனங்கள், அம்மரத்தைச் சுற்றிப் படர்ந்து அதன் தயவில் வளரும் கொடிகள்." "போர் என்பது கொலை செய்யும் போட்டி நடவடிக்கைதான்." "கத்தி வைத்திருப்பது பலாக்காய் வெட்டவல்ல; காசு வைத்திருப்பது ஆயுதங்கள் வாங்கத்தான்." "சிறுபான்மை இனங்கள் பெரும்பான்மை இனத்துக்கு முன்னுரிமை கொடுத்து வாழப்பழக வேண்டும்." "தேர்தல்களில் பெரும்பான்மை இனத்திலேயே நாம் தங்கி நிற்போம்; சிறுபான்மை இனங்கள் பேரம் பேச அனுமதிக்கும் கடந்த காலத் தவறுகளைச் செய்யக்கூடாது." இத்தகைய பொன்மொழிகளை உதிர்ந்து, சிங்கள மக்களின் மனநிலையை போர் வெறிக்கு உகந்ததாக்கும் "மனோவியல் தந்திரத்தையும்" ஜனாதிபதி கையாண்டு வருகின்றார்.

அதேவேளை, "பேச்சுவார்த்தைக்கு வருகிறார்கள் இல்லை." "பேச்சுவார்த்தை என்றால் பிரபாகரன் வரட்டும்." "பேச்சுவார்த்தைக்கு முன்நிபந்தனையாக புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டும்." "புலிகள் முதலில் தேர்தலில் பங்கு பற்றட்டும்; பின்னர் பேசுவோம்." "பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் தயார் ஆனால், என்ன கேட்க விரும்புகின்றார்களோ, அதனை முன்னரே அறிவிக்கட்டும்." இவ்வாறு முன்னுக்குப் பின் முரணான, குழப்பமான கருத்துக்களை அரசாங்கம், சர்வதேச சமூகத்தை ஏய்ப்பதற்காகக் கூறி வருகின்றது. "யுத்தத்தை நடத்திக் கொண்டு இரகசியமாக வெளிநாடொன்றில் பேசுவோம்." என்பதையும் தனது ராஜதந்திர நடவடிக்கையாக செய்து வருகின்றது.

தமிழீழ மக்கள், விடுதலைப் புலிகள் என்ன விரும்புகின்றார்கள் என்பதை பதினைந்துக்கு மேற்பட்ட சர்வதேச மனித உரிமை அமைப்புக்களே, தற்போது ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 50வது கூட்டத் தொடரில் தெளிவாகக் கூறி உள்ளன. தமிழ் மக்களின் வடக்கு-கிழக்கு தாயகத்தை அங்கீகரித்து, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு திட்டத்தை வைத்து அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேசினால் மாத்திரமே தீர்வு வரும் என்று அவை தெளிவாகக் கூறிவிட்டன.

விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் என்ன கூறியுள்ளார். அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை அறிவித்து பொருளாதார தடையை நீக்கி சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சமாதானச் சூழலை உருவாக்கினால், விடுதலைப் புலிகள், யுத்தக் கைதிகளை விடுவிப்பதோடு, யாழ்ப்பாணத்தில் பேச்சுவார்த்தையை சிறீலங்கா அரசாங்கத்துடன் நேரடியாக நடத்தலாம் என்று தெரிவித்துள்ளார். இவை, அரசாங்கம் விதிப்பது போன்ற முன்நிபந்தனைகள் அல்ல; பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு அவசியமான சமாதானச் சூழலை வலியுறுத்துவதான வேண்டுகோள் என்று சமாதானத் தூதுவர்களாக வந்த மத, அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் மூலம் அரசாங்கத்திடம் அறிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் சமாதான சமிக்கைகளை அரசாங்கம் கடந்த காலங்களில் போல தற்போதும் பலவீனமான நிலையில் இருந்து வருபவை எனக்கருதி உதறித் தள்ளும் என்பது உறுதி. எப்போதும் போல, அரசாங்கத்தின் திட்ட அட்டவணை (Agenda) இராணுவத் தீர்வையே நோக்கியதாக உள்ளது. சிறீலங்கா அரசாங்கத்தின் திட்டங்கள், கனவுகள், அட்டவணைகள் எப்போதும் போல் தோல்வியுறுவது மாத்திரமல்ல, சிறீலங்கா அரசாங்கத்தையும், சிங்கள மக்களையும் மேலும் மிக மோசமான நெருக்கடிக்குள் உள்ளாக்கும் என்பதும் உறுதி. இவ்வருட இறுதிக்குள் இராணுவ வெற்றி கண்டு, பாராளுமன்றத் தேர்தலை வைத்து, சிங்கள வாக்குகளால் வெற்றி பெற்று, பாராளுமன்றத்தாலேயே ஜனாதிபதியாக "முடிசூட" எண்ணும் விஜயதுங்காவின் பேராசையும் பொடிப்பொடியாகிப் போகும். அது மாத்திரமல்ல, ஒரு வெளிநாட்டு ராஜதந்திரி கொழும்பில் கூறியது போல, "ஜனாதிபதியின் அதிதீவிர இனவாதச் சார்பு நிலைப்பாடானது, கிழக்கை இழப்பது மட்டுமல்ல, துரித காலத்தில் தென்னிலங்கையையே சிதறுண்டுபோகச் செய்துவிடும்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எதனால் இன்னமும் 'பெண் விடுதலை பற்றிப் பேசவேண்டியுள்ளது?

**கோகிலா மகேந்திரன்.**

ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள் வரிசையில் இவர் தனக்கென ஒரு இடத்தைத் தக்க வைத்திருக்கிறார். நாற்பத்து மூன்று வயதாகும் இப்பெண்மணி இதுவரையில் அறுபது சிறுகதைகளையும் ஆறு நாவல்களையும், பல உளவியல் சார்ந்த கட்டுரைகளையும் எழுதியிருக்கின்றார். விழிசிட்டியைத் (தெல்லிப்பளை) தனது பிறப்பிடமாகக் கொண்ட கோகிலா மகேந்திரன், விஞ்ஞான ஆசிரியையாக இருபது வருடங்கள் பணியாற்றினார். அதன்பின் கடந்த நான்கு வருடங்களாக அதிபர் தரத்தில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் பகுதித் தலைவராகக் கடமையாற்றி வருகின்றார்.

தனது முதலாவது படைப்பான 'மலர்களைப்போல் தங்கை' என்ற குறுநாவலை க.பொ.த.(சா/த) படிக்கும் போது எழுதினார். அது பிரசுரமாகவில்லை. 'அன்புக்கு முன்னால்' என்ற சிறுகதையே முதன்முதலாக 1972ம் ஆண்டில் 'குயில்' என்ற சஞ்சிகையில் பிரசுரமாகியது.

இவரது சிறுகதைகளில் 'எரியும்', www.tamilarangam.net 'முகங்களும் முடிகளும்', 'பரிகாரம் தேடும் பரிதாபங்கள்', 'முரண்பாடுகள்', என்பவையும் 'துயிலும் ஒருநாள் கலையும்', ' தூவானம் கவனம்' ஆகிய நாவல்களும், 'குருவி கூவ மறந்ததோ', 'மலையும் மடற்பனையும்' என்ற நாடகங்களும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியன.

"நான் வாசித்த சில எழுத்தாளர்களின் படைப்புக்கள் எனது ஆளுமையைப் பெருமளவு மாற்றின. அதன்மூலம் நானும் எழுதவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது." என்று தனது எழுத்துலகப் பிரவேசத்தைப் பற்றி இவர் குறிப்பிடுகின்றார்.

பெண்ணியம் பற்றிப் பேசுவதாலும், எழுதுவதாலும் பலரது கண்டனங்களுக்கும், எதிர்ப்புகளுக்கும் ஆளாகியபோதும், நிமிர்ந்து நிற்கும் இவர் 'சுதந்திரப் பறவைகள்' பத்திரிகையின் வாசகர்களுக்காக வழங்கிய செவ்வியை இங்கே தருகிறோம்.

**ஒரு பெண் எப்படி இருக்கவேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்கள்?**

✳ வீட்டிலே பிள்ளை குழப்படி செய்கிறது. தாய் ஓரிருமுறை சொல்லிப் பார்க்கிறாள். பிள்ளை கேட்கவில்லை. தாய் சொல்கிறாள்.

"இரு. இரு. இண்டைக்கு அப்பா வரட்டும். உனக்கு முறையாக வாங்கித் தருகிறேன்."

இத்தகைய நிகழ்வை நான் யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான வீடுகளில் பார்த்திருக்கிறேன். ஒரு பெண் இப்படி இருக்கக்கூடாது என்று நான் விரும்புகின்றேன். தன்னுடைய சொந்தப் பிள்ளையின் நடவடிக்கைகளுக்குக் கூடப் பொறுப்பு எடுத்துக்கொள்ள முடியாதவளாக ஒரு பெண் இருக்கக் கூடாது.

கல்லூரிகளிலும் பார்க்கிறேன். அநேகமான பெண் ஆசிரியர்கள் வகுப்புகளில் ஏற்படும் பிரச்சினைகளை இன்னொரு ஆண் ஆசிரியரிடம் அல்லது அதிபரிடம் கொண்டு செல்லவே முனைகிறார்கள். 'தம்மால் அதைத் தீர்க்க முடியும்' என்ற சுய நம்பிக்கை அவர்களிடம் இல்லை. பெண் என்பவள் ஆணைப் போலவே சுய சிந்தனையுடன் சுயாதீனமாக இயங்கக் கூடியவளாய் இருக்கவேண்டும் என்று பெரிதும் நான் விரும்புகிறேன்.

சகல கண்ணோட்டங்களிலும் ஆணாதிக்கம் முதன்மைபெற்று வந்த ஒரு சமுதாயத்தில் ஒரு மாற்றத்தைத் திடீரெனச் செய்வது கடினம்தான். மூன்றுமுறை சாப்பிட்டுப் பழகியவனுக்குச் சாப்பிடாமல் இருப்பது கஷ்டம். பல மாதம் நோய்வாய்ப்பட்டுச் சாப்பிடாமல் இருந்தவனுக்குச் சாப்பிடுவது கஷ்டம். காலப்போக்கில் இந்த 'ஒவ்வாமை' சரியாகிவிடும்.

**சைக்கிள் ஓடுகிறீர்கள், பள்ளிக்குப் போகிறீர்கள், வேலைக்குப் போகிறீர்கள். அப்படியிருந்தும் ஏன் இன்னமும் பெண் விடுதலை பற்றிப் பேசுகிறீர்கள் என்று கேட்பவர்களுக்கு உங்கள் பதில்?**

✳ இவ்வளவும் செய்து களைத்துப் போகும் பெண், எப்படியாவது அலுவலகத்தில் இருந்து கணவன் வருவதை எதிர்பார்த்துக் கையில் மணம் மிகுந்த கோப்பியுடன் காத்திருக்க வேண்டும் என்று சமுதாயம் எதிர்பார்க்கிறதே!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"பெண் என்பவள் மாயப் பிசாசு. சும்மா இருக்கும் ஆணின் மனதில் மோகப் பாம்பாக வந்து சுருண்டு, அவனைக் குதறிவிடும் பேய். அவளை எந்த நிலையிலும் நம்பலாகாது. அவள் இரகசியங்களை வைத்துக்கொள்ளத் தகுதியற்றவள். பெண்களின் ஆலோசனைகளை ஆண்கள் ஏற்கவேண்டியதில்லை" என்றெல்லாம் சமூகம் இன்னும் நம்புகிறதே! அதனால் தான் நாங்கள் பெண்விடுதலை பற்றிப் பேசவேண்டியிருக்கிறது.

**"நீங்கள் என்ன செய்கிறீர்கள்?"**
**"வேலை செய்கிறேன்."**
**"உங்கள் மனைவி என்ன செய்கிறார்?"**
**"வீட்டிலே சும்மா இருக்கிறார்."**
**இந்த நகைச்சுவை பற்றிய உங்கள் கருத்து?**

✳ ஆம். இது பெரிய நகைச்சுவை. வீட்டிலே பெண் சமைக்கிறாள்; குழந்தைகளைப் பராமரிக்கிறாள்; உடுப்புத் தோய்க்கிறாள்; பொருள் வாங்கி வருகிறாள்; குழந்தைக்குப் பாடம் சொல்லிக் தருகிறாள்; தையல் வேலை செய்கிறாள்; வீட்டைக் கூட்டிச் சுத்தம் செய்கிறாள். இன்னும் பல வேலைகளையும் அவள் செய்யக்கூடும். ஆயினும் அவை வேலைகளாகக் கணிக்கப்படுவதில்லை. ஏனென்றால் அதற்கு யாரும் சம்பளம் கொடுப்பதில்லை அல்லவா? அவள் 'சும்மா இருக்கிறாள்' என்றுதான் ஆண் நினைக்கிறான்.

**நீங்கள் ஒரு பெண், ஒரு மனைவி, ஒரு தாய், ஒரு ஆசிரியர், ஒரு எழுத்தாளர். இப்படிப் பல பாத்திரங்களை வகிக்கும் உங்களை யாழ்ப்பாணத்துச் சமூகம் எவ்வாறு ஏற்றுக்கொள்கிறது? உங்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் எழுந்திருக்கின்றனவா? எவ்வாறு சமாளித்திருக்கிறீர்கள்?**

✳ 'உலகம் என்பது ஒரு நாடக மேடை' என்று ஷேக்ஸ்பியர் சொல்வார். மனிதர்கள் பலர் வீட்டிலும், வேலை செய்யும் இடத்திலும், சமூகத்திலும், ஒரே நேரத்தில் பல பாத்திரங்களை ஏற்று நடிக்கவேண்டிய தேவை இருக்கிறது. ஒரு பாத்திரத்தை மிகச் செப்பமாக நடிக்க விரும்பினால், இன்னொன்றில் சோடை போகும் வாய்ப்பு உண்டுதான். எல்லாப் பாத்திரங்களையும் திறம்படச் செய்வது கடினம்தான். நேரத்தை மிகத் திட்டமிட்டு செலவிடுவதன் மூலமும், அநாவசியமாகக் கதைத்துப் பொழுதுபோக்குவதில் ஈடுபடாத ஆளுமையின் மூலமும் பெரும் பிரச்சினைகள் ஏற்படாமல் சமாளித்து வருக்கிறேன்.

"இலக்கியக் கூட்டங்களுக்குப் போகின்ற நேரத்தில் அல்லது கூட்டங்களுக்குப் பேசப்போகின்ற நேரத்தில், வீட்டிலே ஒரு சுவையான சமையலைச் செய்து, கணவரையும் பிள்ளைகளையும் கவனிக்கலாம்" என்று எனக்குப் பலர் சொல்லுவார்கள். ஆனால் எதை எந்த அளவுக்குச் செய்யவேண்டும் என்பது பற்றி எனக்குள் இருக்கும் முடிவை, வேறு யாரும் அபிப்பிராயம் சொன்னதால் மாற்றிக் கொள்ள நான் முயன்றதில்லை.



கோகிலா மகேந்திரன்.

**உங்களின் நாவலான 'துயிலும் ஒரு நாள் கலையும்', உங்களைப் பற்றி எத்தகைய ஒரு பார்வையை ஏற்படுத்தியது? அந்த நாவலின் கரு உள்ளார்ந்த ரீதியில் உங்களை எப்படிப் பாதித்தது?**

✳ 'துயிலும் ஒரு நாள் கலையும்' நாவலின் அறிமுக விழா ஒன்றில், ஒரு ஆண் எழுத்தாளர் அதைப்பற்றி மிக அதிகப்படியான கண்டனத்தை முன்வைத்தார். "இரவு ஏழு மணிக்குப் பிறகு பெண்கள் ஏன் வீட்டுக்கு வெளியே போகவேண்டும்?" என்ற ஒரு கேள்வியை மிக ஆக்ரோஷமாகக் கேட்டார். (அந்த நாவலின் கதாநாயகி அந்த நேரத்தில் கோயிலில் சொற்பொழிவு ஆற்றச் செல்கிறார்) அப்போதே எனக்குத் தெரியும், 'எனது நாவல் வெற்றி பெற்றுவிட்டது' என்று. பல ஆண்களின் மனச்சாட்சியை அது தொட்டு உலுப்பியது. பல பெண்கள் அதனை மனந்திறந்து பாராட்டினர். சான்றோரிடத்தில் ஒரு கணிப்பை அது எனக்கு ஏற்படுத்தித் தந்தது.

என்னைச் சுற்றி வாழும் பெண்களுக்கு நடப்பவற்றையே, ஒரு பெண் என்ற முறையில் என் மனதைப் பாதித்த விடயங்களையே அந்த நாவலின் கருப்பொருள் ஆக்கினேன்.

**நீங்கள் ஒரு கலை இலக்கிய வாதியாக இருப்பதும், பெண்ணியம் பற்றிப் பேசுவதும், உங்களது குடும்பத் தலைவி அந்தஸ்தைப் பாதிப்படையச் செய்த துண்டா?**

✳ என்னுடைய கோணத்தில் இருந்து பார்க்கும் பொழுது, 'நிச்சயமாக இல்லை' என்பதே எனது கருத்தாகும். ஒரு வகையில் அவை எனது குடும்பத் தலைவி அந்தஸ்தை உயர்த்தியுள்ளது எனலாம். நான் ஒரு கலை இலக்கியவாதியாக இருப்பது எனது அறிவுப் பரப்பையும், மனப் பாங்கு வளர்ச்சியையும் அதிகரித்துள்ளது. இதனால் இன்னொரு தாயை விட நான் எனது பிள்ளைக்கு நல்ல தாயாக இருக்கிறேன் என்பது எனது உறுதியான கருத்து. இன்னொரு வகையில் நான் ஒரு சராசரிப் பெண்ணை விட நல்ல குடும்பத் தலைவியாக இருக்கிறேன். தொட்டதெற்கெல்லாம் கணவரை நம்பியிராமல், பல குடும்பப் பொறுப்புக்களை நானே சுமந்து கொள்கிறேன். அதனால் எனது கணவரின் உளப்பாரம் குறைகிறது. அந்த வகையில் நான் நல்ல மனைவியாகவும் அமைகிறேன்.

**நீங்கள் ஒரு பெண் என்ற வகையில் உங்களின் 'சுயம்' எப்போதாவது தாக்கப் பட்டிருக்கிறதா?**

✳ பலமுறை, பலரால்! அப்படி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## விடுதலைப் புலிகளின்
# நடமாடும் மருத்துவப் பிரிவு 6000 பேருக்கு சிகிச்சை

**விடுதலைப் புலிகளின் நடமாடும் மருத்துவப் பிரிவினர் கடந்த இரு மாதங்களில் 6090 பேருக்கு யாழ். குடாநாட்டில் சிகிச்சை அளித்துள்ளனர்.**

**கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் 2538 பேருக்கும், டிசம்பர் மாதத்தில் 3552 பேருக்கும் சிகிச்சை அளித்துள்ளனர்.**

**வலிகாமத்தில் அரியாலை கிழக்கு, உடுவில் மாதிரி வீடமைப்புத் திட்டம், சிறுப்பிட்டி மேற்கு, பொம்மைவெளி, இணுவில் சிறுவர் பராமரிப்பு பூங்காக்கள் உட்பட பல பகுதிகளிலும் இச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.**

**வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சி, சீலன் நகர், வனிதா சிறுவர் போசாக்கு பூங்கா ஆகிய பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் நடமாடும் மருத்துவப் பிரிவினர் மக்களுக்கு சிகிச்சை அளித்துள்ளனர். கடும் மழை வெள்ளத்தினால் மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருந்த காலப் பகுதியிலேயே மேற்படி சிகிச்சை அளிக்கப்பட்டது. இக்காலப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு காரணமாகப் பல தொற்றுநோய்களால் மக்கள் அல்லலுற்றுக் கொண்டிருந்த வேளையில் மக்களுக்கு விடுதலைப் புலிகளின் நடமாடும் மருத்துவப் பிரிவு கைகொடுத்தது குறிப்பிடத்தக்கது.**

ஏற்படும் தாக்கங்களை அவ்வப்போது கலைவடிவங்களாகத் தந்திருக்கிறேன். எதிர்காலத்திலும் வரும்.

**இன்றைய பெற்றோருக்குப் 'பெண் குழந்தை வளர்ப்புப்' பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

✳ இதற்கு விடை சொல்வதாயின் ஒரு பெரிய கட்டுரை எழுத நேரிடும். மிகச் சுருக்கமாகச் சொன்னால் பெண் குழந்தையை நிலத்தைப் பார்த்து நடக்கப் பழக்காமல் நிமிர்ந்து நேரே பார்த்து நடக்கப் பழக்குங்கள் என்று சொல்வேன். உடலை அழகாக வைத்திருக்கப் பழக்குவதை விட உள்ளத்தை அழகாக வைத்திருக்கப் பழக்குங்கள் என்று சொல்லுவேன். பிறர் சொல்லுவதைச் செய்யும் பிள்ளையாக இல்லாமல், தானே சிந்தித்துச் செயற்படும் பிள்ளையாக்க முனையுங்கள் என்று கூறுவேன்.

**முற்போக்கான பெண்ணியக் கருத்துக் கொண்ட எழுத்தாளர் சிலரையும், சில இலக்கியப் படைப்புக்களையும் சுதந்திரப் பறவைகளின் வாசகர்களுக்கு இனம் காட்ட முடியுமா?**

✳ பெண்ணியக் கருத்துக் கொண்டு வந்த எல்லா இலக்கியப் படைப்புக்களையும் நான் படித்தேன் என்று சொல்ல முடியாது. படித்தவற்றிலும் பல மறந்து போயிருக்கலாம். நினைவில் உள்ள சிலவற்றைச் சொல்வேன்.

ச. வேதநாயகம்பிள்ளை, அ. மாதவையா, தி.சு. சரவணமுத்துப் பிள்ளை போன்றோர் தமது நாவல்களில் பெண் கல்வியின் அவசியத்தை வற்புறுத்தினர்.

ராஜம் கிருஷ்ணன் 'காலம் தோறும் பெண்' என்ற சமூகவியல் ஆய்வு நூல் ஒன்றை எழுதியுள்ளார். மிகத் துணிகரமாக இந்நூல் பெண்களின் பிரச்சினைகளை ஆய்வு செய்திருக்கிறது. 'வீடு', 'மண்ணகத்துப் பூந்துளிகள்' போன்ற நாவல்களிலும் அவர் பெண்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கின்றார்.

நோர்வேஜிய நாடக ஆசிரியரான ஹென்றிக் இப்சனுடைய 'பொம்மை வீடு' என்ற நாடக இலக்கியம் ஐரோப்பாவிலேயே பெண்ணியம் பற்றி ஒரு புதிய சிந்தனையைத் தூண்டியது.

ஜெயகாந்தன் பல சந்தர்ப்பங்களில் பெண்களைப் பற்றி முற்போக்கான சிந்தனை உடையவராகத் தோன்றுகிறார். "சில நேரங்களில் சில மனிதர்கள்" நல்ல உதாரணம்.

இந்தியப் பெண் எழுத்தாளர்களான லக்ஷ்மி, அனுத்தமா, ஆர் சூடாமணி, ஜோதிர்லதா கிரிஜா, சிவசங்கரி, அநுராதா ரமணன், இந்துமதி, வாஸந்தி, உஷா சுப்பிரமணியன் போன்றோரும், எமது பெண் எழுத்தாளர்களான தாமரைச் செல்வி, யோகா பாலச்சந்திரன், அன்னலட்சுமி இராஜதுரை, ஆனந்தி, ஜனகமகள் போன்றோரும் அவ்வப்போது பெண்ணியம் தொடர்பான இலக்கியங்கள் செய்துள்ளனர். ஆனால் இவை எல்லாவற்றையும் விடக் காத்திரமான படைப்புக்கள் 'அம்பை' செய்தவை. 'சிறகுகள் முறியும்', 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' இரண்டும் அற்புதமான தொகுதிகள்.

எமது நாட்டில் கடந்த சில வருடங்களில் பெண் போராளிகளால் எழுதப்பட்ட சில இலக்கியங்கள் முற்றிலும் புதிய பரிமாணத்தைக் கொண்டிருக்கின்றன. "விமர்சித்தவர்களை எல்லாம் வினாவாக்கி வியக்க வைத்து பெண்களின் பெருமைக்கு மெருகேற்றிய" வானதி போன்றவர்களின் படைப்புக்கள் இதற்கு ஒரு வகை மாதிரியாகும். பெண் போராளிகளால் வெளியிடப்பட்ட எழுச்சிப் பாடல் ஒலிப்பதிவு நாடாவிலும் பெண்ணியக் கருத்துக்களைக் கொண்ட நல்ல கவிதைகள் பல உண்டு.

எமது நாட்டின் ஆண் எழுத்தாளர்கள் பலரும் கூட இவ் விடயத்தில் முற்போக்கான சிந்தனை உடையவர்களே. கவிஞர் காரை சுந்தரம்பிள்ளையின் "காவேரி" குறுங்காவியத்தைப் படித்துப் பாருங்கள். கவிஞர் சோ. பத்மநாதன் எழுதிய 'பெண்ணாய் எடுத்த பிறவி' என்ற கவிதையை விட வேறு எது அவரின் பார்வைக்குச் சான்றாக வேண்டும்?

நிறைய, இன்னும் நிறையச் சொல்லலாம். நினைவில் வந்தவை இவை.

*நன்றி: சுதந்திரப் பறவைகள்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நிறைவான கிராமங்களில் நிறைவற்ற வாழ்க்கை



www.tamilarangam.net

தென் தமிழீழம் சிறீலங்காவின் பொருளாதார வளர்ச்சியில் பெரிதும் பங்கெடுத்துக் கொண்ட முக்கிய பிரதேசமாகும். இங்கு காலங்காலமாக தமிழர்கள் வாழ்ந்து வந்தது வரலாற்று உண்மை. ஆனால் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை சிங்களவர்கள் எப்பொழுது பெற்றார்களோ அன்றே தமிழர்களின் தாயகக் கனவுகளில் சிங்கள இனவெறி தாண்டவமாடத் தொடங்கியது. 1958இல் இருந்து இன்றுவரை படிப்படியாக தனது கோரக்கொடுமைகளைப் புரிந்துகொண்டே இருக்கிறது. செல்வச் செழிப்புள்ள நிலங்களில் சிங்கள மொழி புகுத்தப்படுகிறது. காரணப் பெயர்களாக தமிழர்களால் இடப்பட்ட கிராமங்களின் பெயர்கள் அக்காரணத் தன்மை அற்றுப்போகும் அளவுக்குச் சிங்கள இனவெறி சின்னாபின்னமாக்குகிறது.

உலகிலேயே சிறந்த துறைமுகங்களில் ஒன்றான திருக்கோணமலைத் துறைமுகத்தை அண்டிய அத்தனை கிராமங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக தங்களே தேவைகளைத் தாங்களை பரிமாறிக் கொள்ளும் அளவிற்குச் செழித்திருந்தன.

அதாவது திருமலை நகரத்திலிருந்து கிழக்கே 13 மைல் தூரத்தில் கடலுக்கு அப்பால் இருக்கும் முத்தூர் எனப்படுகின்ற பிரதேசத்தில் சுற்றியுள்ள கிராமங்களான கட்டைபறிச்சான், சம்பூர், கூர்நெல் தீவு, மல்லிகைத்தீவு, கிளிவெட்டி போன்ற கிராமங்கள் இன்று அமைதியற்று பீதியுற்றுக் காணப்படுகின்றன.

சம்பூர் எனப்படுகின்ற போது அனைத்து வளங்களும் நிறைந்து காணப்படும் ஓர் கிராமம் என்பது பொருள். இக்கிராமத்தின் ஒரு கடல் முனையில் வெளிச்சவீடு ஒன்று உண்டு. அதன் குறியை அறிந்த பின்னரே கப்பல்கள் திருகோணமலைத் துறைமுகத்துள் நுழையும். இக்கிராமத்தைச் சுற்றியுள்ள கடற்பரப்பில் பலவகையான மீனினங்கள் வருவதால் பருவங்களுக்கு ஏற்றாற்போல் விதம்விதமான மீன் இனங்கள் பிடிக்கப்படும். ஆழம் குறைந்த குடாவாகவும், மகாவலிகங்கையின் “கழிமுகம்” இங்கு அமைந்திருப்பதாலும் மீனினத்தின் வருகை மிக மிக அதிகமாயிருக்கும்.

அடுத்து நெற்செய்கை பண்ணப்படும் வளம் குன்றாத நெல்வயல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

கள், நீர்ப்பாசனக் குளங்கள். இப்படியான செல்வச் செழிப்புள்ள கிராமத்து மக்கள் எவருக்கும் அஞ்சாது வாழ்ந்து வந்ததொரு காலம். அந்நிலை 1958க்கு முன்னர் தான். இன்று அக்கிராமங்களில் பல, சிங்கள இராணுவ முகாம்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அப்பகுதி மக்கள் தமது உணவை இராணுவ முகாம்களுக்குச் சென்று பெற வேண்டிய நிலை. வாரத்திற்கு ஒருநாள் ஒரு குடும்பத்திற்கு குறித்த அளவுப் பொருட்கள் மட்டுமே பணத்திற்கு விநியோகிக்கப்படும். இது "ஆனைப்பசிக்கு அறுகம் புல் போட்டதுபோல்".

**ஸ்ரீ லங்கா அரசும் அதன் ஆக்கரமிப்பு இராணுவமும் தென்தமிழீழத்தில் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டதனால் சகஜநிலை வாழ்வை இழந்துள்ள மக்களில் சிலரைப் புகைப்படங்களில் காண்கிறீர்கள்.**





அத்தோடு கல்விமான்கள் பலர் படிப்படியாக இராணுவத்தால் அரச அனுமதியோடு சுட்டுக்கொல் லப்படுவதும், பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதும் தமிழரின் விகிதாசாரத்தை மட்டு மல்ல, இனிமேல் உருவாகும் தமிழ் சந்ததியையும் அழிக்கும் இனவெறி அரசின் திட்டமிட்ட செயல்க ளாகும்.

அரசியல்வாதிகளாலும், சிங்கள இனவாதிகளாலும் தேர்தல் காலங்களில் ஏமாற்றப்பட்ட அப் பகுதி மக்கள் தங்கள் ஏமாற்றங் களை உணர்ந்து விழிக்கத் தொடங்கிவிட்டார்கள். விடுதலைப் பாதையின் நிதர்சனத் தன்மையை உணர்ந்துவிட்டார்கள். மின்சாரமே இல்லாது கைவிளக்குகளால் தம் வாழ்வை பிரகாசமாக்கிக் கொண் டிருந்த மக்கள் தங்கள் உயிர், உடைமைகள் அனைத்தையும் இழந்து இன்று அகதிகளாகவும் ஆக்கப்பட்டு விட்டனர். எத்த னையோ தமிழ், சிங்கள, முஸ்லீம் அரசியல் தலைவர்கள் மின்சாரம் தருவதாகக் கூறி அதன் கம்பங் களைக் காட்டி பலமுறை வாக்குப் பெற்றது மறக்கமுடியாத மறையாத உண்மை. இன்று அப்பகுதிக்கு மின்சாரம் கிடைக்கப்போவதாகக் கூறப்படுகிறது. இதற்கிடையில் இராணுவ முகாம்களில் வாக்குச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சாவடிகளை அமைத்து மாகாண சபைத் தேர்தலை நடாத்த இன வெறி அரசு அப்பகுதி மக்களைத் துன்பப்படுத்தப் போகிறது. இதன் உண்மை எஞ்சிக் கிடக்கும் பூமியையும் சிங்களக் குடியேற்றத்தால் நிறைவாக்க சிங்கள அரசு திட்டமிடுகிறது என்பதே. தான் நன்மை செய்வதாகக் கூறி வெளி உலகையும், மக்களையும் ஏமாற்றப்பார்க்கிறது. மக்களின் முழு உணர்வும் "தமிழீழம்" என்ற தலைப்பை மையப்படுத்திய பிறகு இந்தப் போலியான வசதிகளும், தேர்தல்களும் எதுவுமே செய்யப்போவதில்லை.

கல்விக்கூடங்களும், மக்கள் வாழ்விடங்களும் சிங்கள இனவெறியர்களின் கொலை முகாம்களாக உள்ளன. தமிழர்களின் கலாச்சார மையங்கள், கலைப்பொக்கிசங்கள் பூண்டோடு அழிக்கப்படுகின்றன. நாயன்மார் காலத்து பிரசித்தி பெற்ற திருக்கோணேச்சரம் இன்று இனவெறியர்களின் பாதணிகள் மட்டும் படுகின்ற இடமாக மாறி விட்டது. சிலவேளை அங்குள்ள விக்கிரகங்கள் அகற்றப்பட்டு விகாரைகளாக மாறுகின்ற அவலமும் ஏற்படலாம்! காரணம் ஆலய நுழைவாயிலில் அமைந்துள்ள புத்தர் சிலை அதன் முதற்படி.

ஆனால் தமிழர்கள் தமக்குரியது "தமிழீழம்" என்ற வரைபை தரணி முழுவதும் எடுத்துக்காட்டிவிட்டார்கள். தாயகப் பாதையை மாவீரர்களின் தியாகத்தின் மூலம் செப்பனிட்டுவிட்டார்கள். அந்தப் படிகளில் குருதியும் மனவுறுதியும் படிந்திருக்கும் வரை எந்த இனவெறியராலும், ஏகாதிபத்திய வாதிகளாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. இறுதி இலட்சியம் ஈடேறும் வரை அவர்கள் பயணம் தொடரும் என்பது அசைக்கமுடியாத உண்மை.

நன்றி: ஈழநாதம்



பயம் என்பது பலவீனத்தின் வெளிப்பாடு. கோழைத்தனத்தின் தோழன். உறுதிக்கு எதிரி. மனித பயங்களுக்கெல்லாம் மூலமானது மரணபயம். இந்த மரணபயத்தைக் கொன்று விடுபவன்தான் தன்னை வென்றுவிடுகிறான். அவன்தான் தனது மனச்சிறையிலிருந்து விடுதலை பெறுகிறான்.

**தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிரிக்கத் தோன்றும்

நானும் என் தம்பிகளும்,
அக்கன், குப்பன், கடலை, ஈக்கில்
தம்பாக்கண்டு, இவன் கறுவல் ஜெயம் எல்லோரும்
வழமை போலவே மாலையில் கூடுவோம்.
அதே சண்டை.... அதே அடிபிடி..

"கலைஞரா?".... "வாத்தியாரா?"

குழுவாய் பிரிந்து மோதிக்கொள்வோம்.

"தமிழர் தலைவர் யார்?"

படங்களைத் தாங்கிய அட்டைகளைத் தாங்கி,
கோஷங்கள் எழுப்பி, நாலுபேர் கொண்ட பேரணி நடத்துவோம்.
அடிவளவில் நடந்த அரசியல் மோதல்
வீட்டிலும் தொடரும்.... பின்
விடிந்ததும் காலை பள்ளியில் தொடரும்.
கட்டிப்பிடித்து, உருண்டு பிரண்டு,
பற்கள் நொறுங்க முகத்தில் அறைந்து,
நகத்தால் விறாண்டி, அடித்துக் கடித்துக் காயம் வைத்து,
கல்லால் விளாசி, காலால் உதைத்து...

குரும்பட்டித் தேரில்
கலைஞர் படத்தை அழகாய் வைப்போம்.
தண்ணீர் தெளித்து திருமுழுக்காட்டுவோம்.
களவாய்ப் பறித்த பூக்களினாலே மாலைகள் செய்வோம்.
இலை, குழை, கொடி.... என
கைப்படும் பொருளால் சோடனை செய்வோம்.

"அரோகரா" சொல்லித் தேரை இழுப்போம்.

"சோதனை வருகுது... என்ன அங்க கூத்து..."
தடியுடன் அம்மா விரைந்து வருவாள்.
தேருடன் நாங்கள் மாயமாய் மறைவோம்.
மீண்டும்,
அக்கன் வளவில் தேருலா நடக்கும்.

"அரோகரா"

..........

நினைத்தால் இன்று சிரிக்கத் தோன்றும்

— ஜெயா —

www.tamilarangam.net

# தாவீது அடிகளார்

குள்ள உருவம்; குறுகுறுத்த விழிகள்; அவ்விழிகளுக்குத் திரையிட்டு நிற்கும் கண்ணாடி; கருமைக்கும் வெண்மைக்கும் நடுவே தடுமாறிக் கொண்டிருக்கும் தாடி; கத்தோலிக்கத் துறவி என்ற கம்பீரம் தரும் முழுநீள வெள்ளங்கி; இத்தனையும் கொண்ட 'நடமாடும் கலைக் களஞ்சியம்' எனப் பத்திரிகைகளால் வர்ணிக்கப்பட்ட தாவீது அடிகளார் பருத்தித் துறையிலே உள்ள மாவச்சை என்னும் குறிச்சியிலே பிறந்தார். தாவீதுப்பிள்ளை - எலிசபேத் தம்பதிகளுக்கு 1907 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்த இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் டேவிற்.

தாவீது அடிகளார் தமது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலே தொடங்கினார். 1924 ஆம் ஆண்டு 'மெற்றிக்குலேசன் சித்தியடைந்த அடிகளார், 1932 - 1936 காலப்பகுதியில் சரித்திரத்தில் பீ. ஏ. சிறப்புச் சித்தியும், 1948 - 1952 காலப்பகுதியில் எம். ஏ. சித்தியும் அடைந்தார்.

ஆங்கிலம், லத்தீன், கிரேக்கம். டச்சு, ஸ்பானிஸ், இத்தாலி, பிரஞ்சு, ஜேர்மன், லித்தோனியன், போத்துக்கீஸ், டேனிஸ், சுவீடிஷ், நோர்வீஜியன், ரஷ்யன் ஆகிய பதினான்கு ஐரோப்பிய மொழிகளையும், தமிழ், சிங்களம், கிரந்தம், கன்னடம், சமஸ்கிருதம், இந்தி, பாளி, பிராகிருதம், அவெஸ்தான், தெலுங்கு, பிராசி, துளு, கூய், மலையாளம் ஆகிய பதினான்கு ஆசிய மொழிகளையும் எபிரேயம், அஸ்ஸீரியம், அராபியம், மலேய, சுமேரியம் ஆகிய மொழிகளோடு மொத்தம் முப்பத்து இரண்டு மொழிகளைப் படித்துணர்ந்தவர் அடிகளார்.

கத்தோலிக்க துறவியான அடிகளார் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் ஏழை மாணவரை இனங்கண்டு அவர்களுக்கு உதவிபுரிந்தார். படிப்பதற்குப் போதிய இடவசதி இல்லாத மாணவர்களைத் தன்னுடன் கூட இருத்திப் படிக்க வசதிகள் செய்தார். ஏழை - எளியவரிடத்திலே - சேரியிலே - சிறுகுடிசையிலே இறைவனைக்கண்ட குருவாக இவர் திகழ்ந்தார்.

தமது குருவாகிய சுவாமி ஞானப்பிரகாசர் விட்டுச் சென்ற 'ஒப்பியல் அகராதி' என்ற பாரிய பணியின் சீரிய நோக்கத்தினை விரிவான அடிப்படையில் நிறைவேற்றிய தாவீது அடிகளார், தமிழின் முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் ஆராய்ச்சி செய்து கலாநிதிப் பட்டமும் பெற்றார்.

1981 ஆம் ஆண்டு யூன் மாத முதல் நாள் இரவு, அடிகளார் புனித பத்திரிசியார் கல்லூரி மத்தியுஸ் கட்டிட மேல் மாடியில் துயின்றுகொண்டிருந்தார். யாழ் நகரை அதிரவைத்த துப்பாக்கிச் சத்தங்களில் துயில் கலைந்த அடிகளார் மேற்கு நோக்கிப் பார்த்தார். மக்களுக்கு அறிவொளி ஊட்டிய யாழ். பொதுசன நூலகம் எரிந்துகொண்டிருப்பதைக் கண்டார். அவ்வளவுதான்; ஒரு அறிவுக் களஞ்சியத்தின் அழிவைக் கண்ட அறிவுக் களஞ்சியம் அதிர்ச்சியால் அழிந்தது. ஆம், அடிகளார் அதிர்ச்சியால் மரணித்தார். ஒரே இரவில் இரு பெரும் அறிவுக் களஞ்சியங்கள் அழிந்து போயின.

தேவராசா முகுந்தன்

## வீரர்களுக்கு ஒரு வீர வணக்கம்!

தயங்காதீர்கள்!
மரணம் எது வரையோ
அதுவரை சென்று போராடுங்கள்!
வாழ்வு மரணத்தில் இல்லை...
போராட்டத்தில்
புத்துணர்ச்சியாகட்டும்!

வீரர்களே!
ஒரு மாபெரும் வீர வணக்கத்தை
என் தேக உள்ளம்
உங்கள் சிரத்தின் மீது
தழுவிச் செல்லட்டும்!
நீங்கள் வாழப் பிறந்தவர்களல்ல..!
வாழ்க்கைக்குப் பிறந்தவர்கள்!

எத்தனையோ
காய்கள் உதிர்ந்த பின்னும்
சில காய்கள் காத்திருப்பது ஏன்?
நாளைய உலகிற்கான
கனிகளை ஈவதற்கல்லவோ!
வீரர்களே நீங்களும் அப்படித்தான்...!

உங்களுக்கெல்லாம்...
சரித்திரம் உண்டு!
எங்களுக்கு வெறும்
சமாதி தான்!
நீங்கள் எங்களுக்காக
வாழ்பவர்கள்...
நாங்களோ...
எங்களுக்காக வாழ்கிறோம்!

ஒரு கருப்புக் குடையாலே
முகம் மறைத்துக் கொள்கிறோம்!
காரணம்...
உங்கள் போராட்டத்தில்
எங்கள் இரத்தம் குளிர்காய்கின்றன!

தோழர்களே துவண்டிடாதீர்கள்!
இரவென்பது வெகு தூரமில்லை
பகல் பக்கம் வந்தே தீரும்!

பெருமனத்தோடு - ஒரு
வீர வணக்கத்தை
விடியலுக்காய் அனுப்புகிறேன்...
பெற்றுக் கொள்ளுங்கள்!
உங்கள் தன்மானச் சூட்டில்
குளிர்காயும்
ஒரு சகோதரனின்
அன்பு வேண்டுகோள்!

சீ. அருணாசலம், பகாங், மலேசியா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சாள்ஸ் கீலிங் லசிற்றர்

## நவீன ஓவியரோடு ஒரு ஒப்பீடு

சாள்ஸ் கீலிங் லசிற்றர் (Charles Keeling Lassiter) புகழ் மிக்க நவீன ஓவியர். இவர் அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் 1926ம் ஆண்டு பிறந்தார். யேல் பல்கலைக்கழகத்தில் சமூகவியலுக்கும், நியூயோர்க் பல்கலைக் கழகத்தில் கலைக்கல்விக்குமான பட்டங்களைப் பெற்றார். பின்னர், ஓவியம் வரைதல், சிற்பம் செதுக்குதல் ஆகியவற்றை ஸ்கோவீகன் (Skowhegan) பள்ளிக்கூடத்தில் பயின்று, ஓவியம் வரைதலுக்கான 2ம் பரிசைப் பெற்றுக்கொண்டார். சிறிது காலம் சித்திர ஆசிரியராகக் கடமை புரிந்த லசிற்றர் பின்னர், தன் வாழ்நாள் முழுமையிலும் ஓவியம் வரைதலிலும், கவிதை எழுதுவதிலும் ஈடுபட்டார். ஆரம்பத்தில் ஏனைய சித்திர விற்பன்னர்களைப் பின்பற்றிய இவர், பின்னர் தனக்கென ஒரு பாணியையும், தனக்கென்றொரு சித்திர மொழியையும் (Pictorial Language) வகுத்துக் கொண்டார். புதிய புதிய உண்மைகளைத் தேடிக் கண்டுபிடிப்பதையும், கவிதைத் தன்மையையும் தனது சித்திரங்களுக்குள் புகுத்திய லசிற்றர், அவற்றை முரண், அரிப்பு (Causticity) ஆகிய உத்திகள் மூலம் வெளிப்படுத்தினார். மக்கள் சமூகத்தையும், அதன் நாகரிகத்தையும் புலப்படுத்துவதாக அவரது சித்திரங்கள் இருந்தன. மனிதமே தனது கருப்பொருள் எனக் கூறியுள்ளார். அவரது சித்திரக் கண்காட்சிகள் நியூயோர்க்கிலும், சுவிற்சலாந்து



ஜெனிவாவிலும் நிரந்தரமாக வைக்கப்பட்டுள்ளன.

இவரது படைப்புக்கள் தற்கால சமூகத்தையும், அமெரிக்க வாழ்க்கையையும் கேலியாகச் சித்தரித்துக் காட்டுகின்றன. (பழத்தைப் புழு) அரிப்பது போன்ற தோற்றத்துடனும், மூர்க்கத்தனத்துடனும் அமெரிக்க மக்களின் முரண்பட்ட வாழ்க்கை 'மரண நடனமாக' இவரது சித்திரங்களில் வெளிப்படுகின்றன. தனது சக குடிமக்களினை கோட்டுச் சித்திரமாகவும், வர்ணச் சித்திரமாகவும் வடிப்பதிலேயே இக் கலைஞனின் கலை வாழ்க்கை கழிந்துள்ளது.

இவரது சித்திரப் படைப்புக்களில் காணப்படும் பண்புத்தன்மை (Abstract), கலந்துவரும் யதார்த்த வாதம் (Realism), கேலிச் சித்திரத் தன்மை (Caricature), எண்ணக் கருத்து என்பன, அவர் ஒரு புதிய மனிதனைக் கண்டு பிடிக்கும் தேடுதலில் ஈடுபட்டுள்ளார் என்பதைச்

லசிற்றர்: 'கவிஞன்'



www.tamilarangam.net

சுட்டுகின்றன. ஆனால் இக்கண்டு பிடிப்புக்கான தேடுதல் வேண்டுமென்றே விகாரப்படுத்தப்பட்டு, பண்புத்தன்மையாக நிலைமாற்றப்பட்டு, கோடுகளாலும், நிறக்கலவைகளாலும் கலை வடிவம் பெறுகின்றது. இந்தக் கோடுகளும், உருவங்களும் ஒன்றோடு ஒன்றினுள் கலந்து மறைந்து போதலும் இவரது சித்திரங்களில் நிகழ்கிறது. இத்தன்மைகளின் காரணமாகவே இவரது சித்திரங்களை அதீத யதார்த்தவாதப் (Surrealism) படைப்புக்கள் என கலை விமர்சகர்கள் கூறுவர். இவ்வாறு வரையறுத்துப் பெயரிடுதலையும் லசிற்றர் வெறுக்கவே செய்கிறார். இவரது படைப்புக்களைச் சுருக்கமாகச் சொல்லப் போனால், அவரது ஆழ்மன உலகிலிருந்து புறப்படும் எண்ணங்களே, கேலிச்சித்திர வடிவில் உயிர் பெறுகின்றது. படைப்பின் மையக் கரு (Theme) படைப்பு வெளிப்படுத்தும் உணர்வு (Texture) படைப்புக் கான பொருட்கள் ஆகியன ஒன்றாகிக் கலந்தே அவரது ஆக்கம் படைக்கப்படுகின்றது. அவர் பயன்படுத்தும் பொருட்கள், நீர், அக்றிலிக், நெய் நிறக்கலவைகள், பிசின், நிறக்கட்டிகள், மைகள், பென்சில் என்பனவாக அமைகின்றன.

மனித மனத்தின் ஆழத்தை தனது சித்திரங்களில் வெளிப்படுத்துவதே தனது வேலை என்கிறார் லசிற்றர். கடந்த காலத்தை ஆராய்ந்து, தற்கால உலகிலிருந்து தப்பி, புதிய உலகைத் தேடும் முயற்சியே அவரது படைப்புகளாகும்.

தனது ஆளுமையில் தங்கி நிற்கவேண்டும் என்று கூறும் லசிற்றர், "உன்னைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் என்பதில்தான் அனைத்தும் தங்கியுள்ளது. இதுவே என்னைக் கீறவும், நிறந்தீட்டவும் செய்கிறது. எதிர்காலத்தை நோக்கியவாறு, இதனையே சாகும்வரை செய்துகொண்டிருப்பேன்.

அதேவேளை கடந்த காலத்தையும் நீண்ட பார்வையால் அளத்தல் வேண்டும். எதிர்காலம் என்பது கடந்தகாலத்தின் மீள் வருகையே." என்கிறார்.

எமது எரிமலை ஓவியர் மகா, உள்மனக் கருத்துக்களை ஓவியத்தில் வெளிப்படுத்தல், கேலி ஓவியத் தன்மை (Caricature), பண்புத்தன்மை (Abstract), விகாரப்படுத்தல் (Distortion), அதி யதார்த்தவாதம் (Surrealsm), கற்பனைகளை ஓவியத்தில் இணைத்தல் (fantastic art), முரணான, சார்பான பல்வேறு அம்சங்களை ஒன்றாகக் கலக்கவிடல் போன்ற உத்திகளை (techniques) தனது ஓவியங்களில் கையாண்டுள்ளார். இத்தகு உத்திகள் லசிற்றரின் ஓவியங்களில் நிறைறையக் காணப்பட்டமையே- இக்கட்டுரை வரைதலுக்குத் தூண்டுதல் அளித்தது. நிறக்கலவைகள், பல்வேறு சித்திரக் கலையாக்கப் பொருட்கள், பல்வேறு விதமான தாள்கள் என்ற ரீதியில்- லசிற்றர் நிற முரண்களை வெளிப்படுத்தும் வண்ண ஓவியங்களை உருவாக்கியிருந்தார். ஆனால், மகாவின் நிற ஓவியங்கள் பெரிதாக எமக்குக் கிடைக்கப்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**வளவன்**

மகா: 'மாவீரர்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# தடுமாற்றம்

நேரம் ஒரு மணி இருக்கும். எனக்கோ சரியான பசி. சிற்றுண்டிச்சாலை ஒன்றுக்குள் சென்று இருக்கையில் அமர்ந்தேன். சாப்பிட்டபின் உணவுக்கான கட்டணத்தைச் செலுத்த முற்பட்டேன். அப்போது, எனது மேசையில் உடனிருந்தவன் எழுந்து நின்றான்.

"சேர், உன்னை விரும்பாத வர்கட்கு மத்தியில் பிடிவாதமாக உன் சகவாசத்தை வைத்துக்கொள்ள விரும்புகிறாயா?" என வினவினான்.

"இல்லை, நான் இங்கு சாப்பிடவே வந்தேன்."

"இது சமூக சமத்துவத்தை வலியுறுத்தவே செய்யப்பட்ட செய்கை என நீ எச்சரிக்கை அடையவில்லையா?"

"சேர், அப்படி எதுவுமே இல்லை. இது பசிதான். அதனாலேயே இங்கு சாப்பிட்டேன்."

அன்றைய வேலைகள் எல்லாம் முடிவுற்ற பின்பு, இசை அரங்கு ஒன்றை நாடிச் சென்றேன். எனது இருக்கையிலே அமர்ந்ததும், ஏற்கனவே பக்கத்து நாற்காலியில் இருந்த சீமாட்டி கூனிக்குறுகுவதைக் கண்டேன். அவள் அங்கிருந்து விலகிப் போய்விடவேண்டும் என்ற மன நிலையில் இருந்தது தெரிந்தது.

"மன்னிக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்." என்றேன்.

"நீ வேண்டப்படாத இடத்தில் இருப்பதையிட்டு சந்தோசப்படுகிறாயா?" என, வேண்டாவெறுப்பான குரலில் கேட்டாள்.

"அப்படி எதுவுமே இல்லை." எனக் கூறினேன்.

"சரி, ஆனால் நீ இங்கு வேண்டப்படும் ஒருவனல்ல!"

எனக்கு ஆச்சரியமாய் இருந்தது.

"நீங்கள் பிழையாக எடுத்துக் கொண்டு விட்டீர்கள். நிச்சயமாக எனக்கு இசையில் அதிக பிரியம். அத்துடன் இசையும் கூட தன்னை நான் ரசிப்பதை விரும்பும் என்ற நினைப்பு, எனக்கு மிகுந்த களிப்பைக் கொடுக்கக்கூடியது." என்று கூறினேன்.

அவள், "காவலாளியே![1] இது சமூக சமத்துவத்தைக் குறிக்கிறது என நினைக்கிறாயா?" என்றாள்.

"இல்லை சீமாட்டியே, இதுதான் 'பீத்தோவானின்'[2] ஐந்தாவது சிம்பனியின் இரண்டாவது அசைவு" என்றேன்.

இசைக் கச்சேரியின் பின், நான் ஏற்கனவே எனது பெட்டி படுக்கைகளை அனுப்பி வைத்திருந்த பயணிகள் தங்கும் விடுதியை அடைந்தேன். அங்கிருந்த 'கிளாக்கன்' என்னைத் திட்டித் தீர்த்தான்.

"உனக்கு இங்கே என்ன வேண்டும்?"

"நான் சற்று இளைப்பாற விரும்புகின்றேன்."

அவன், "இது வெள்ளையருக்கான விடுதி" என்றான். நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். இவ்வகையான பல நிற வேற்றுமைகள், மிகப்பெரிய அளவில் சுத்தம் செய்யப்படவேண்டி உள்ளன.

"எனக்கு உள்ளே செல்வதற்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை" என்றேன்.

"அனால், நாங்கள் ஆட்சேபிக்கிறோம்" என்றான் அவன்.

டொக்டர் வில்லியம் எட்வேட் புறுகாடிற் டியூ பொயிஸ் (1868-1963): அமெரிக்க சிவில் உரிமை இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுபவர். கறுப்பு இனத்தவர்களின் முன்னேற்றத்துக்கான தேசிய அமைப்பு (N-A-A-C-P) உருவாக முன்னின்று உழைத்தார். 'ஒன் பீயிங் கிரேசி' என்ற தலைப்பில் எழுதப்பட்ட இச்சிறுகதை 1907 இல் பிரசுரிக்கப்பட்டபின், பல முக்கிய சிறுகதைத் தொகுப்புக்களில் இடம்பெற்றுள்ளது. 1963 இல் கயானாவில் 'பொயிஸ்' மரணமடைந்தார்.

தமிழில் சு. மகேந்திரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஏன் அப்படி?" என நான் ஆரம்பிக்க, அவன் இடைமறித்துச் சொன்னான்....

"நாங்கள் நீக்கிரோக்களை அனுமதிப்பதில்லை. எமக்கு சமூக சமத்துவம் தேவையற்றதொன்று"

நான் யோசனையுடன் ரயிலை நாடிச் சென்றேன். ஓர் 'உறங்கு படுக்கை'யைப் பதிவுசெய்து 'டெக்சாஸ்' ஊடாகச் செல்ல நினைத்தேன். இந்த நகரத்தின் மீது எனக்குச் சிறிது சலிப்பு ஏற்பட்டிருந்தது.

"உனக்கு உறங்குபடுக்கை எதுவும் இங்கு ஒதுக்கமுடியாது."

"இல்லை, நான் அதனை ஓரிரு தினங்களுக்கு வாடகைக்கு அமர்த்தவே விரும்புகின்றேன்" என்றேன்.

"டெக்சாசில் உனக்கு அதனை அவர்கள் விற்பார்கள். அது சமூக சமத்துவத்தை குறிக்கிறது என அவர்கள் நினைக்கிறார்கள்."

"நீங்கள் செய்வது காட்டுமிராண்டித்தனமானது" என்றேன். 'டெக்சாஸ்' வரை நடந்தே செல்வது எனத் தீர்மானித்தேன்.

நடந்து செல்லும் போது, இன்னோர் வழிப்போக்கனைச் சந்தித்தேன். என்னைக் கண்டவுடன், ரோட்டின் மறுபக்கமாக அவன் சென்றான். அங்கே ஒரே சேறும் சகதியுமாக இருந்தது. நான் அதற்கான காரணத்தைக் கேட்டேன்.

அவன், "நீக்கிரோக்கள் அழுக்கானவர்கள்; அதனால்தான்." என்றான்.

"சேறும் அழுக்குடையது தானே" என்றேன். அத்துடன், "உன்னைவிட அழுக்குடையவனாக நான் இன்னும் ஆகவில்லையே!"

"ஆயினும் நீ ஓர் 'நீக்கிரோ' இல்லையா? அது சரிதானே" என்றான்.

"எனது பாட்டன் அப்படித் தான் அழைக்கப்பட்டான்"

அவன், "அப்படியானால் சரிதான்" என வெற்றிக்களிப்புடன் கூறினான்.

"நீ தென்பகுதியைச்[3] சேர்ந்தவனா?" என உறுதியான குரலில் இனிமையாகக் கேட்டேன்.

அவன் "சந்தேகமில்லாமல்" என்று உறுமினான். "அங்கிருந்து கொண்டு பட்டினியால் சாகிறோம்" என்றான்.

"கட்டாயமாக, நீங்களும் நீக்கிரோக்களும் சேர்ந்து பட்டினிக்கெதிராக வோட்டளித்து, அதனை அகற்ற வேண்டும் என்ற நினைப்பில் இருந்து, எனக்கு விடுபடமுடியவில்லையே" என்றேன்.

"நாங்கள் அவர்களை வோட்டுப் போட விடமாட்டோம்"

"ஏன் நீங்கள் விடமாட்டீர்கள்?"

"அவர்கள் வாக்குப் போடுவதற்கு உரிய அறிவு படைத்தவர்கள் அல்ல"

"ஆயினும் பார்க்கும் போது நான் உன்னை விட அறிவு குறைந்தவனாகத் தோன்றவில்லையே" என்றேன்.

"ஆயினும் நீ ஓர் நீக்கிரோ தானே!" என்றான்.

"உண்மை. நீ என்ன நினைக்கிறாய் என்பது இப்போது நிச்சயமாகப் புரிகிறது"

அவன், "மிகவும் சரி" என்று கூறினான். அதில் தொடர்ச்சியான ஆர்வம் செறிந்த, வெற்றித் தொனிக்குரிய அடையாளம் தெரிந்தது.

"மேலும், எனது சகோதரி ஓர் நீக்கிரோவை மணம் புரிவதை விரும்பமாட்டேன்" என்றான்.

நான் அவனின் சகோதரியைக் காணவில்லையாதலால், "அவளே இல்லை என்று சொல்லட்டும்" என, வெறுமனே முணுமுணுத்தேன்.

"கடவுள் ஆணையாக அவள் ஆம் என்று கூறினாலும், அவளை மணக்க முடியாது" என்றான்.

"ஆனால் .... ஆனால் நான் அவளை மணக்க விரும்பவில்லை" எனப் பதில் அளித்தேன். அவன் தனிப்பட்ட முறையில் தாக்கியது, என்னை சிறிது நிலைகுலைய வைத்திருந்தது.

"ஏன் முடியாது?" என, இவ்வுரையாடலின் போது முன்பு இல்லாத வகையில் காட்டுக் கூச்சலான தொனியில் கேட்டான்.

"ஏனெனில் நான் ஏற்கனவே மணமானவன்; எனது மனைவியைப் பெரிதும் விரும்புகிறேன்." என்றேன்.

"அவளும் ஒரு நீக்கிரோ தானே?" எனச் சந்தேகத்துடன் கேட்டான்.

"அவளது பாட்டி அப்படித்தான் அழைக்கப்பட்டாள்." என, மறுபடியும் கூறினேன்.

"அப்படியாயின் நல்லது" என வினோதமான முறையில் தொடர்பின்றிக் கத்தினான்.

நான் உரையாடலை ஒரு முடிவுக்குக் கொண்டுவர நினைத்தேன்.

"நீ போகலாம். உனக்கா அல்லது எனக்கா புத்தித் தடுமாற்றம் எனத் தெரியவில்லை" என்றேன்.

அவன் "இருவருக்கும்தான்" எனக் கூறியபடி சேற்றுக்குள்ளால் துரிதமாக நடந்தான்.

**அடிக்குறிப்புக்கள்:**

1. அமெரிக்காவில் பெரும்பாலான காவலாளிகள் நீக்கிரோக்களாக உள்ளதால், நீ வெளியே நிற்கவேண்டியவன் என்ற கருத்தில் கூறப்பட்ட சொல்.

2. பிரபல ஜேர்மனிய இசைக் கலைஞன்.

3. அமெரிக்காவின் தென் பகுதிகளில் நிற ஒடுக்குமுறை வடபகுதிகளில் உள்ளதைவிடத் தீவிரமானது.

www.tamilarangam.net

# இத்தாலியும் இன்பத் தமிழும்

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' எனப் பாரதியால் விதந்தோதப்பட்டது தமிழ் மொழி. பாரதி இக்காலக் கவிஞன். அவன் பல மொழிகளை அறிந்தவன். அந்த மொழி அறிவின் துணையோடுதான் இவ்வாறு கூறும் துணிவு அவனுக்கு வந்திருக்கிறது. அவனது கூற்றை மறுத்துக் கூறவும்-எவரும் முன் வரவில்லை. எனவே தமிழ்மொழி மற்றைய மொழிகளை விட இனிமையானது என்பதை எண்ணி நாம் பூரிப்படைதல் வேண்டும்.

இப்படியான எமது இன்பத் தமிழை விரும்பிக் கற்றனர் பல அறிஞர். எமது மொழியின்பால் ஆராக் காதல் கொண்டே அவர்கள் கற்றார்கள். கற்றதோடு மட்டும் நின்றுவிடவில்லை. நன்றிக்கடனாகப் பலவற்றைத் தமிழ் அன்னைக்குச் செய்தார்கள். அவர்களது இந்தத் தமிழ்த் தொண்டானது யாவராலும் ஏற்றிப் போற்றப்படுகின்றது. இந்த ரீதியில் மேலை நாடான இத்தாலியும் எமது தமிழ் வளர்ச்சிப் பாதையில் தன்னை இணைத்துக் கொண்டதை நாம் காண்கின்றோம்.

கிறிஸ்தவ மதப்பணியினை முன்னிட்டு 1680ல் தமிழ்நாட்டுக்கு வந்தவர்தான் பாதிரி பெஸ்கி என்பவர். இவர் முப்பது வயதில் தமிழ்நாட்டுக்கு வந்து ஏறக்குறைய முப்பத்தேழு வருடம் மதப்பணியில் ஈடுபட்டார். இவர் தமிழை விரும்பிக் கற்றார். இதனால் இவருக்குத் தமிழ் மொழியில் ஆழ்ந்த புலமை ஏற்பட்டது. இத்தாலி, கிரேக்கு, லத்தீன், எபிரேயம் ஆகிய மொழிகளிலும் பாண்டித்தியம் உடையவராகவும் விளங்கினார். இவரது பன்மொழியாற்றல்- தமிழ் மொழியில் இவர் படைப்புக்களைப் படைப்பதற்கும் பயன்பட்டது எனலாம்.

தமிழ்மொழியைப் பொறுத்தவரை பல்வேறு வகைகளில் இவரது தொண்டுகள் அமைந்து காணப்படுகின்றன.

1. தமிழ் எழுத்துத் திருத்தம்
2. செய்யுள் நூல்கள் ஆக்கம்
3. உரைநடை நூல்கள் ஆக்கம்
4. மொழிபெயர்ப்புப் பணி
5. இலக்கண நூல்கள் ஆக்கம்
6. அகராதி நூல்கள் ஆக்கம்

தமிழ் எழுத்துக்களைப் பண்டைக்காலத்தில் எழுதும் பொழுது அவற்றில் ஓசை குறைவாக வரும் இடங்களுக்கு அந்த எழுத்துக்களின் மேல் புள்ளிவைப்பது ஒரு வழக்கமாக இருந்தது. 'க' என்னும் எழுத்துக்கு மாத்திரை ஒன்று. அதே எழுத்தின் மேல் புள்ளியை இட்டால் அந்த எழுத்து 'க்' என்று மாறுகிறது. உச்சரிப்பிலும் மாற்றம் ஏற்படுகிறது. அது மட்டுமல்ல- ஒரு மாத்திரை, புள்ளி இடப்பட்டதால் அரை மாத்திரையாகிக் குறுகி ஒலிக்கிறது. இந்த வகையில் 'எ' 'ஒ' என்னும் இரண்டும் புள்ளி பெற்றால் அவை குறிலாகவும்-புள்ளி பெறாத நிலையில் அவை நெடிலாகவுமே உச்சரிக்கும் வழக்கம் காணப்பட்டது. நாளடைவில் இவற்றுக்குப் புள்ளியிட்டு எழுதும் வழக்கம் மறந்துபோன நிலையில் இவற்றினது குறில்- நெடில் வித்தியாசங்களை அடையாளம் காண்பது

**ம. ஜெயராமசர்மா**

சிக்கலாகிவிட்டது. இந்தச் சிக்கலுக்குத் தக்க பரிகாரம் கண்டவர் இத்தாலியப் பாதிரியார் 'பெஸ்கி' ஆவார். இவரால் இப்புள்ளி இடும் முறை அகன்றது. அதற்குப் பதிலாக 'எ' எழுத்தின் கீழ்ப் பகுதியில் ஒரு கோடும், 'ஒ' என்ற எழுத்தில் ஒரு சுழியும் புதிதாக ஏற்படுத்தப்பட்டது. அது மட்டுல்ல- கெ, கொ என்ற எழுத்துக்களில் காணப்படுகின்ற ஒற்றைக் கொம்புகளை- மேலே சுழித்து இரட்டைக் கொம்புகளாக்கி- கே, கோ என்ற உச்சரிப்பு வரத்தக்கதாக- இன்றுவரை அந்த அமைப்பிலேயே தொடர்ந்து நாங்கள் பின்பற்றக்கூடியதாக- எழுத்து முறையில் திருத்தம் செய்தார். ஏ, ஓ, கே- என்ற வடிவமைப்பைத் தமிழ் எழுத்தில் இடம்பெறச் செயதமையைத் தமிழர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் எழுத்தில் திருத்தம் செய்த இந்தப் பெரியார் தமிழ் இலக்கிய வரலாற்றில்- அதாவது காப்பிய இலக்கியத்திலும் தனது ஆற்றலைக்காட்ட விளைந்தார். இதன் பயனாக 3615 விருத்தப் பாக்களைக் கொண்டு 'தேம்பவானி' என்னும் காப்பியம் எழுந்தது. இது மூன்று காண்டங்களையும் 36 படலங்களையும் கொண்டதாக அமைக்கப்பட்டது. திருக்குறளின் தென்னியநயம், சிந்தாமணியின் செழுஞ்சுவை, கம்பராமயணத்தின் கவியின்பம் யாவும் இந்த தேம்பவானியில் தேம்பிக் கிடக்கக்கூடியதாக இந்த இத்தாலியப் பாதிரியார் படைத்தளித்தார். இந்தச் செழுமிய

நூல்- தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றப்பட்டது. அவ்வேளை, இவரது தமிழ் ஆற்றலை மெச்சிய புலவர்கள் இவருக்கு 'வீரமாமுனிவர்' என்ற பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தார்கள் என அறியமுடிகிறது. அது தொடக்கம் இவ் இத்தாலியப் பெருமகனை யாவரும் 'வீரமாமுனிவர்' என்று அழைத்து வரலாயினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதைவிட- 101 பாக்களைக் கொண்ட 'திருக்காவலூர் கலம்பகம்', 'கித்தேரி அம்மாள் அம்மானை', 'அடைக்கல நாயகி வெண்கலிப்பா' போன்றவற்றையும் ஆக்கி அளித்தார். தேவாரப் பதிகம் இத்தாலியப் பெருமகனைக் கொள்ளை கொண்டது. அதன் காரணத்தால் 'கருணாம்பரப்பதிகம்' உருவானது. மேலும் இவரால் பல பாடல்கள் இலக்கியநயம் கனியப் பாடப்பட்டன. "தமிழ்ச் செய்யுள் தொகை" என்ற தொகுப்பின் மூலமாக தமிழிலுள்ள பல நயமான நீதி நூல்களைத் தெரிந்து தொகுத்துக் காட்டினார். இது ஒரு சிறந்த வழிகாட்டலாக அமைகிறது என்பது அறிஞர் கருத்தாகும்.

செய்யுள் இயற்றிச் செந்தமிழுக்கு அணிசெய்த இவ்வறிஞர் உரைநடை இலக்கியத்தையும் விட்டு வைக்கவில்லை. முதன்முதலாகப் பாமரரும் விளங்கக்கூடியதாக- இலகுவான- வசனநடையில் "அங்கத" இலக்கியத்தைத் தோற்றுவித்த பெருமை இவரையே சாரும். "பரமார்த்த குரு கதை" என்ற இந்த நூலைப் பண்டிதர்கள் கூட ஏற்றுக்கொண்டார்கள் என்றால் இவரின் ஆற்றலை வியக்காது இருக்கமுடியுமா? தாம் சார்ந்த கிறிஸ்தவம் சம்பந்தமாகப் பல உரைநடை நூல்களையும், துண்டுப் பிரசுரங்களையும்- பரமார்த்த குரு கதையைத் தொடர்ந்து ஆக்கி வெளியிட்டார். இந்தவகையில் வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம், பேதகம் மறுத்தல், லூத்தர் இனத்தியல்பு என்பன குறிப்பிடத்தக்கனவாகும்.

ஆக்க இலக்கியம் படைத்த

www.tamilarangam.net

## 'புறப்படுங்கள் போருக்கு'

**எம் மண்ணையும் கபளீகரம் செய்து மக்களையும் அடிமைகளாக்க முனைந்து நிற்கின்ற சிங்கள பேரினவாத கூலிப்படைகளை எல்லையில் வைத்தே துவம்சம் செய்து விரட்டி அடித்து எமது மண்ணை மீட்டெடுக்கின்ற போரிலே அனைவரும் இணைந்து போராடவேண்டும் என்ற கருத்தை விளக்கும் வகையில் விடுதலைப் புலிகளின் பண்பாட்டுக் கழக தீவகப் பகுதியினரால் 'புறப்படுங்கள் போருக்கு' எனும் தெருக்கூத்து தற்போது பரவலாக நடாத்தப்பட்டு வருகின்றது.**

இப்பெருமகன்- மொழிபெயர்ப்புத் துறையிலும் முன்னின்று உழைத்தார். இந்தத் துறையில் இந்த மொழி பெயர்ப்புக்கு இலக்காக இருந்தது வள்ளுவரின் வான்மறையாகும். மேலைநாட்டவர் பலரும் வள்ளுவத்தின் பால் பெருவிருப்புக் கொண்டிருந்தனர் என்பது பொதுவான உண்மையாகும். குறளில் அமைந்திருந்த- அறத்துப்பால், பொருட்பால் ஆகிய இரு பகுதிகளையும்- லத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார். இம்முயற்சியானது குறளின் அருமையையும் மேனாட்டாரும் உணர்ந்துகொள்ள உதவியது எனலாம்.

வீரமாமுனிவரின் பண்பட்ட உள்ளம்- தமிழ் அன்னைக்கு மேலும் ஏதாவது பயனுள்ள பணியைச் செய்யவேண்டுமென விளைந்தது. இதன் பயனாக- தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தைப் பிரதிபலிக்கும் வகையில் 'தொன்னூல் விளக்கம்' என்னும் இலக்கண நூல் உருப்பெற்றது. இதனைத் தமிழ் அறிஞர் "குட்டித் தொல்காப்பியம்" என ஏற்றிக் கொண்டாடினர். உலக வழக்கில் காணப்படும் தமிழ்மொழி இலக்கணத்தைக் கூறும் "கொடுந் தமிழ் இலக்கணம்" என்னும் நூலை லத்தீன் மொழியில் இவர் எழுதினார்.

இலக்கணத்திலே ஆர்வம் கொண்டு உழைத்த இவர்- மொழித் தொடர்புக்கான ஊடகம் என்ற முறையில் அகராதி ஆக்கத்திலும் தனது நுண்மான் நுழை புலத்தைக் காட்டினார். இந்தவகையில் தமிழில் இவரால் படைக்கப்பட்டதே "சதுர் அகராதி" ஆகும். பின்னாளில் எழுந்த அகராதிகளுக்கெல்லாம் வழிகாட்டியாகவும்- முதல் நூலாகவும் அமைந்தது என்பது மனங்கொள்ளத் தக்கதாகும். இதைவிட "தமிழ் லத்தீன் அகராதி", "போர்துக்கீசியம்- தமிழ்- லத்தீன் அகராதி"யும் இவரது படைப்பேயாகும். தமிழ்- இலத்தீன் அகராதியில்- 900 தமிழ்ச் சொற்களுக்கு லத்தீன் மொழியில் பொருள் விளக்கம் எழுதப்பட்டிருக்கிறது. இது முதல் நடந்த முயற்சி என்பதால் பலரால் பாராட்டுக்கு உரியதாகி நிற்கின்றது.

எங்கிருந்தோ வந்த ஒருவர்- எமது அன்னை மொழியாம் தமிழ் மொழியின் அருமை பெருமைகளை உணர்ந்து- அதனைப் பற்றோடும், பாசத்தோடும் படித்தார். படித்ததோடு நிற்கவில்லை. தனது ஆராக் காதலால் நாட்டு வேற்றுமையை மறந்தார். தான் ஒரு இத்தாலியனாக இருந்தும் இன்பத் தமிழனாகத் தன்னை ஆக்கிக்கொண்டார். இதனால் இத்தாலியும் இன்பத் தமிழும் இணைந்தன. பெஸ்கி என்ற பாதிரி- தைரியநாதராகி- வீரமாமுனிவராகி- வளர்ந்த வரலாறு தமிழோடு கலந்த வாழ்வாகும். இப்பெருமகனால் மேலை நாடான இத்தாலியும் கீழை நாடான தமிழ்நாடும் இணைந்து கொண்டன.

**நன்றி: மாற்றம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# போராட்டக் களத்தில் பூநகரி

## ஒரு வரலாற்றுப் பார்வை

ப. புஸ்பரட்ணம்

சமகால உள்நாட்டு, வெளிநாட்டு மக்கள் தொடர்பு ஸ்தாபனங்களில் முதன்மைப் படுத்தப்பட்ட செய்திகளில் ஒன்றாக பூநகரிச் சமர் இடம் பெற்றது. இச்சமரின் விளைவுகள் பற்றிய மதிப்பீடுகள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் கடந்த கால இலங்கைத் தமிழர் வரலாற்றிலும், தமிழ்- சிங்களப் போராட்ட வரலாற்றிலும் பூநகரிப் பிராந்தியம் பெற்ற முக்கியத்துவத்தை ஆராய்வது இச்சிறு கட்டுரையின் நோக்கம் ஆகும்.

வட இலங்கையில் கல்முனை தொட்டு ஆலடி வரையிலான ஒடுங்கிய நிலப்பரப்பினையும், நாகதேவன்துறை தொட்டு மாதோட்டத்தில் வட எல்லை வரையிலான மணல் நீட்சிப் பிரதேசத்தையும் கொண்ட பிராந்தியம் பூநகரி எனப் பொதுவாக அழைக்கப்படும். இலங்கையின் பெருநிலப் பகுதியையும், யாழ்ப்பாணக் குடாநாட்டையும் இணைக்கும் தொடக்க வாயிலாக பூநகரி அமைந்திருப்பதனால் ஒரு பிராந்தியத்தில் இருந்து இன்னொரு பிராந்தியத்தில் ஏற்படும் அரசியல், பண்பாட்டுத் தாக்கங்களை முதலில் உள்வாங்கிக் கொள்ளும் இடமாக இப்பிராந்தியம் விளங்கி வருகின்றது. ஆதிகால வரலாற்றில் வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பால் யாழ்ப்பாணக் குடாநாடு சிறப்புற்று விளங்கினாலும் அரசொன்றை நடத்துவதற்கான நிலையான பொருளாதாரம் வன்னிப் பிராந்தியத்திலேயே இருந்துள்ளது. இதனால் பூநகரி யாருடைய ஆதிக்கத்திற்குள் இருக்கின்றதோ அவர்களாலேயே குடாநாட்டை ஆளமுடியும் என்ற நிலை காணப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சியிற் புதிய போக்குவரத்துப் பாதைகள் அமைக்கப்படுவதற்கு முன்னர் குடாநாட்டிற்கும் இலங்கையின் பெருநிலப் பகுதிக்கும் இடையே மூன்று போக்குவரத்துப் பாதைகள் பயன்படுத்தப்பட்டன.

ஒன்று: கிளாலிக் கடலில் நீரேரியூடான எழுதுமட்டுவாள், கட்டைக்காடு ஊடான கடல், தரைப் போக்குவரத்து.

இரண்டு: நாகதேவன்துறைக்கும் கச்சாய் துறைமுகத்திற்கும் இடையிலான கடற்பாதை.

மூன்று: பூநகரியில் உள்ள கல்முனைக்கும் கொழும்புத்துறைக்கும் இடையிலான போக்குவரத்து.

இப்போக்குவரத்துப் பாதைகள் ஆதிகாலம் தொடக்கம் ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரை முதன்மை பெற்றிருந்ததற்கு வரலாற்று ஆதாரங்கள் பல காணப்படுகின்றன.

மேலும் பூநகரியின் மேற்குக் கடற்கரையோரமாக அமைந்த துறைமுகங்கள் தமிழ்நாட்டிற்கு நேர் எதிரே மிகக் கிட்டிய தூரத்தில் அமைந்திருப்பதினால் தமிழ் நாட்டில் காலத்துக் காலம் தோன்றி வளர்ந்த பண்பாட்டு அலைகளை முதலில் உள்வாங்கிக்கொண்ட இடங்களில் ஒன்றாக பூநகரி விளங்கிற்று. இதை உறுதிப்படுத்தும் வரலாற்றிற்கு முற்பட்ட காலத் தொல்லியற் சின்னங்கள் பூநகரியில் உள்ள கல்முனை, மண்ணித்தலை, வெட்டுக்காடு, பள்ளிக்குடா, ஈழஊர், வீரபாண்டியன் முனை ஆகிய இடங்களில் செறிவாகக் கண்டுபிடிக்கப்பட்டமை இங்கு நினைவு கூரத்தக்கன. வரலாற்றுத் தொடக்க காலத்தில் தமிழ் நாட்டுடன் ஏற்பட்ட கிரேக்க, ரோம, அரேபிய, சீனத் தொடர்புகள் சமகாலத்தில் பூநகரியிலும் ஏற்பட்டிருந்தற்கு உறுதியான பல தொல்லியற் சின்னங்கள் கிடைத்துள்ளன. கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குரிய கிரேக்கநாட்டவரான தொலமி என்பவர் வரைந்த இலங்கைப் படத்தில் குறிப்பிட்டுள்ள புதுக்கி என்ற இடம் பூநகரியையும், தலைக்கோரி என்ற இடம் பூநகரியிலுள்ள கல்முனையையும் குறிப்பதாக முதலியார் இராஜநாயகம் குறிப்பிட்டுள்ளார்.

வட இலங்கை வரலாற்றில் இவ்வாறான முதன்மை பெற்ற பூநகரி தொன்மையான தொடர்ச்சி குன்றாத தமிழர் நாகரிகம் வளர்ந்த பிராந்தியம் என்பதற்கும் அண்மையில் அங்கு பல சான்றுகள் கிடைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

துள்ளன. சங்ககாலத்தை ஒத்த திராவிடப் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் செறிவாக வாழ்ந்ததற்கு நிறைவான பல ஆதாரங்கள் கிடைத்திருப்பதோடு, அப்பண்பாட்டு வழிவந்த மக்கள் இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்து தமிழையே தமது தாய் மொழியாகக் கொண்டிருந்தனர் என்பதற்குப் பல சான்றாதாரங்கள் கிடைத்துள்ளன. அண்மையில் அங்கு கிடைத்த சாசனம் ஒன்றை ஆய்வுசெய்த தமிழ்நாட்டின் முதன்மைச் சாசனவியலாளரான மகாதேவன் அவர்கள் இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் சங்ககாலத்தை ஒத்த வேளீர் என்ற சிற்றரசர் பூநகரியில் ஆட்சிசெய்ததாக தினமணி என்ற பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளார். அநுராதபுரத்தில் நாற்பத்தி நான்கு ஆண்டுகள் நீதி தவறாது ஆட்சி செய்த எல்லாளன் என்ற தமிழ் மன்னனின் சாதனைகள் பௌத்த மத வரலாற்றைக் கூறும் பாளி இலக்கியங்களில் ஓரங்கட்டப் பட்டதாகக் கூறும் பாக்கர் என்ற ஆங்கிலேய அறிஞர், எல்லாளனின் சாதனைகளில் ஒன்று பூநகரியின் தென்னெல்லையில் உள்ள வவுனிக் குளம் எனக் குறிப்பிட்டுள்ளார். இதற்கு மேலும் ஆதாரமாக ஆதியில் இப்பிராந்தியத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்ததற்கான சின்னங்களை எடுத்துக்காட்டியுள்ளார்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட பக்தி இயக்கத்தின் விளைவால் இலங்கையில் பௌத்த, இந்து சமய வேறுபாடு தோன்றின. இதைத்தொடர்ந்து தமிழ் மக்கள் இராணுவ ரீதியிலும், நிர்வாக ரீதியிலும் தனித்து வாழ முற்பட்டனர். இக்காலத்தில் இருந்தே பூநகரியுள்ளிட்ட தமிழர் பிராந்தியத்தில் இருந்து (உத்தர தேசம்) அநுராதபுர அரசிற்கு எதிராகப் பல படையெடுப்புக்களும் கிளர்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் தமிழ் நாட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்களில் இவ்விடங்களில் வாழ்ந்த தமிழ் மக்களும் இணைந்து சிங்கள அரசை ஒன்பதாம் நூற்றாண்டில் தோற்கடித்ததாக சூளவம்சம் என்ற நூல் கூறுகின்றது. இதற்குப் பேராசிரியர் கே. எம். டி. சில்வா இக்காலத் தென்னிந்தியப் படையெடுப்பாளருக்குத் தமிழர் வாழும் பிராந்தியங்கள் முக்கிய படைத்தளங்களாக விளங்கியதே காரணம் என விளக்கம் கூறுகின்றார்.

www.tamilarangam.net

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் சோழப் பேரரசு தமிழ் நாட்டில் எழுச்சியடைந்த போது, இலங்கைத் தமிழ்நாட்டு உறவு ஊர்காவற்துறை-பூநகரியூடாக இறுக்கமடைந்தது. இலங்கையைத் தமது மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவர விரும்பிய சோழர் அதற்கு முன்னோடியாக யாழ்ப்பாணம் தொட்டு மாதோட்டம் வரையிலான வடமேற்கு இலங்கையைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். இவ்விடங்களை முதலில் வெற்றிகொண்டதன் மூலம் மேற்கில் இருந்து ஏற்பட்ட அராபிய வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தவும், அநுராதபுரத்தில் இருந்த சிங்கள அரசை வெற்றி கொள்ளவும் சோழருக்கு வாய்ப்பாகியது. இதனால் அநுராதபுரத்திலும், பொலநறுவையிலும் சோழர் ஆட்சி ஏற்பட முன்னர் வடமேற்கிலங்கையில் அவர்களின் மேலாதிக்கம் நிலைபெற்றது. இதைப் பூநகரியில் சோழர் ஆட்சி, சோழர் நிர்வாகம், சோழக் குடியேற்றம், சோழப்பண்பாடு தொடர்பாகக் கிடைத்த தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

கி.பி. ஆறாம் நூற்றண்டில் இருந்து, சிங்கள மக்களில் இருந்து இனம், மொழி, பண்பாடு என்பவற்றால் தனித்து வாழ முற்பட்ட தமிழ் மக்கள், சோழரின் எழுபத்தேழு ஆண்டுகால ஆட்சியில் (993-1070) இராணுவ ரீதியில் பலம் பெற்றதைத் தொடர்ந்து, பிரதேச ரீதியாக தனித்து வாழத்தொடங்கினர். இதற்கு சோழராட்சி தொடர்பான கல்வெட்டுக்களும் பிற தொல்பொருட் சான்றுகளும் தமிழர்கள் செறிந்து வாழும் பிராந்தியங்களில் பெருமளவு கண்டுபிடிக்கப்பட்டமை சான்றாகும்.

கி.பி. 1070 இல் பொலநறுவை

12.11.93 அன்று பூநகரி இராணுவ முகாம் தாக்குதலில் பங்கேற்று வீரமரணமடைந்த கடற்புலிகளின் மகளிர் பிரிவுத் துணைப் பொறுப்பாளர் லெப். கேணல் பாமா.



வீட்டு ஜன்னலுக்குள்
நிலவைச்
சிறைப்பிடிக்க விரும்பாது
விடுதலைச் சிட்டென
சிறகை விரித்தவள்.

இரண்டாயிரம் ஆக்கிரமிப்பாளர்
முகாம் எரிக்க
விழி சிவந்தவள்.

இனிய விடுதலையைக்
காதலித்து
நிலம் அதிர நடந்தவள்

துயருள் சுழன்ற நம்
வாழ்வின்
துயர் கொல்லும்
கருவி தாங்கியவள்

எங்களின் சின்னமுற்றத்தில்
விடுதலைத் துடிப்போடு
பாடுகிற ஆசையோடு
குரல் எடுத்தவள்.

தாய்த் தேசம்
விட்டுப் பிரிந்த
எமது இதயங்களிலும்
அவள் குரல்
இனிய விடுதலையை
வேண்டி ஒலிக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

யில் சோழரை வெற்றி கொண்டதன் மூலம் சிங்கள இனத்தின் விடுதலை வீரனாக முதலாம் விஜயபாகு இலங்கை வரலாற்றில் இடம்பெறுகிறான். பேராசிரியர் பரணவிதான, விஜயபாகு இல்லாதிருந்தால் தற்காலத்தில் சிங்களவர்கள் இருந்திருக்க மாட்டார்கள் எனக்கூறும் அளவிற்கு விஜயபாகுவின் வெற்றி உயர்த்தப்பட்டுள்ளது. ஆயினும் இவன் தன் அரசையும், பௌத்த மதத்தையும் பாதுகாக்கத் தமிழ்ப்படை வீரர்களையே நம்பியிருந்தான் என சூளவம்சமும், இவனால் வெளியிடப்பட்ட தமிழ், சிங்களக் கல்வெட்டுக்களும் கூறுகின்றன.

இவன் ஆட்சியில் பொலநறுவை அரசிற்கு எதிராகத் தமிழர்கள் மேற்கொண்ட படையெடுப்பில் பூநகரிப் பிராந்தியம் தொடர்பு கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இவன், சிங்களத் தூதுவர்கள் சோழ நாட்டில் அவமதிக்கப்பட்டதற்குப் பழி வாங்கும் நடவடிக்கையாக பூநகரி மட்டுவில் நாட்டிலும், மாதோட்டத்திலும் வாழ்ந்த படைவீரரின் உதவியை தன் தூதுவர்கள் மூலம் வேண்டினான். அதை ஏற்க மறுத்த தமிழ்ப் படை வீரர்கள் அத்தூதுவர்களைக் கொலை செய்ததுடன், பொலநறுவை அரசிற்கு எதிராகப் படையெடுத்து தலைநகரைக் கைப்பற்றித் தீக்கிரையாக்கியதுடன் விஜயபாகுவின் சகோதரியையும், அவளது புதல்வர்களையும் சிறைப்பிடித்தனர். இதனால் விஜயபாகு பொலநறுவையில் இருந்து தென்னிலங்கைக்குத் தப்பியோடியதாகச் சூளவம்சம் கூறுகின்றது. இக்காலத்தில் சோழர் ஆதிக்கம் இலங்கையில் இல்லாதிருந்தபோதும் சோழப்பேரரசை வெற்றிகொண்ட விஜயபாகுவின் அரசை இங்கிருந்த தமிழ்ப்படை வீரர்கள் வெற்றி கொண்டதன் மூலம் இராணுவ ரீதியில் பலம் பொருந்தியிருந்ததை இச்சம்பவம் காட்டுகிறது. விஜ்ய பாகுவைத் தொடர்ந்து 12ம் நூற்றாண்டில் பொலநறுவையில் ஆட்சி செய்துகொண்டிருந்த முதலாம் பராக்கிரமபாகு தமிழ்ப்படை வீரரின் தயவையே நம்பியிருந்தான் என்பதை அவன் ஆட்சியில் வெளியிடப்பட்ட கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவன் பர்மா நாட்டின் மீது படையெடுத்தபோது வட இலங்கையிலுள்ள பல்லவங்கத் துறைமுகத்தில் இருந்து தமிழ் அதிகாரி ஆதித்தன் தலைமையில் நூற்றுக்கணக்கான கப்பல்கள் பர்மா நாட்டைச் சென்றடைந்ததாகச் சூளவம்சம் கூறுகின்றது. இப்பல்லவங்கத் துறைமுகம் பூநகரியில் கடற்கரையோரமாக அமைந்த பல்லவராயன்கட்டு என வரலாற்று ஆய்வாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். 12ம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டி நாட்டில் இடம்பெற்ற சோழ- சிங்களப் போராட்டத்தில், சோழர், சிங்களப் படை வீரரைத் தோற்கடித்தனர். இதனால் சோழர் இலங்கையில் சிங்கள அரசையும் வெற்றிகொள்ளப் படையெடுக்கலாம் என அஞ்சிய முதலாம் பராக்கிரமபாகு அப்படையெடுப்பைத் தடுக்க பூநகரி மட்டுவில் நாட்டிலும் புலைச் சேரியிலும் தன் படை வீரர்களை

www.tamilarangam.net

## தேசிய இனங்களின் அவலநிலை

ஒரு அரசுக்குள் வாழ்வோர் அனைவரும், ஒரு தேசமாக (Nation) அமைகிறார்கள் என்ற கருத்து சரியானதல்ல.

தற்கால நவீன அரசுகளில் பெரும்பாலானவை, கடந்தகால ஆக்கிரமிப்புக்களாலும், அரசர்களுக்கிடையில் ஏற்பட்ட ஒப்பந்தங்களாலும் உருவாக்கப்பட்டவை என்ற உண்மையும் மேற்சொன்ன கருத்தை மறுக்கின்றது. ஒரு அரசாங்கத்துக்கு உட்பட்ட ஒரு நிலப்பரப்பையே அரசு என்போம். ஆனால், தேசம் என்றால் என்ன? வரலாற்று ரீதியாக வரையறுக்கப்பட்ட ஒரு நிலப்பகுதியைத் தம்மகத்தே கொண்ட, ஒரு இனரீதியான அல்லது மொழிரீதியான கூட்டத்தையே தேசம் எனக் கூறுவேன். டென்மார்க், போர்த்துக்கல் ஆகிய ஒரு சில நாடுகளைப் பொறுத்தவரையிலேயே, அரசும், தேசமும் ஒன்றாக அமைந்துள்ளது. தனது குடிகள் அனைவரும் தம்மை ஒரு தேசமாகக் கருதிக்கொள்ளவேண்டும் என்று ஒவ்வொரு அரசாங்கமும் வலியுறுத்துகிறது. இதன் மூலம், ஒவ்வொரு அரசாங்கமும் தம்மை நியாயப்படுத்த முயற்சிக்கின்றது. இவ்விடயத்தில் சில அரசாங்கங்கள் வெற்றிபெறுகின்றன. பிரித்தானியா, பிரான்சு, இத்தாலிய அரசாங்கங்களைப் பொறுத்தளவில் இவ்விடயத்தில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளன. ஆனால், ஏராளமான ஏனைய அரசாங்கங்கள் வெற்றி பெறவில்லை.

தேசிய இனம் என்பது மிக முக்கியமானதொன்றாகவே இன்னும் உள்ளது. ஏனெனில், மக்கள், தங்கள் பொருளாதார மேம்பாட்டுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்களோ, அதேபோன்று தங்கள் கூட்டு அடையாளத்தையும் பேண விரும்புகிறார்கள்.

இங்கு எழுகின்ற பிரச்சினை என்னவெனில், தேசிய இனங்களல்ல, அரசுகளே அரசாங்கங்களை நிர்ணயம் செய்வதுதான். அரசாங்கங்களே அதிகார பலத்தைப் பிரயோகிக்கின்றன. இன்னொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச நிறுவனங்கள், அரசாங்கங்களாலேயே உருவாக்கப்பட்டு, அவைகளாலேயே நிதியூட்டப்படுகின்றன. எனவே இத்தகு நிறுவனங்கள், தேசிய இனங்களைச் சீரழியவிட்டு அரசுகளைப் பாதுகாப்பதில் முனைந்து நிற்கின்றன.

ஜெ. ஸ்ரான்பிறிட்ஜ்
ஸ்காபரோ, குவீன்ஸ்லாண்ட்.
'The Economist' சஞ்சிகைக்கு எழுதிய கடிதத்திலிருந்து.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நிறுத்தினான். இதையறிந்த சோழப் படைத் தளபதி பல்லவராயன் வட இலங்கை மீது படையெடுத்து, பூநகரி மட்டுவில் நாட்டிலும் புலைச்சேரி போன்ற இடங்களிலும் தங்கியிருந்த படைவீரர்களை வெற்றி கொண்டு இவ்விடங்களைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார் எனத் தமிழ் நாட்டிலுள்ள திருவாலங்காட்டுச் சாசனம் கூறுகிறது.

13ம் நூற்றாண்டில் வன்னியில் இருந்த தமிழ் அரசு யாழ்ப்பாணத் திற்கு இடம்மாறிய பொழுது தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாண அரசிற்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட படையெடுப்புக் களைத் தடுத்து நிறுத்தும் முக்கிய பாதுகாப்புக் காவலரணாக பூநகரிப் பிராந்தியம் விளங்கியது. யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் யாழ்ப்பாண அரசிற்கு வெளியே உள்ள நாடுகளாகப் பூநகரியும், பூநகரிப் பிராந்தியத்தினுள் அமைந்த பொன்னாவெளியும், பல்லவராயன்கட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிராந்தியங்களிலிருந்தே யாழ்ப்பாண அரசின் வெளிநாட்டு வர்த்தகத்திற்கு அதிக வருவாயைக் கொடுக்கும் யானைகள் பிடிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. 15ம் நூற்றாண்டுக்குரிய கோகில சந்தேஷய என்ற சிங்கள இலக்கியத்தில் யாழ்ப்பாண அரசைப் பாதுகாத்துக்கொண்டிருக்கும் விஷ்ணு ஆலயம் பற்றிக் குறிக்கப் பட்டுள்ளது. அவ் ஆலயம் பூநகரி ஈழ ஊருக்கு வடக்காக உள்ள பாலாவி என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. 1450இல் கோட்டை மன்னர் சார்பாக செண்பகப் பெருமாள் யாழ்ப்பாண அரசு மீது படையெடுத்த போது அவனது முதலாவது படையெடுப்பு வன்னியின் எல்லைக் கிராமங்களைத் தாக்கிவிட்டுத் திரும்பிச்சென்றதாகக் கூறப்படுகிறது. அப்படையெடுப்பை எதிர்கொண்ட இடமாகப் பூநகரி விளங்கியது. இதை, பூநகரியிலுள்ள நாச்சிக்குடாவுக்கும் ஈழ ஊருக்கும் இடைப்பட்ட பிராந்தியத்திலுள்ள இடங்கள், செண்பகப்பெருமாள் படை தங்கிய இடங்கள் என்ற பெயரில் அழைக்கப்படுவது சான்

www.tamilarangam.net



# அவள் ஓடிபோறாள்

தா. இராமலிங்கம்

புயலோடு வெள்ளம்
கடலோடு வந்தால்
அவள் என்ன செய்வாள்?
பெற்றெடுத்த பெருமகவைக்
காப்பாற்ற வேண்டி
பதறுகின்ற நெஞ்சு
உதறுகின்ற கைகால்
அவள் ஓடிப்போறாள்.
எதிரிபடை ஏவுகின்ற
செல்விழுந்து வெடிக்க
போராளி களம் அமைத்துப்
போர் தொடுத்து நிற்க
மண்மூடை அரண் சிதைந்து
சிதறி உள்ள வீதி
மரம் முறிந்து கிளைகள்
எல்லாம்
குவிந்துள்ள வீதி
உடல் சிதறி இரத்தத்தில்
ஓங்குகிற வீதி
சனங்கள் எல்லாம் விழுந்தடித்து
ஓடுகின்ற வீதி!

ஒவ்வொன்றாய்த் தாண்டி
அவள் ஓடிப் போறாள்.

மூச்செறிய
முகம் எல்லாம் வேர்த்தொழுக
விழி நிறைந்த கண்ணீர்
வழி மறைத்து நிற்க
துடைத்து எறிந்து கொண்டு
அவள் ஓடிப் போறாள்

உடுத்திருக்கும் ஆடை
தடக்கி நடை தளர்த்த
இழுத்து இடுப்பில் செருகி
அவள் ஓடிப் போறாள்.

தலை குலைந்து காற்றில்
அலைந்து முகம் மறைக்க
ஒதுக்கி மயிர் தள்ளி
அவள் ஓடிப் போறாள்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> குழந்தையின் உடல் வளர்ச்சிக்கு தாய்ப்பால் அவசியம் எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாதது மனிதனின் மனவளர்ச்சிக்குத் தாய்மொழி.
> - மகாத்மா காந்தி -

றாக உள்ளது. செண்பகப்பெருமாளின் 2ஆம் படையெடுப்பு பூநகரியில் உள்ள கல்முனையில் இருந்து கொழும்புத்துறை ஊடாக யாழ்ப்பாணம் சென்றடைந்ததாக கோகில சந்தேஷய என்ற சிங்கள இலக்கியம் கூறுகிறது.

17ம் நூற்றாண்டில் மன்னாரில் இருந்த போர்த்துக்கேய படைகள் யாழ்ப்பாண அரசை வெற்றி கொள்ளப் பூநகரியுடனான கடல், தரைப் பாதைகளைப் பயன்படுத்தினர். ஆயினும் ஆரம்பத்தில் பூநகரியுடனான கடல் நீரேரியைக் கடப்பதற்கு யாழ்ப்பாண அரசு தடையாக இருந்ததினால் சங்கிலி மன்னனே அந்நீரேரியைக் கடப்பதற்கு உதவிபுரிந்தான் எனக் கூறப்படுகிறது. யாழ்ப்பாண அரசிற்குரிய வருமானத்தின் ஒருபகுதி அதன் மேலாதிக்கத்திற்கு உட்பட்ட வன்னிச் சிற்றரசர்களிடம் இருந்து பெறப்பட்டதனால் வன்னியுடனான தொடர்பைத் துண்டிக்கப் பூநகரியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கப் போத்துக்கேயர் முனைந்தனர். ஆயினும், போத்துக்கேயரின் மேலாதிக்கம் பூநகரியின் மேற்குக் கடற்கரையோரமான ஈழஊர், வலைப்பாடு போன்ற பகுதிகளில் கூடியளவு ஏற்பட்டதாகத் தெரிகிறது. பெயரளவில் யாழ்ப்பாண திசாவையின் கீழ் கடமையாற்றிய அதிகாரி பூநகரியின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருந்தாலும் பூநகரியின் பொருளாதார வளம்மிக்க எல்லைக் கிராமங்கள் வன்னிச் சிற்றரசர்களின் மேலாதிக்கத்தின் கீழ் உள்ளடங்கியிருந்தன.

போத்துக்கேயர் ஆட்சியைத் தொடர்ந்து வந்த ஒல்லாந்தர் ஆட்சியில் பூநகரி பலவகையிலும் முக்கியத்துவம் பெற்றது. இவர்கள் ஆட்சியில் நெசவாளர் பலர் புதிதாகப் பூநகரியில் கொண்டுவந்து குடியமர்த்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவர்கள் வன்னியையும் யாழ்ப்பாணத்தையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கு வரலாற்றுப் பழமை வாய்ந்த பூநகரி மட்டுவில் நாட்டிற்குக் கிழக்கே கோட்டை ஒன்றை அமைத்தனர். ஆயினும் வன்னிச் சிற்றரசர்கள் ஒல்லாந்தரின் மேலாதிக்கத்திற்குக் கட்டுப்பட மறுத்து ஒல்லாந்தரின் ஆணைக்கெதிராகச் செயல்பட்டனர். ஒல்லாந்தர் குறிப்பு ஒன்று, பனங்காமத்து வன்னி அரசனான கயில வன்னியன், ஒல்லாந்தரின் மேலாண்மையை ஏற்க மறுத்து சுதந்திரம் மிக்க இளவரசனாக ஆட்சி புரிந்தான் எனக்கூறப்படுகிறது. இவன் ஆட்சியில் நெல் உற்பத்தியில் அதிக வருமானம் கொடுக்கும் பூநகரியிலுள்ள பல்லவராயன்கட்டும், தியாகமும் வன்னி அரசர்களின் கட்டுப்பாட்டில் இருந்ததாக ஒல்லாந்தர் கால ஆவணங்கள் கூறுகின்றன. 1803இல் ஆங்கிலேயரால் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து வன்னியும் பூநகரிப் பிராந்தியமும் முழுமையாக் ஆங்கிலேயர் ஆதிக்கத்துள் அடங்கியது. இவர்கள் ஆட்சியில் தான் பூநகரியின் பரந்த நிலப்பரப்புக்கள் துண்டாடப்பட்டு துணுக்காய் போன்ற புதிய நிர்வாகப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. அத்துடன் வன்னியைத் தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க பூநகரியில் ஒல்லாந்தர் கட்டிய கோட்டையைத் தமது மேலாதிக்கச் சின்னமாகப் பயன்படுத்தினர்.

1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து வன்னிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான தொடர்பைக் கண்காணிக்க சிங்கள அரசுகள் பூநகரியிலுள்ள கோட்டையை முக்கிய காவலரணாகப் பயன்படுத்தினர். இவ்வாறு நீண்டகாலம் யாழ்ப்பாணத்தையும், வன்னியையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க பூநகரியையும், அங்கிருந்த கோட்டையையும் அந்நிய ஆட்சியாளர்கள் ஒரு பாதுகாப்புத் தளமாகப் பயன்படுத்தினர். ஆனால் அண்மையில் பூநகரியிலிருந்த கோட்டை இடிக்கப்பட்டு, அந்நியரின் ஆதிக்கச் சின்னம் கடந்த கால வரலாற்றுச் சின்னமாக மாற்றப்பட்டுள்ளது.

## நல்லின ஆடுகள் விநியோகம்

கிளிநொச்சி விவேகானந்தா நகர் கிராமத்திலுள்ள பன்னிரண்டு பயனாளிகளுக்கு நல்லின ஆடுகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது. ஒரு பயனாளிகளுக்கு ஐந்து ஆடுகள் வீதம் அறுபது ஆடுகளும் இனப்பெருக்கத்திற்கான கடாக்களும் பயனாளிக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதுடன் பராமரிப்பு மற்றும் நோய்த் தடுப்பு பற்றிய விளக்கங்களும் அளிக்கப்பட்டுள்ளன.

## கால்நடை மேய்க்கும் திட்டம் நடைமுறையில்

கால்நடைகளால் ஏற்படும் பயிரழிவைத் தவிர்க்கும் நோக்குடன் மாடு மேய்க்கும் திட்டமொன்றினையாழ். மாவட்ட தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இத் திட்டத்தை தற்போது நல்லூர் வட்டத்தில் அரியாலை மத்திவடக்கு, மற்றும் அரியாலை மத்தி ஆகிய இரண்டு கிராமிய உற்பத்திக் குழுக்களும் இணைந்து நடைமுறைப்படுத்தி வருகின்றன.

## குழாய்க் கிணறு அமைக்க முயற்சி


மன்னார் மாவட்டத்தில் முழங்காவில் பகுதியில், இரணை மாதா நகர் கிராமத்தில் குழாய்க்கிணறு ஒன்றை அமைக்கும் பணியில் கிராமிய உற்பத்திக் குழுவின் ஊடாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

## குளங்கள் புனரமைப்பு

வவுனியாக் கோட்டத்திலுள்ள ஓமந்தை, பூவரசங்குளம், நயினாமடு வட்டங்களில் இருக்கும் பல்வேறு குளங்களையும் புனரமைப்பதிலும், குளங்களை ஆழமாக்குவதிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஈடுபட்டுள்ளது. கிராமிய உற்பத்திக் குழுக்களுடன் அவ்வப் பகுதி மக்களும் இணைந்து குளக் கட்டுகளிலுள்ள மந்துக்காடுகளை வெட்டித் துப்பரவாக்கியும், ஆழப் படுத்தியும், சிறு சிறு குளங்களைப் புனரமைத்தும் வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அயலவனுக்கு...

துயரிருள் கவிய
சூரியகந்த மலை....

அம்மாவின் சாயல்
ஒல்லியான என்
இளைய சோதரி
இன்னும் திரும்பவேயில்லை.

துயர் துடைக்கத்
துடிக்கின்ற அண்ணாவின் கையில்
விலங்கிட்டுப்
புலியெனச் சொல்லி
பிடித்துச் சென்றார்கள்.

எனக்குள்
இன்னும் துயர் பரவ
வலிகொள்கிறது நெஞ்சு.

நான் கண்மூடித் துயின்ற
அப்பாவின் தோளில்
கிடக்கிற சால்வை
முற்றத்தில்
இரத்தம் தோய்ந்து கிடந்தது.

சிறுவயதில் நான்
வாழ்க்கைப் பெருநதி
வற்றாமல் ஓடும்
என்றுதான் நினைத்திருந்தேன்.

இராணுவ முகாமுக்குச்
சற்றுத் தொலைவிலும்
கிணறுகளுக்குள்ளும்
புல் படர்ந்த பற்றைக்குள்ளும்
புதிதாய் எழுந்த மண்மேடுகள்
உடைத்தும்
நாம் காணாமற் போன – எம்
உறவுகளைத் தேடினோம்.

கணத்துக்குக் கணம்
அந்த வாழ்கைப் பெருநதி
உறைந்து போய் நின்றது.

வாருங்கள் நீங்கள்
வந்து பாருங்கள்
எதிரியின் அகத்தை
இன்னும் ஆழ அகலமாய்
எங்கள் தேசத்துத்
தெருவெங்கும் காணலாம்.

இரத்தமும் வியர்வையும் சிந்தி
கனவும் ஆசையும் விதைத்து
எழுப்பிய எங்கள் வீட்டுச்
சுவர்களின் சிதைவுகளில் காணலாம்.

எங்கள் வீட்டு முற்றத்தில்
பழக்கப்படாத
எங்களுக்குப் புரியாத
அந்நியமான
கொடிய மனித விரோதியின்
முகத்தைக் காணலாம்.

எனது அயலவனே!
சூரியகந்த மலைத் தொடரில்
புத்தரும் புதையுண்டு போன
புதைகுழிக்குள்
நீ நின்று தேடுவதும்
கொடிய வலிய
துயருள்
உன் விழிகள் கசிவதும்
விதியல்ல.

-சுபா-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலைப் பாதையில் எ







# பண்கள்


www.tamilarangam.net







www.tamilarangam.net

# விழுதுகள்



## கப்டன் வாணன்

அருமையான குரல்வளம்- கல்விச்சாலையில் நிகழ்ந்த அனைத்து இசை நிகழ்வுகளையுமே ஆக்கிரமித்தான். அமோக வரவேற்பு. கவிதை, கட்டுரை என ஆளுமை பரந்தது. விளையாட்டுத் துறைகளிலுந்தான் மகா சூரன். விளையாட்டுக்களில், மெய்வல்லுனர் போட்டிகளில் பரிசில்களைச் சான்றிதழ்களை அள்ளிக் குவித்தான்.

ஆயினும்,

இவ்வளவு மட்டும் போதுமானதா? மனிதத்துவம் பூரணமெய்தியதன் குறியீடுதானா இல்லை என்ற உண்மையே உறுத்திற்று- சுதந்திரம்! அதுவே முதன்மை என்பதை உணர்ந்து கொண்டான். மோகன் குமார் வாணனாகியதன் அடித்தளமிது. அவனது தினக்குறிப்பேடு இதையே கோடி காட்டுகிறது.

தினக்குறிப்பேடு-

அஃறிணை வடிவந்தான். ஆனால், ஒருவரது ஆத்மாவின் உணர்வு வடிவம். அதனாற் பேசவே செய்கிறது. இவ்வழியே இவன் பகர்கிறான்!

"எம் இனம் பெற்ற சுதந்திரம்
பெறுமதி வாய்ந்தது.
அதை எதிரியிடம் விட்டுவிடலாமா?
கூடாது
எமது இனத்தின் சுதந்திரத்தை
மீண்டும் பெற்றுவிட
இறுதி மூச்சுவரை போராடுவோம்!"

உரும்பிராய்-

வீரத்தின் விளைநிலம். உண்மைதான். தாயக விடுதலைக்காய் எத்தனையோ மாவீரர்களையே ஈந்து நிற்கும் மண். இந்த மண்தான் கப்டன் வாணனுக்கும் தாய்மடி. அவனது அன்பு, பாசமெல்லாம் அங்கு இழையோடிக் கிடந்தது.

ஆனால்

வந்து நுழைந்தனர் அழையா விருந்தாளிகள். அவர்தம் அமைதிப் பணியின் சரித்திரச் சான்றுகளாய் விளங்கும் தினங்கள் எத்தனையோ! அவற்றுள் ஒன்று 21-10-1987...

கருத்தை மூடிக்கொண்டு தமிழீழத்துட் புகுந்தவர்கள், கண்களை மூடிக்கொண்டு யாழ். போதனா வைத்தியசாலைக்குள் புகுந்தனர். துப்பாக்கிச் சன்னங்கள் துப்பித் தள்ளின. வைத்தியர்கள், தாதிமார்கள், ஊழியர்கள், நோயாளிகள், பார்வையாளர்கள்... ஏராளமான தமிழ் உயிர்கள் உறிஞ்சப்பட்டன. அவர்களுள் ஒருவராய் சண்முகலிங்கம். "அம்புலன்ஸ்" ஓட்டுநர். வாணனின் தந்தை.

இந்த அமைதிக்கான அமர்க்களத்துள் இவன், இவனது தம்பி சிக்கி நின்றனர். தம்பியின் கையிற் காயம்-அவசரமாய் கட்டுப் போட்டான். அவனை அணைத்தபடி சரிந்து குவியும் சடலங்கட்குட் புகுந்துகொண்டான்.

வேறு வைத்தியர்கள், உயரதிகாரிகள் விரைந்து வந்தனர். எஞ்சியோரை மீட்க முனைந்தனர். இந்த ஆரவாரத்தைச் சாதகமாக்கினான் அவன். காயத்தின் வழிக் குருதிப்பெருக்கினாற் சோர்வுற்றிருந்த தம்பியை தோளிற் தூக்கினான். சுற்றுமதிலேறிக் குதித்து நல்லூரிற்கு வந்துசேர்ந்தான். அங்கு, தம்பிக்கு மருந்து கட்டிக்கொண்டு தாயாரைச் சென்றடைந்தான்.

தந்தையின் மறைவு- விழிகளைத் துளைத்துச் சென்ற கொடூரக்காட்சி- பிஞ்சு மனத்தை வெகுவாய்த் தைத்துவிட்டது. சுதந்திரம் பற்றிய எண்ணங்கள் அவனுட் தூவத் தொடங்கின. போராட்டம் பற்றிய உணர்வு முளைவிடத் தொடங்கிது.

அப்போதும்-

பத்தாம் ஆண்டு பயிலும் அப்பாவி மாணவனாய் இருந்த அவனை அந்நியப்படையின் ஆக்கினைகள் அலைக்கழித்தன. அடிக்கடி கைதுசெய்யப்பட்டான். உதைகளுக்கும் உள்ளாக்கப்பட்டான். அம்மா லோகநாயகியாற் தாங்கிக் கொள்ள முடியவில்லை. துணையை இழந்த பறவை தன் குஞ்சுகளையாயினும் காப்பாற்றத் துடித்தது. அது தாய்மையின் இயல்பே! ஒருவாறு பிள்ளைகளைக் கொழும்பிற்குக் கொண்டு போய்ச் சேர்த்தார் அம்மா. நிம்மதிப் பெருமூச்சு. ஆனால், அன்னை நிலையிலிருந்து அன்னியப்பட்ட நிலை.... கொடுமையானதாய் இருந்தது அவனுக்கு; ஏற்றுக்கொள்ளவே மனம் ஒப்பவில்லை.

"என்னை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பு.. அனுப்பு" என அம்மாவுக்கு ஒரே அரிகண்டம். சண்டை கூடப் போட்டான். அவனைச் சமாதானப்படுத்த அம்மாவுக்குப் படாதபாடு. ஒருவாறு தேற்றியாயிற்று.

அவனையறியா வண்ணம்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவனை வெளிநாட்டிற்கு அனுப்பிவிடுவதற்கான ஏற்பாடுகள் நடந்தன. ஏதோவிதமாய் அறிய வந்துவிட்டது. ஆத்திரமடைந்து விட்டான். அந்த விடுதியில் போத்தலொன்று கண்களில் எற்றுப் பட்டது. ஆவேசமாய் எடுத்தான். உடைத்தான். கையில் பெரிதாய் எல்.ரீ.ரீ.ஈ. என்று எழுதினான். குருதி ஆறாய்க் கொட்டியது. ஆனால் மருத்துவரிடம் செல்வதோ ஆபத்து. இது எதிரிகள் சூழ்ந்த அந்நியமண்! அம்மா தன்னால் இயன்ற முதலுதவி அளித்தாள். குருதிப் பெருக்கு கட்டுப்பட்டது.

தொடர்ந்தும் கொழும்பில் வைத்திருப்பது நல்லதல்ல. அம்மாவை அச்சம் கௌவியது. தமிழகத்துக்கு அழைத்துச் சென்றார். சிகிச்சை நடந்தது. மெல்லக் காயம் ஆறிற்று. விடாப்பிடியாய் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துவிட்டான். போராளிகளுடன் உறவை ஏற்படுத்திக்கொண்டான். ஆதரவாளனாகச் செயற்படத் தொடங்கினான். இராணுவ நடமாட்டங்களைக் கண்காணித்துத் தகவல்களைக் கொண்டு வந்தான்.

இவ்வேளை-

இந்திய ஆளும் வர்க்கமானது தமிழீழத்தில் கற்க விரும்பிய பாடம் கற்று முடியும் தறுவாயினையும் அடைந்தது. "சுதந்திரத்தையே உயிர்மூச்சாய் கொண்ட ஒரு நாடு, அது சின்னஞ் சிறுசாய் இருப்பினும் அதன் வீரஞ்செறிந்த எதிர்ப்பின் முன்னே வல்லரசு என்பது வெறும் புல்லே." என்ற உண்மையினைச் சுமந்தவாறு இந்தியப்படை பின் வாங்கிக் கொண்டது.

இடையே-

தாயகம் மீது தற்காலிகமாய் கவிந்திருந்த வசந்தத்தின் போது இவனும் இவனது அண்ணனும் இணைந்துகொண்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் முழுநேர உறுப்பினர்களாகத் தம்மை ஆக்கிக் கொண்டனர்.

இருவரும் ஒன்றாகவே பயிற்சி யெடுத்தனர். வாணன் உழவு இயந்திர விபத்தொன்றிற் சிக்கிக் கொள்கிறான். ஒரு கை உடைந்து விட்டது. சிகிச்சை சிறிது நாட்கள் தான். "நீண்டநாள் ஓய்வென்றால் அது விடுதலை வீரனிற்கு சாவிற்தான்." என்று கூறுமாப்போல் துள்ளியெழுந்து வந்தான். மீண்டும் பயிற்சியைத் தொடர்ந்தான்.

பயிற்சி நிறைவெய்தியதும் காவலரண் ஒன்றில் கடமையாற்றினான். இரவு பகலாய் மூடாத இந்த இமைகளில் ஒருவனாய் அவனுங் கடமை புரிந்தான்.

இவ்விதம் காவலரண்களில் கடமை புரிகிற வேளைகளில் எதிரிப்படையினரின் நிலைகளைச் சென்று கண்காணிப்பான். ஆனால் கத்தி விளிம்பில் நடக்கிற இச்செயலின் ஆபத்து அவனுக்குப் பெரிதாய்ப் பட்டதில்லை. மகிழ்ச்சி கொடுத்தது. உற்சாக ஊக்கியாய் இருந்தது.

*03-11-1990* அன்று நடாத்தப்பட்ட மாவிட்டபுரம் சிறிலங்காப் படை மினிமுகாம் தாக்குதலுக்கு முன் வேவு பார்க்கும் பணியினை இவன் ஏற்றிருந்தான். மிகச் சாதுரியமாய்ச் சென்று தகவல்களைத் திரட்டி ஒன்றும் மீதியின்றித் தளபதியிடம் பகர்ந்தான். மேலதிக உறுதிப்பாட்டிற்காக தளபதியினால் அனுப்பப்பட்ட போராளிகளினால் கொண்டுவரப்பட்ட தகவல்களும் இவனுடையதை ஒத்து அச்சொட்டாகவே இருந்தது. வேவுக் கடமையிலும் இவனது ஆளுமை மிளிர்ந்தது.

இத்தாக்குதலுக்காக எதிரியின் நிலைகளை நோக்கி இவன் சக போராளிகள் ஊர்ந்து முன்னேறி நிலையெடுக்கின்றனர். தளபதியின் கட்டளை பிறக்கிறது. எதிர்பாராத தாக்குதலில் எதிரிப்படையினர்



## பூங்கரம் நீட்டிய பிள்ளை

கடல்மண்டு தோணியின் பகைமுகந் தொலைத்து
அடல்வென்ற எங்கட அண்ணை
பூநகரிப் போரில் வாங்கிவந் ததென்னெனப்
பூங்கரம் நீட்டிய பிள்ளைக்(கு)
ஆயிரங் காடையர் தலைகள் பறித்தும்
ஆயுதங் கோடி யெடுத்தும் விலையிலா
மானம் வாங்கிவந்தேன் என்றனன்
ஆனமாதர் புலிப்படையில் எங்கட அப்பனைக்
கண்டியோ என்றனன் பிள்ளைதான்
உறைதயிர் கலக்கும் ஆய்ச்சிகை மத்தென
பறையொலி கேட்டுப் பாய்ந்திடுங் காளையாய்
படைமுகங் கலக்கியங்கு வெற்றி
நடைபயின்றான் நுந்தை அவன்தன் கைப்படை
தீர்ந்த தாலே தான் யோர்படைக்
கருவி யாகிச் சரித்திரம் படைத்தான்
தமிழீழப் பொன்னேட் டிலென்றான்.

**காவிரி நாடான்**

குறிப்பு: அடல் = பகை, நுந்தை = உன்தந்தை

www.tamilarangam.net

நிலைகுலைந்து போயினர். நிதானிப்பதற்குள்ளாகக் குண்டுபட்டு வீழ்கின்றனர். எறிகணைகள், உலங்கு வானூர்திகள் உக்கிரம் கொண்டு எமது நிலைகளைத் தாக்குகின்றன. குண்டுவீச்சு விமானங்கள் எமது முன்னேற்றத்தைத் தடுக்கப் பகீரதப்பிரயத்தனம் செய்கின்றன. ஆயினும் இவர்கள் எதிரிப்படையின் நிலைகளை அழித்தனர். மினிமுகாமைக் கைப்பற்றினர். எதிரிப்படையினர் தமது ஆயுதங்களை வீசிவிட்டு காயமுற்ற தமது சகாக்களைத் தோளில் சுமந்தவாறு ஓட்டமெடுத்தனர். அவர்களது நிலைகளைக் கைப்பற்றி எமது நிலைகளை நோக்கி மீளுகையில் வந்ததொரு குண்டு இவனது உடலைப் பதம் பார்க்கிறது. குருதியாறு நிலத்தை நனைக்கிறது. அவனது தினக்குறிப்பு வரிகள் குரலிலேயே நெஞ்சில் ஒலிக்கிறது!

**தமிழா நீ பிறவி எடுத்தாலும்**
**நீ பிறந்த மண்ணுக்காய்**
**ஒரு துளி இரத்தத்தைக் கொடுத்துவிட**
**மறந்துவிடாதே தமிழா!**

மாவிட்டபுரம் மினிமுகாமைத் தகர்த்து வீரசாதனை புரிந்தவர்களில் ஒருவனான இவன் தனது விழுப்புண் ஆறுமுன்னே அடுத்த சமர்க்களத்தில் குதித்தான். 19-02-91 அன்று கட்டுவனில் சிறீலங்காப் படையினருடனான கடுஞ்சமர். முன்னேற முயல்கின்றனர் எதிரிப்படையினர். தடுத்துநிறுத்துவதில் இவனது துப்பாக்கியும் சுறுசுறுப்பாய்த் துரிதமாய் இயங்கியது.

05-02-91 அன்று நடந்த தச்சன்காடு மினி முகாம் மீதான தாக்குதலிலும் இவனது பங்கு, பணி அளப்பரியது.

சகதோழர்கள் மேல் இவன் காட்டுகிற கரிசனை அபாரம். அவர்களை வழிநடத்துகின்ற ஆற்றலை அவர்களே புகழ்ந்துரைப்பார்கள். இராணுவம் முன்னேறி வந்த ஒரு தடவை இவனது குழுவைச் சேர்ந்த ஒருவன் அசட்டையாக எழுந்து நின்று அவதானித்தான். இவன் கண்டிப்பும் அன்பும் கலந்த தொனியிற் சொன்னான், "எவ்வளவு கஷ்டத்துக்கு மத்தியில் ஒவ்வொரு போராளியையும் அண்ணை உருவாக்கி வைச்சிருக்கிறார். நீ என்னெண்டா சும்மா மண்டையைப் போடுறன் எண்டு எழும்பி நிக்கிறாய்!" இந்தச் சிறுவயதிலேயே தலைமைக்கு விசுவாசம் மிக்கவனாக, ஒவ்வொரு போராளியினதும் பெறுமதி உணர்வாகத் தன்னை நிலைநிறுத்தியிருந்தான். பங்குபற்றிய அனைத்துத் தாக்குதலிலுமே மிக நிதானத்துடனும், திறமையுடனும் செயற்பட்டுத் தளபதிகளின் பாராட்டுதல்களுக்கும் அன்புக்கும் பாத்திரமாகிவிட்டான்.

இவனைச் சார்ந்ததால் எத்துணை பெருமை அம்மாவிற்கு, கல்விச்சாலைகளிற்கு....

இவனது தாயகத்தின் மீதான தணியாப்பற்று, சுதந்திரத்தின் மீதான தீராக் காதல், உறுதி அம்மாவின் சிந்தனையிலும் சிரிய கருத்துக்களை விதைத்துவிட்டது. தன் பிள்ளைகளுக்கு மட்டுமே அம்மா என்று குறுகி நிற்காது "எல்லாப் போராளிகளுக்குமே நான் அம்மா" என்று எண்ணக்கூடிய உன்னத நிலைக்குத் தாயை உயர்த்திவிட்டான். மருத்துவ மனையிற் சிகிச்சை பெற்று வந்த எல்லாப் போராளிகளுமே அவரை "அம்மா அம்மா" என வாயும் மனமும் நிறைய அழைப்பார்கள். தலையை வருடி, காற்று விசுக்கி பாசத்தால் அவர்களைப் பராமரித்தார். வைத்தியர்களோ, பெற்றோரோ, சகோதரர்களோ சில நேரம் வராவிட்டாலும் இந்த அம்மா ஒருபொழுதுமே வரத்தவறியதில்லை.

"மாவீரனின் தாய்" என்ற நியாயமான நிமிர்வு இந்த அம்மாவிடம் நிறைய இருந்தது. வாணன், வள்ளுவன் வாக்கைச் செழுமைப் படுத்தி, "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகன் மாவீரன் எனக்கேட்ட தாய்"

என வளர்த்தெடுத்துவிட்டான்.

கல்விச்சாலைகள்,

எமது கல்விமான்களை உருவாக்குகின்றதே அன்றிக் கவரிமான்களை உருவாக்குவதில்லை என்பது பெரிய குறை. ஆயினும், நற்சிந்தனையால், பகுத்தறிவுகொண்ட தன்மான மறவர்கள் எம்மண்ணில் வாழவே செய்கின்றனர். அவர்கள் விடுதலை வீரர்கள்! இவர்களுள் ஒருவனைத் தம் மாணவனாய்க் கொண்டதில் பெருமையடைகின்றன கல்விச் சாலைகள். "ஆம், வாணன் எமது பழைய மாணவன்" என இறுமாந்து நிமிர்கின்றன உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயமும், உரும்பிராய் இந்துக் கல்லூரியும்.

24-12-91 இது மிகத் தன்னலக் காரத் தினமோ? இத்தனை புகழ் பூத்த எம் வாணனை தன்னுடன் அழைத்துச் சென்றுவிட்டதே....

பாரிய வெடியோசைகள் வலிகாமம் கிழக்கின் தலையில் வடிகின்றது. அந்தக் காலை இவ்வாறுதான் தொடங்கிற்று! இப்பிரதேசத்து ஈவினைப் பகுதி மண்ணின் இயல்பான செம்மை எம்மவர் குருதியால் மேலும் சிவப்பேறி... மூவர் விதையாகுகின்றனர். எதிர்பாராத கந்தக வீச்சில் மாசுற்ற எம் சூழல் காற்று இவர் தம் இறுதி மூச்சால் தூய்மை பெறுகிறது. இந்த மூவருள் ஒருவன்தான்... வாணன்!

ஓ.... கேட்கிறது உனது ஆத்மராகம். அதுதான் உனது தினக்குறிப்பேடு.

**"வீரத்திற்கு வித்திட்ட தமிழா**
**கோழைக்குக் குடை பிடிக்கலாமா**
**கூடாது எமது இழப்புக்கள்**
**இழப்பு அல்ல; விடுதலை என்னும்**
**பயிருக்கு இடப்பட்ட உரமே**
**எமது இலட்சியம் ஓங்குக"**

உனது குறிப்பேடு,

வெறுங் கையேடல்ல. பின் தொடர்ந்து வரும் இளைய வீரர்களுக்காய், தாயக மக்களுக்காய் நீ எழுதிவைத்த மரண சாசனம். அது புனிதம் மிக்கது. ஏனெனில் உனது புகழுடலின் சட்டைப்பையிலிருந்து அதை நாம் எடுத்தபோது அதுவும் குருதியில் குளிப்பாட்டப்பட்டிருந்தது.

அதன் உயிர்ப்பும் துடிப்பும் மிக்க வேத வாக்கியங்களை என் உதடுகள் உச்சரித்துக்கொண்டே இருக்கின்றன.

**துஷ்யந்தன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திருமணம்

## யாழ்ப்பாணச் சமூகத்தில் - ஒரு பார்வை

எமது மண் மீதான எதிரியின் ஆக்கிரமிப்பு யுத்தமும் அதற்கெதிராக நாம் மேற்கொண்டுவரும் மண்மீட்புப் போராட்டமும் பல படிகளைத் தாண்டி வளர்ச்சியுற்று வரும் இவ்வேளை, மக்களின் வாழ்க்கைப் போராட்டமும் பல இன்னல்களையும் இழப்புக்களையும் எதிர்நோக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. அதுவும் சரிபாதிக்கு மேற்பட்ட எண்ணிக்கையைக் கொண்ட பெண்களின் வாழ்நிலை, பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கிறது. பெண்களின் வாழ்க்கைப் பிரச்சினை எத்தன்மையில் உள்ளது, எத்தனை சிக்கல்கள் மத்தியில் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதன் ஒரு பக்கத்தைப் பார்ப்போமானால் கூட, அங்கும் பல பிரச்சினைகள் இருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

**சுதாமதி**

யுத்த சூழ்நிலையில் இழப்புக்கள், இடப் பெயர்வுகள் என்பன பெண் இனத்தைப் பொறுத்தவரை நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை யாரும் மறுப்பதற்கில்லை. குடும்பத்தினைத் தாங்கும் முக்கிய தூணாக நிற்பவள் பெண். தாய், மனைவி, சகோதரி என்ற பல பாத்திரங்களை ஏற்று பின்னிப் பிணைந்த உறவு வலைக்குள்ளே அவள் சமூகத்தின் புறச் சூழல்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சிக்கலானவை; பல தரப்பட்டவை. இப் பரந்துபட்ட பிரச்சினைகளின் ஒரு பகுதியினை இக்கட்டுரை மூலம் வெளிப்படுத்த முனைகின்றோம். குறிப்பாக யாழ்ப்பாணத்துச் சமூகத்திலே புரையோடிப்போன இப்பிரச்சினைகளால் பெண்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதனை அனுபவக் கண்கொண்டு பார்ப்பவர்களுக்கு இப் பிரச்சினைகளின் தாக்கம் நன்கு புரியும்.

யாழ்ப்பாணத்துச் சமூகத்திடையே இன்னும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படும் வழக்கமான சீதனம், சாதியம், மதம் என்பன திருமணத்துக்காக காத்திருக்கும் பெண்கள் மத்தியில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பது, நம் வாழ்க்கைக்கூடாக சமூகத்திலே கண்டுகொள்ளும் அவலம். எமது சமூகத்தின் சாபக்கேடுகள் போல இன்னும் இறுக்கமாகக் கைக்கொள்ளப்படும் இவ்வழக்கம் எத்தனையோ பெண்களை ஏக்கப் பெருமூச்சுக்களோடு வாழ வைத்திருக்கிறது. நாங்கள் வாழ வழி பிறக்காதா என்று நாளும் பொழுதும் தாம் வாழ்வதை ஒரு சுமையாக நினைத்துக் கண்ணீர் விடும் பெண்கள், விரக்தியின் எல்லைக்கே தள்ளப்பட்டுள்ளனர்.

திருமண வாழ்க்கை சீதனத்தால் நிச்சயிக்கப்படுகின்ற இச் சமுதாயத்தில், திருமணத்துக்காகக் காத்துக்கொண்டிருக்கும் பெண்கள் அனேகரின் திருமண வாழ்க்கை எட்டாப்பழமாக மாறிவிட்டது. திருமண வயதைத் தாண்டிய முதிர்கன்னிகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே வருகிறது. பெண்ணைப் பெற்ற தாய், தந்தையர் தரகர்களின் வீடு தேடிக் கால் தேய நடந்தும், இவர்களின் வாழ்நாளின் பெரும் பகுதி பெண்பார்க்கும் படலங்களோடு மட்டுமே முற்றுப் பெறுகின்றன. பேசிக் குழம்பிய திருமணங்களின் பட்டியலோ நீண்டு செல்கிறது.

யாழ்ப்பாணத்துச் சமூகத்தைப் பொறுத்த வரை, ஏன் தமிழீழத்திலேயே ஆண்களின் சனத்தொகை பெண்களின் சனத்தொகையை விடக் குறைந்த நிலையிலேயே இருக்கின்றது. இந்நிலையில் இங்குள்ள பெண்களின் திருமண வாழ்க்கை வாய்ப்புக்கள் போட்டிப் பரீட்சையாகவே காணப்படுகின்றன. பெருமளவு ஆண்கள் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்கள் தேடிப் புலம் பெயர்வதும், இராணுவ நெருக்கடிகளினால் காணாமற் போவதும், கொல்லப்படுவதும் ஆண்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்வதற்குக் காரணங்களாக அமைகின்றன. இந்நிலையில் இங்கு வாழும் ஆண்கள் சீதனம் என்ற நிலைப்பாட்டில் பெரிய நிபந்தனைகளை விதிப்பதால் பல பெண்களின் திருமண வாழ்வு கனவாகவே முடிவடைந்துவிடுகிறது.

இராணுவ அனர்த்தங்களினால் வீடு, வாசல்களை இழந்த நிலையில் இடம் பெயர்ந்துள்ள திருமண வயதிலுள்ள பெண்களே இதனால் மிகவும் பாதிப்படைகின்றார்கள். தமது சொத்துக்கள் அனைத்தையும் இழந்து, உயிரைத் தவிர இழப்பதற்கு எதுவுமற்ற நிலையில் வாழும் பெண்கள், "குறைந்தது இரண்டு லட்சம் என்றாலே வாழ்க்கை" என்ற நிலை வரும்போது, திருமணம் பற்றி சிந்திப்பதற்குக் கூட முடியாதவர்களாகிவிட்டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அண்மையில் காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்த ஒரு குடும்பத்தைச் சந்தித்தபோது இதன் தாக்கத்தினை நன்கு காணக்கூடியவாறு இருந்தது. தமது வயோதிபத் தாயின் ஓய்வூதியத்தைத் தவிர வருமானம் எதுவு மற்ற நிலையில் முப்பத்தாறு வயதிலும், முப்பத்து நான்கு வயதிலுமுள்ள அவ்விரு பெண்களும், "எங்களுக்கு இனிக் கலியாணம் வேண்டாம். ஏதாவது வேலை கிடைத்தால் போதும்." என்று விரக்தியோடு கூறிக்கொள்கின்றனர்.

"அம்மாவுக்கு வயது போட்டுது. அவவுக்கு ஒண்டு நடந்தா நாங்கள் நடுத்தெருவில் தான் நிக்கவேணும்." இவர்களின் வேதனை தோய்ந்த வாழ்க்கையைப் போல எத்தனை பெண்கள் வாழ்கிறார்கள்!

"காரைநகரிலே இருந்த வீடுதான் எங்களுக்கிருந்த ஒரே சொத்து. இப்ப எல்லாம் போட்டுது. அவரும் போய்விட்டார்."


இப்படி விழிநீர் சிந்தும் தாய் மார்கள் எத்தனை பேர்!

இதைப்போல இன்னொரு குடும்பத்தைச் சந்தித்த போது அக்குடும்பத்தில் உள்ள நான்கு பெண்களின் வாழ்க்கை இவ்வாறிருந்தது. முப்பத்தெட்டு வயதை எட்டி உள்ள மூத்த பெண்பிள்ளையின் திருமணச் சம்பந்தங்கள் குழம்பிக் கொண்டு இருப்பதனால், அவரின் கீழே உள்ள மூன்று பெண்பிள்ளைகளின் வாழ்வும் பாதிக்கப்பட்டுள்ளது. தாம் திருமணம் செய்வதற்குச் சந்தர்ப்பம் இருந்தும், மூத்தவருக்குத் திருமணம் நடக்காததால் தமது வாழ்வை அமைத்துக்கொள்ள முடியாதிருக்கின்றனர். அவர்களுக்கு ஒரே துணையாக இருக்கும் வயோதிபத் தந்தை இயலாமையோடு தரகர் வீடுகளைத் தேடிச் செல்வதிலேயே வாழ்க்கையைச் செலவிடுகிறார்.

இது இவ்வாறிருக்க, சீதனப் பட்டியலின் ஏற்றம் விலைவாசியை விட உயர்ந்து செல்கின்றது. ஆண்களின் வேலைத்தரங்களுக்கு ஏற்ப சீதனமும் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. பொறியியலாளர், வைத்தியர் என்ற உயர்தரத் தகுதியுடைய ஆண்கள் குறைந்தது ஐந்து லட்சம் ரூபா பணமும், வீடுவளவும் என்ற பலமான பொருளாதாரப் பின்னணி கொண்ட பெண்களை மட்டுமே நாடுகின்றனர். அதிலும் "கொழும்பில் வீடுவளவு" என்று ஒற்றைக் காலில் நிற்கும் ஆண்கள், தற்போதைய நிலையில் குபேர வாழ்வு வாழ்பவர்களுக்கு மட்டுமே எட்டக் கூடியவர்களாக உள்ளனர். இவ்வாறு நீண்டு செல்லும் சீதனப் பட்டியலில் சாதாரண பயிற்சி ஆசிரியர்களோ அன்றி பட்டதாரி ஆசிரியர்களோ கூட, இவர்களுக்கு தாம் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல என்றாற் போல 'ஐந்து லட்சத்துடன் வீடுவளவு' என்ற நிபந்தனையையே முன்வைக்கின்றனர்.

இத்தகைய நிலையில், ஆண் போன்று வைத்தியராகவோ அன்றி வேறு உயர்படிப்புக்களை மேற்கொண்ட நிலையிலோ பெண் இருந்தாலும், அதேயளவு சீதனத்தைக் கொடுத்தால்தான் திருமணம் செய்யலாம் என்ற பாரபட்ச நிலைக்குத் தள்ளப்படுகிறாள். பெண் கல்வியின் தரம் கூடிச்செல்வதற்கேற்ப அவள் கொடுக்கவேண்டிய சீதனத் தொகையும் கூடிச்செல்கின்றதே தவிர, குறைந்தபாடில்லை. இதனால் எத்தனையோ உயர் படிப்புக்களை மேற்கொண்ட பெண்கள் தமது மணவாழ்வை அமைக்க முடியாமல் உள்ளனர். இது, சீதனம் எந்தளவு தூரம் திருமணவாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்துகின்றது என்பதற்கு ஒரு உதாரணமாகும்.

இங்கிருந்து வெளிநாடுகளிற்கு வேலைவாய்ப்புக்கள் தேடிச்சென்ற ஆண்கள் அங்கு குடியேறியபின், இங்கிருக்கும் பெண்களைத் திருமணம் செய்வதற்குச் சீதனத்தையே பிரதானமாக எதிர்பார்க்கின்றனர். "படித்த அழகான பெண், கூடவே




**விளக்கம்: சீர்கேட்டு சீரழிக்கும் சீதனக் கொடுமையை சிதைத்திடுவோம். ஓரணியாய் சேர்ந்திடுவோம் நங்கையரே!**
**தமிழீழத்தில் இருந்து வெளியாகும் 'நங்கை' மாத இதழின் முன் அட்டைக்காக, ஓவியர் மருது அவர்களால் வரையப்பட்ட ஓவியம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சீதனமும் எதிர்பார்க்கப்படும்" என்ற இவர்களது நிபந்தனைகளினால் எத்தனையோ பெண்கள் விரக்தியுற்று, மனமுடைந்து வாழ்கின்றனர். பணமாகப் பல இலட்சங்களை எதிர்பார்க்கும் இவர்களது சீதன வசூலிப்புக்கள், நாடுகளுக்கு நாடு வேறுபட்டுக் காணப்படுகின்றன. கனடா மாப்பிள்ளை ஐந்து லட்சம் என்று தொடங்கி சுவிஸ்லாந்து, ஜேர்மனி என்று நீளுகின்ற பட்டியலில் சீதனத் தொகைகளும் வேறுபடுகின்றன. பிரயாணச் செலவுகள் தூரதேசத்தைப் பொறுத்து அதிகமாக தேவைப்படுகிறது என்பதே இவர்கள் காட்டும் காரணமாக இருக்கின்றது.

ஆனால் ஒன்று தற்போதைய சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான பெண்கள் வெளிநாட்டிலுள்ள ஆண்களைத் திருமணம் செய்ய விருப்பமற்றவர்களாக உள்ளனர். தமது வாழ்க்கையை இங்கே அமைத்துக் கொள்வதையே அவர்கள் விரும்புகின்றார்கள். அண்மையில், திருமணத் தொடர்புகளை மேற்கொண்டு மணமக்களைத் தொடர்புபடுத்திக் கொடுக்கும் ஒரு பெண்மணியைச் சந்தித்தபோது தமக்கு வருகின்ற திருமண விண்ணப்பங்களில், பெரும்பாலான பெண்கள் உள்ளூர் மணமகனையே கட்டாயமாக எதிர்பார்க்கின்றனர் என்று குறிப்பிட்டார். அதாவது 'கிளாலிக்குள் மாப்பிள்ளை' என்ற வரையறைக்குள் இவர்கள் விடாப்பிடியாக நிற்பதாகக் கூறினார்.

இந்த மாற்றம் பெண்கள் ஓரளவு தங்கள் நிலைபற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் என்றே எண்ண வைக்கின்றது. முகமே தெரியாத, பரஸ்பரம் புரிந்து கொள்ள முடியாத திருமணங்கள், தம் வாழ்க்கையை எந்த நிலைக்குக் கொண்டுசெல்லும் என்பது பற்றி அவர்கள் ஆழ்ந்த கவனம் கொண்டிருக்கிறார்கள் என்பதையே இதற்குக் காரணமாகக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

பெண்களில் பெரும்பாலானோர் உள்ளூரிலேயே தொழில் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர். "வெளிநாட்டில் மணவாழ்க்கை அமைக்கச் செல்வதாயின் இத்தொழிலை விட்டுச் செல்லவேண்டிய நிலை ஏற்படலாம். ஒருசிறு தொழிலாவது செய்து நாங்களே சம்பாதித்தால் எங்கள் சொந்தக் காலில் நிற்கலாம். வெளிநாட்டிலே போய் இருவருமே தொழில் இல்லாது எத்தனை நாளைக்குத் திண்டாடுவது?" என்கின்றனர் சில பெண்கள்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், ஆணை நன்கு அறிந்து, புரிந்துகொண்டபின் திருமணம் செய்வதற்கு வெளிநாட்டில் உள்ள ஆண்களை மணப்பது சாத்தியப்படமாட்டாது என்று கூறிக்கொள்கின்றனர் அனேக பெண்கள். பெண்ணின் திருமண வாழ்க்கையை நிர்ணயிப்பதில் ஆதிக்கம் செலுத்தும் மற்றும் ஒரு காரணி, தொழில் ரீதியான பாகுபாடாகும்.

குறிப்பாக தாதித்தொழிலைப் பொறுத்தவரை இந்நிலை காணப்படுகிறது. பெரும்பாலான தாதியர்கள் திருமண வயதை எட்டியிருந்தும், ஏன் அதனைக் கடந்த நிலையிலும் கூட, திருமணங்கள் குழம்பிய நிலையில், வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். தொழில்களிலே உன்னதமானதாக தாதித்தொழில் இருந்தும், அத்தொழிலில் உள்ள பெண்களை மாறுபட்ட கண்ணோட்டத்துடன் பார்க்கும் சமூகப் பார்வை இன்னும் அழியவில்லை என்பது வருந்துவதற்குரிய விடயம்.

அன்றொரு காலம் தாதியாகப் பெண்கள் சேவை செய்வதையே சமூகம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இன்று காலமாற்றமும் அதன் தேவை உணரப்பட்ட நிலையிலும் கூட "தாதித்தொழில் செய்யும் பெண்பிள்ளையெண்டால் வேண்டாம்." என்று திருமணம் செய்யமறுக்கும் ஆண்கள் இன்றும் இச்சமூகத்தில் உள்ளனர்.

அண்மையில் தனக்கு வந்த பத்துத் தாதிகளின் திருமண விண்ணப்பங்களும் தொழில் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டுவிட்டன என்கிறார் அந்தத் திருமணசேவை மேலாளர். எந்த ஒரு தொழிலும் கிடைக்காத ஆண்கள் கூட தாதியர் என்றவுடன் வேண்டாம் என்று திரும்பிச் செல்வதை அவர் வேதனையோடு கூறினார். ஏன் இந்த நிலை? தொழிலின் மகத்துவத்தை, தொழிலின் இன்றியமையாத தேவையை அறிந்துகொள்ளாத தன்மையே இதற்கான அடிப்படைக் காரணங்கள் எனலாம்.

யாழ்ப்பாணத்துச் சமூகத்தைப் பொறுத்தவரை சீதனம் மட்டுமன்றி சாதியம், மதம், பிரதேசவாதம், சாதகக் குறிப்புப் பார்த்தல் என்ற பிற்போக்கான கொள்கைகளிலிருந்து விடுபடவில்லை. சாதியம் என்பது தற்போதைய போராட்ட சூழ்நிலையாலும், இடப்பெயர்வு, கல்வி, தொழில்வாய்ப்பு என்பவற்றாலும் சிறிது தளர்ந்து போனாலும் திரும

www.tamilarangam.net

## கடனடிப்படையில் வலை விநியோகம்

**மாவீரர் நினைவாக பரவலாக தீவகம், காரைநகர், தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் கடன் அடிப்படையில் வலைகள் விநியோகிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.**

**இத்தொடரில் 04-01-94 அன்று வடமராட்சி கிழக்கு ஒன்றிய அலுவலகத்தில், பொற்பதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தையும் மருதங்கேணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தையும் சேர்ந்த 16 பயனாளிகளுக்கு வலைகள் கடனடிப்படையில் விநியோகிக்கப்பட்டன.**

**வடமாராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடற்புலிகள் மாவட்ட இணைப்பாளர், முதன்மைச் செயலகப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். அத்துடன் பெரும் தொகையான கடற்றொழிலாளரும் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ணம் என்று வரும்போது இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. எத்தனையோ பெண்களின் திருமணப் பேச்சுக்கள் குழம்பி, இழுபறி நிலையில் நிற்பதற்குக் காரணமாக இருக்கின்றது.

மனப்பொருத்தங்கள் பற்றித் துளியேனும் சிந்திக்காது சாதகக் குறிப்புகள் பொருந்தினால் சரி என்ற நிலைப்பாட்டால், பழைய மரபுகளிலிருந்து சற்றேனும் விலகாத திருமணப் பேச்சுக்கள் எத்தனையோ பெண்களின் வாழ்க்கையை நாற்பது வயதைக் கடந்த நிலைக்குத்தான் தள்ளியிருக்கிறது. 'ஏழில் செவ்வாயும், தாலிப்பாக்கியமும்' பார்ப்பதில் உள்ள சிரத்தை எத்தனையோ திருமணப் பேச்சுக்கள் குழம்பிய பின்னரும் கூட தளராதது பரிதாபத்துக்குரியது.

இவ்வளவு இராணுவ அட்டூழியங்களின் மத்தியிலும், இடப்பெயர்வுகள் மத்தியிலும் யாழ்ப்பாணத்துச் சமூகத்தைப் பொறுத்தவரை பிரதேசவாதம் என்பது சற்றேனும் குறையவில்லை. திருமணம் என்று வந்தவுடன் இந்நிலைப்பாட்டையும் இறுக்கமாகவே கடைப்பிடிக்கின்றனர்.

இவ்வாறு பெண்ணின் திருமண வாழ்க்கையை சீதனமும், சாதியமும், குறிப்புப் பொருத்தங்களும் நிர்ணயிக்க, இடையில் சிக்கியிருக்கும் பெண்களின் வயதுகள் ஏறிக்கொண்டு போனதே தவிர, வாழ்க்கை அமையவில்லை. இதனால் குறிப்பாக முப்பது வயதுக்கு மேற்பட்ட வயதுடைய பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு செல்ல, இருக்கும் ஆண்களோ தங்களைவிட அதிக வயது இடைவெளியுள்ள இளமையான பெண்களையே நாடிச்செல்கின்றனர். இத்தகைய வயது இடைவெளியில் உள்ள பெண்களை ஆண்கள் திருமணம் செய்ய முயல்வதால் மேலும் மேலும் பாதிக்கப்படுவது திருமண வயதைத் தாண்டிக்கொண்டிருக்கும் பெண்களே என்பதை எல்லாப் பெண்களும் கருத்தில் எடுக்க வேண்டும்.

நன்றி: சுதந்திரப் பறவைகள்

www.tamilarangam.net

# நீரிழிவைக் கட்டுப்படுத்தும் 'சிறுகுறிஞ்சா' இலை

ஆங்கிலத்தில் `Diabetes' என்று அழைக்கப்படும் நீரிழிவு நோயானது மனித சமுதாயத்திற்கு ஒரு புதிய நோயல்ல. நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இது மனிதர்களிடம் காணப்பட்டதாகக் கருதப்படுகின்றது. சிந்துவெளி நாகரீக காலப்பகுதியிலேயே நீரிழிவு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. நீரிழிவை நோயென்று குறிப்பிடுவது கூடப் பொருத்தமானதல்ல. அது ஒரு குறைபாடு. ஆங்கிலத்தில் அதை `Sugar Complaint' என்று குறிப்பிடுகின்றனரே தவிர `Sugar Disease' என்று யாரும் குறிப்பிடுவதில்லை. இதனை முற்றாகக் குணப்படுத்த இன்னும் சிகிச்சை முறை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் கட்டுப்பாடாக வைத்திருக்கலாம். கட்டுப்பாடான உணவு வகை மூலமும், மருந்துகள் மூலமும் நீரிழிவைக் கட்டுப்படுத்தலாம். நீரிழிவை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதானது நீரிழிவு இல்லாத நிலைக்குச் சமன் என்றுகூடக் கூறலாம். ஆனால், இதனைக் கட்டுப்படுத்தாமல் விடும்போது இது உடலின் பல பகுதிகளைத் தாக்கி மனிதனை முழு நோயாளியாக்கிவிடும். கொழுப்புச் சத்துள்ள உணவுப் பொருட்களையும், இனிப்பு வகைகளையும் தவிர்க்க வேண்டும். மது அருந்தும் பழக்கமுள்ளவர்கள் அதனை அடியோடு கைவிடவேண்டும். மருத்துவரின் ஆலோசனைப்படி நடந்து கொள்ளவேண்டும்.

சித்த வைத்தியத்தில் நீரிழிவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க பல மூலிகைகள் சொல்லப்படுகின்றன. சிறுகுறிஞ்சா இலை குறிப்பிடத்தக்க நிவாரணத்தை அளிப்பதாக தற்போதைய மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சிறுகுறிஞ்சா தமிழீழப் பிரதேசங்களில் பொதுவாக வளரக்கூடிய கொடியினமாகும். இதன் இலையும், வேரும் மருத்துவக் குணம் கொண்டவை.

ஆயுர்வேத வைத்திய முறையில் இந்த சிறுகுறிஞ்சா இலையை சிறந்த சிறுநீர் பெருக்கியாகவும் வயிற்றுப் பொருமலை நீக்கிப் பசியைத் தூண்டுவதற்காகவும் பயன்படுத்துகின்றனர்.

சிறுகுறிஞ்சா இலையைப் பொடி செய்து கரும்புச் சாற்றுடன் வைத்திருக்க அக் கரும்புச்சாறு 18 மணி நேரத்தில் இனிப்புத் தன்மையை இழந்துவிடும். இதனை மிருகங்களுக்குக் கொடுத்துப் பரிசோதனை செய்துபார்த்ததில் அவைகளது குருதியிலிருந்த குளுக்கோஸ் குறைந்துவிடுவதை காணக்கூடியதாக இருந்தது. இந்த இலையானது நேரடியாக இரத்தத்தில் உள்ள இனிப்புத் தன்மையை குறைப்பதுடன் 'பங்கிரியாஸ்' என்னும் சுரப்பியினைத் தூண்டி இன்சுலினையும் அதிகமாகச் சுரக்கப்பண்ணலாம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நாட்டுப்புற வைத்தியர்கள் நாளொன்றுக்கு பத்து சிறுகுறிஞ்சா இலைகளைத் தின்று வந்தால் நீரிழிவு குணமாகும் என்று சொல்கிறார்கள். நிழலில் உலர்த்திப் பொடி செய்யப்பட்ட சிறுகுறிஞ்சா இலையைத் தினமும் இரண்டு கிராம் முதல் நாலு கிராம் வரை சாப்பிட்டு வந்தால் இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் நிச்சயமாக குறைக்கப்படுகின்றது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நீரிழிவு உள்ளவர்கள் ஒரு நல்ல மருத்துவரின் ஆலோசனையுடன் சிறுகுறிஞ்சா இலையினைப் பயன்படுத்தி இந்நோயைக் கட்டுப்படுத்தி நிவாரணம் பெறலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அக்கரைப்பூக்கள்

**அன்பின் எரிமலை ஆசிரியர் அவர்கட்கு!**

உங்களின் கார்த்திகை மாத இதழில் "மாயை கௌவிய உலகம்" என்ற தலைப்பில் திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய கட்டுரை பல பயனுள்ள கருத்துக்களை முன்வைத்தது. எனினும் அவரது "மேற்குலக கருத்தாக்கிரமிப்பு" பற்றிய கண்டனம் ஓரளவுக்கு மிகைப்படுத்தப்பட்டதாகக் காணப்பட்டது என்பது என் கருத்து.

"மேலைத் தேய விஞ்ஞானத் தொழில்நுட்ப சாதனைகளை நிராகரிக்க வேண்டும் என்பதல்ல" என்று திரு. மு. திருநாவுக்கரசு அவர்களே ஒத்துக்கொண்டுள்ளார்.

எமது மூடநம்பிக்கையை அடியோடு தகர்த்தெறிய உதவுவது மேலைத்தேய விஞ்ஞான ஆய்வும் கண்டுபிடிப்புக்களுமே என்றால் மிகையாகாது. எனவே கட்டுரை ஆசிரியர் மேலைத்தேய கண்டனப் போக்கினை ஓரளவு தவிர்த்து மிதவாதப் போக்கினைக் கடைப் பிடித்திருந்தால் அக்கட்டுரை மேலும் சிறப்புற்றிருக்கும் என்பது எனது கருத்து.

த. நா. ஜெயராஜசிங்கம்.
அவுஸ்திரேலியா.

***

**அன்பின் எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,**


எரிமலையை தவறாது படிப்பவர்களுள் நானும் ஒருவன். தமிழீழ மக்களின் போராட்ட நிகழ்வுகளையும் இடம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் போராட்டத்திற்கு எவ்வகையில் தமது பங்களிப்பை செய்கிறார்கள் என்பதனையும் பாரம்பரிய தமிழ்க் கலை, பண்பாடுகளையும் தங்கள் இதழில் வெளியிடும் முயற்சிக்கு எனது பாராட்டுக்கள்.

சென்ற மாசி மாத இதழில் (1994) ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற மாவீரர் நிகழ்வுகள் (1993) படங்களுடன் வெளியிடப் பட்டது. இதில் சில நாடுகளில் நடைபெற்ற நிகழ்வுகளின் புகைப் படங்கள் இடம்பெறவில்லை. இவற்றையும் வெளியிட்டால் நன்றாக இருக்கும்.


இங்கு 1993 கார்த்திகை 28 அன்று நடைபெற்ற மாவீரர்நாள் நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட படங்கள் சிலவற்றையும், கிட்டண்ணா மற்றும் ஒன்பது போராளிகளின் முதலாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் சிலவற்றையும் இத்துடன் அனுப்பி வைக்கிறேன். வெளியிடுவீர்கள் என நம்புகிறேன்.

நன்றி

திருப்பதி
சுவிஸ்.









களம் செல்லும் வேளையிலே
கடிதம் எழுதிய வேங்கையே
கண்ணீர்க் கடிதம் என்று
எண்ணினேன்
காவியக் கடிதம் என்று புரிந்தேன்
காலத்தின் கடமையை அறிவாய்
என்று
கலையரசன் என்றே பெயர்
சூட்டினாரோ!
அந்தியேட்டி வேண்டாம் அம்மா
ஆதரவற்றோருக்கு அன்னம்
அளித்திடம்மா
அணையப் போகும் வேளையிலும்
ஆழமான சிந்தனையடா உனக்கு!
தலைவனின் கட்டளையை
தாரக மந்திரமாய் எண்ணி
தாய் முகம் பாராது
தாய் மண்ணை காக்கத் துணிந்த
தன்னிகரற்ற வீரனே
உன் மடலைப் பார்த்தால்
உலகமே வியக்குமடா.

கி. பாஸ்கரன்
ஜேர்மனி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## நூல் அறிமுகம்

**கப்டன் வானதி**
**கப்டன் கஸ்தூரி**
**மேஜர் பாரதி**

இவர்களிடம் நிறையவே எதிர் பார்ப்புடன் கவிதை உலகம் காத்தி ருந்தது. அவர்கள் களத்திலே காவிய மாகிவிட்டனர். பாடிப் பறந்த குயில் களாக அவர்கள் சிறகைத் தூக்கி விட்டார்கள்.

இன்று பல பெண் கவிஞர்கள் இந்த மண்ணிலே தோற்றம் கண் டுள்ளனர். அவர்களில் குறிப்பிட்டு விதந்துரைக்கூடியவர் அகிலா பசுபதி.

"அவளுள் ஒரு ஆவேசப்புயல் மையம் கொண்டிருக்க வேண்டும்" இவ்வாறு அகிலா பசுபதியின் கவிதை நூலின் முன்னுரையில் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

நிமிர்வு என்னும் இக்கவிதை நூலுக்கான அட்டைப்படம் ஓவியர் தயாவினால் வரையப்பட்டிருக்கிறது.

கவிதைகளுக்குள் வருவோம்.

தமிழீழத்தில் எதிரியால் திட்ட மிட்டு ஏற்படுத்தப்பட்ட பொரு ளாதாரத்தடை கண்டு கவி எழுது கிறாள்.

**எங்கள் நிலத்தை**
**எங்கள் வளத்தை**
**மறந்து**
**அமுது குளறிய**
**நாங்கள்!**

**அமுது குளறிய எங்களுக்கு**
**'நிமிர்தல் என்பது எப்படிச் சாத்தியமானது'**
**என்று**
**கேட்கிறாள்.**

நிமிர்தல் நிகழ உன்னதமான வீரம் செறிந்த விடுதலைப் போரும் அந்த விடுதலை வீரர்களும் காரணமாயி ருக்கின்றதை கவிதையில் அழகுறச் சொல்கிறாள்.

அந்நியன் பிடியில் எங்கள் கிரா மம் என்று வருகிற கவிதை. அமைதி காக்க வந்தவர்களால் வல்வெட்டித் துறையில் 1988ம் ஆண்டு ஆவணி மாதம் 2, 3ம் திகதிகளில் நடாத்தப் பட்ட படுகொலைகள் கண்டு கலங்கி அழுகிறது அக் கவிதை.

களத்தில் நிற்கும் போராளி களுக்கு ஒரு கடிதம் எனும் கவிதையில்

**வீரனே நீ எவ்வளவு**
**தூரம் முன்னேறுவாயோ**
**நானும் உன்னோடு**
**கூடவே..**
**வீரர்களின் துன்பத்திலும், வெற்றியிலும்**
**எதிரியை எதிர்கொள்ளும் போதிலும்**
**நானும் கூடவே...**
**விடுதலைக்கான உன் ஆன்மக் குரலின்**
**ஒலிப்பிலும் நானும் கூடவே...**

இவ்வாறு கருத்துப் பொதிந்து விளங்குகிறது.

அவளிடம் நிறைந்த நேயம் இருக்கிறது. அது கவிதைகளில் முகம் காட்டுகிறது. அவள் எழுத் துக்கும் அவள் வாழ்வுக்கும் மிகப் பெரிய நெருக்கம் இருக்கிறது.

அவளின் 'அழைப்பு' என்ற கவிதையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்கள் கிராமம்
குடி இழந்து போகிறது
உயிர் துடிப்பு
அழிந்து போகிறது
இந்த மண் மெல்லிதாய்
அழுவது எனக்குக் கேட்கிறது
உங்களுக்குக் கேட்கிறதா?


மண்ணுடன் பற்றுவைத்துப்
பாசமான உறவாடிப்
பேசிப் பழக்கம் இருப்பின் கேட்கும்
இருப்பினை இழந்தவர்களே
குடிகளை
இழந்து கொண்டுள்ள
கிராமம் உங்களை
அழைக்கிறது!
வாருங்கள் வாழலாம்.

இந்தக் கவிதை எங்கள் இதயத்தில் துயரைத் தருகிறது. எங்கள் கிராமம் எங்களை இழந்து தவிக்கிறது என்று மண்ணிலிருந்து அந்தக் கவிஞை பாடிடக் கேட்கத் துடிக்கின்றது மனது. இந்த ஆத்மத் துடிப்பும் இந்தக் அக்கறையும் எங்களையும் ஆட்கொள்வதாக.

# விளக்கு

## சஞ்சிகை

ஆசிரியம் என்பது உயிரோட்டமுள்ள ஒரு சமுதாயத்துடன் உறவாடுகின்ற தொழில். எனவேதான் பாடசாலையை 'புதுமைகாண் உயிர்ப்புள்ள தொகுதி' என்று சொல்வார்கள். காலத்திற்கு காலம் நிகழும் மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து மென்மேலும் சிந்தனை வளர்ச்சியை ஆசிரியர்கள் விளங்கவேண்டுமெனில் அவர்கள் தொடர்ந்து அறிவைத் தேடுபவர்களாகவும் புதுமைகளைக் காண விளைபவர்களாகவும் இருக்கவேண்டும். காலத்திற்கேற்ப மாறிவரும் கல்விப் பொருளிலும் கல்வி வழங்கு முறையிலும் பயிற்சி பெறவேண்டியது அவசியம். ஆசிரியப் பயிற்சிமுறைகள் நன்கு விரிவுபடாத இக் காலகட்டத்தில் ஆசிரியவாண்மை விருத்திக்கு உதவும் வகையில் 'விளக்கு' என்னும் சஞ்சிகை வெளிவந்திருக்கிறது. இது மகிழ்ச்சிக்குரியதே. நல்லமுறையில் வளர்த்தெடுக்கப்படின் ஆசிரிய வாண்மை விருத்திக்கு இச் சஞ்சிகை சிறப்பான பங்களிப்பை செய்யும்.




விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்.

1984 ஆம் ஆண்டு தலைவர் பிரபாகரன் அவர்களால் உருவாக்கப்பட்டு, தமிழீழக் கடல் அன்னையின் மடியில் தவழ்ந்த ஒரு செல்லக்குழந்தை இது.

இன்று- சுமார் 10 வருடங்களின் பின்பு தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கைத் தீர்மானிக்கும் ஒரு நிர்ணய சக்தியாகப் பெருவளர்ச்சி கண்டுவிட்டது.

எமது தாயகத்தின் புவியியல் அமைப்பைக் கருத்திற்கொண்டு கடற்புலிகளின் வளர்ச்சியிலும்- அதன் செயற்பாட்டிலும் தலைவர் அவர்கள் கவனம் செலுத்தி வருகின்றார்.

'கடலிலே காவியம் படைப்போம்' என்ற உறுதிப்பாட்டைத் தாரக மந்திரமாகக் கொண்டு செயற்பட்டுவரும் கடற்புலிகளின் சாதனைகளும்- தியாகச் செயல்களும் எமது போராட்ட வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

இச்சிறு நூலானது, கடற்புலிகளின் வரலாற்றுச் சுருக்கத்தையும் அதன் சாதனைகளையும் விளக்கி நிற்கின்றது. அத்துடன் கடற்புலிப் போராளிகள் சிலரின் வீரச் செயல்களையும்- அவர்கள் புரிந்த உன்னத தியாகங்களையும் உணர்வு பூர்வமாக வெளிப்படுத்துகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழில், கடற்புலிகள் தொடர்பாக, காலத்திற்குக் காலம் வெளியாகியிருந்த கட்டுரைகளினது தொகுப்புடன், வேறுசில விடயங்களையும் கொண்டதாக இந்த நூல் அமைந்துள்ளது.

'விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்' பற்றிய ஒரு சிறந்த ஆவணமாக, இத்தொகுப்பு நூல் அமைந்துள்ளது என்று கூறலாம்.

இந்நூலினை தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவு வெளியிட்டு வைத்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காந்தரூபன் அறிவுச்சோலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரந்த வாழ்வையும்
விரிந்த உறவையும்
வைத்துக்கொண்டு
வளரப் போகும் இவர்கள்
எதிர்காலத்தில்
எமது தேசத்தின்
சிற்பிகளாகத் திகழ்வார்கள்
என்பது திண்ணம்.

இந்த சமூகச் சூழலில்
இவர்களிடம்
மண்பற்றும்
மக்கள் பற்றும்
ஆழமாக வேரூன்றி வளரும்.

தமிழீழத் தேசியத் தலைவர்
வே. பிரபாகரன்.





www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் மகளிர் படையணி



**"கடற்புலிகள் மகளிர் படையணியின் தோற்றத்தைப் பற்றிச் சொல்லுங்கள்."**

"கடற்புலிகளிலே பெண்போராளிகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு எடுத்தது தலைவர்தான். அதைப்பற்றி அவர் எனக்குச் சொன்ன போது, பெண்களுக்குப் படகு செலுத்துவது, நீந்துவது எல்லாம் கடினமாக இருக்குமே என்று நான் சொன்னேன். 'அதெல்லாம் கடினமில்லை. அவர்கள் எல்லாம் செய்வார்கள். காலம் செல்லச் செல்ல சமூகத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டு, கடற்கரையில் கடலுக்குள் பெண்கள் போகக் கூடாது என்ற நிலை மாறும்' என்று தலைவர் சொன்னார்.

கடற்புலிகளாகப் பயிற்றுவிக்கப் படுவதற்காகச் சில பெண் போராளிகள் எம்மிடம் அனுப்பப்பட்டனர். பகலில்தான் நீந்திப் பழகலாம். ஆனால் பகலில் நீந்திப் பழகிக் கொண்டிருக்கும் போது தற்செயலாக ஒரு பெண்போராளி நீருக்குள் அமிழ்ந்தாலும் கரையில் நின்று பார்த்துக் கொண்டிருப்பவர்கள் அதைக் கேலி செய்யலாம். பின்னர் அது எல்லோரினதும் சிரிப்புக்குரிய விடயமாகப் போய்விடும். அதனால் ஒரு கிலோ மீற்றர் வரை நீந்திப் பழகும் வரை இவர்களைப் பகலில் பயிற்சிக்கு விடுவதில்லை என்று முடிவெடுத்தோம்.

அதனால் பகல் முழுவதும் தரையில் பயிற்சி எடுப்பதும் அரசியல் வேலைகளைச் செய்வதுமாக இருக்கும் அவர்கள் இரவு எட்டுமணிக்குப் பிறகுதான் கடலில் இறங்குவார்கள். இருளில் தான் நீந்திப் பழகினார்கள். ஏறத்தாள இருபத்தைந்து நாட்களிலேயே ஒரு கிலோ மீற்றர் தூரத்தை நீந்திக் கடக்கப் பழகினார்கள். இருபத்தியாறாவது நாள் பகலிலே நீந்தத் தொடங்கினார்கள். இத்தனைக்கும் அவர்களில் பலருக்கு முன்பு கடல் தெரியாது. தெரிந்த சிலர் கடலிலே இறங்கியதில்லை. ஆனால் பழக வேண்டும் என்று ஒரு வேகத்துடன் குறுகிய காலப் பகுதியிலேயே பழகி விட்டார்கள்.

தலைவர் கடற்புலிகளுக்குரிய பயிற்சித் திட்டங்களை வரையறுக்கும் போது நீச்சலில் போட்டியொன்று வைத்தார். ஆண்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மூன்று கடல்மைல்களையும், பெண்கள் இரண்டு கடல்மைல்களையும் அடிப்படையில் முடித்திருக்க வேண்டும் என்று வரையறை செய்தார். ஆனால் நீச்சலுக்கான விருதைப் பெறுவதாயின் பெண்கள் மூன்று கடல்மைல்களையும், ஆண்கள் ஐந்து கடல்மைல்களையும் நீந்தி முடிக்கவேண்டும் என்று கூறப்பட்டது. இதன் அடிப்படையில் நடந்த நீச்சல் போட்டியில் பல பெண்கள் ஐந்து கடல்மைல்களை நீந்தி முடித்து (சராசரி பத்துக் கிலோமீற்றருக்கு மேல்) தலைவரிடம் விசேட பரிசு பெற்றார்கள். அவ்வளவு அவர்களிடம் வலிமை இருக்கிறது. கடற் பெண்புலிகள் பற்றிய தலைவரதும், எனதும் எதிர்பார்ப்புக்களை அவர்கள் நிறைவேற்றியுள்ளனர் என்றே சொல்லலாம்."

**"உங்களது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றியதில் லெப். கேணல் பாமாவின் பங்கு என்ன?"**

"பாமா ஒரு கெட்டிக்காரி. அவர் அப்போது துணைப்பொறுப்பாளராக இருந்தார். சிறப்புப் பொறுப்பாளரும் பொறுப்பாளரும் பூநகரித் தளத்தைத் தாக்குவதற்காக சிறப்புப் பயிற்சி பெறப் போய் விட்டார்கள். இவர் தனியாக நின்றார். கடற்புலிகளின் அரசியல் வேலைகளைக் கவனிக்கவேண்டும். பயிற்சிப் பாசறையைக் கவனிக்க வேண்டும். கிளாலியில் பாதுகாப்புச் சேவைக்குப் போகவேண்டும். இந்த மூன்று வேறுபட்ட வேலைகளையும் தனியாகப் பொறுப்பெடுத்துச் செய்தார்.

கிளாலிப் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுகின்றவர்கள் இரவு முழுவதும் தூங்கமுடியாது. தண்ணீரிலேயே நிற்பார்கள். அதிகாலையில்தான் தரையிறங்குவார்கள். பாதுகாப்புச் சேவைக்குப் போய்வரும் பாமாவால் பகலிலும் உறங்கமுடியாது. அரசியல் வேலை, பயிற்சிப் பாசறை என்பவற்றைக் கவனிக்க வேண்டும். பயிற்சி எடுக்கவேண்டும். தொடர்ந்து மூன்று நான்கு நாட்களுக்குப் படகுச் சேவை நடைபெறுவதால், அந்த நாட்களில் பாமாவுக்கு ஓய்வே இருக்காது. ஆனாலும் பாமாவின் முகத்தில் ஒருநாள் கூட சோர்வை நான் காணவில்லை."

**"நீங்கள் பழகிய வரையில், அவருடைய சிறப்பான குணாம்சங்கள், திறமைகள் என்று கருதியவை?"**

"ஒருமுறை கடலிலே கரும்புலித் தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்ட கடற்சண்டையில், பாமாவின் படகு ஒன்றும் பங்கெடுத்தது. அந்தத் தாக்குதலில் பாமாவின் படகில் இருந்த தொலைத் தொடர்பாளர் ஒரு தவறு செய்ததால், தாக்குதல் திட்டம் சிறிது தவறிவிட்டது. தாக்குதல் நடந்து முடிந்த பின் நான் பாமாவிடம் தவறைச் சுட்டிக் காட்டினேன். பாமா தளரவில்லை. அடுத்தமுறை இந்தமாதிரி நடக்காமல் பார்க்கிறேன் என்று சொன்னாள். இப்படியொருவரால் திடீரென்று சொல்லமுடியாது. நான்கூட, என்னைப்பற்றி தீர்மானமாகச் சொல்லுவேன். இன்னொருவரைப் பற்றி நிச்சயமாகச் சொல்ல மாட்டேன். ஆனால் பாமா சொன்னார். செய்தும் காட்டினார். பூநகரிச் சண்டையின் போது எந்தத் தவறுமே நடக்கவில்லை. அந்தளவுக்கு ஒரு குறுகிய காலத்துள் தன்னிடமிருந்த ஏனைய போராளிகளைச் செம்மையாகப் பயிற்றுவித்தார்.

பூநகரிச் சண்டைக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போது பூநகரியில் ஒரு நீருந்து விசைப் படகைக் கைப்பற்றிக்கொண்டு வருவேன் என்று தன் பிள்ளைகளிடம் சொன்னார். சொன்ன மாதிரியே பூநகரியிலிருந்து ஒரு நீருந்து விசைப்படகை அவர் எடுத்தார்."

**"நீங்கள் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி என்ற வகையில் லெப். கேணல் பாமாவைப் பற்றிய உங்கள் கணிப்பு என்ன?"**

"பாமா அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த பொழுதுதான் எனக்கு அவரை முதன்முறையாகத் தெரியும். அங்கு படிப்பை முடித்துவிட்டு கடற்புலி அணியில் இணைந்து துணைப்



**எமது ஆயுதப் போராட்டம் கடந்துவந்த ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் தமிழீழக் கடல் மிகப்பெரிய பாத்திரத்தை வகுத்துள்ளது. 1984ஆம் ஆண்டு தலைவர் பிரபாகரன் அவர்கள், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கடற்புலிகள் படைப் பிரிவுக்கு அதன் வரலாற்று ரீதியான பிறப்பைக் கொடுத்து ஆரம்பத்தில் அதற்கு கடற்புலிகள் எனப் பெயரும் சூட்டினார். சிறீலங்கா கடற்படைக்கு சவால்விடும் அளவிற்கு, விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணி இன்று வளர்ந்துள்ளது. கடற்புலிகளை வழி நடத்துகின்ற திரு. சூசை அவர்கள் எமது இதழுக்கு வழங்கிய செவ்வியில் கடற்புலிகள் மகளிர் படையணியைப் பற்றியும் லெப். கேணல் பாமாவைப் பற்றியும் குறிப்பிட்டார்.**

பொறுப்பாளராகக் கடமையாற்றினார். மிகக் குறுகிய காலத்துள் கடலிலே மிகத் திறமையான போராளியாகத் தன்னை வளர்த்துக் கொண்டார்."

**"கடற்புலிகள் மகளிர் படையணியை மக்கள் எந்த அளவிற்கு ஏற்றுக்கொண்டுள்ளனர்.? நீரிலே இவர்கள் சாதாரணமாக நடமாடுவதால் மக்களிடையே குறிப்பாகப் பெண்களிடையே மாற்றங்கள் நிகழ்ந்துள்ளனவா?"**

"கடற்புலிகள் மகளிர் படையணி 01-03-1992 அன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட சில நாட்களுக்குப் பின்னிருந்து அவர்கள் கடலிலே வேகமாக நீந்தக் கூடியவர்கள் என்பது மக்களுக்குத் தெரியும். நீண்டகால அனுபவம்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கொண்ட மீனவர்களில் எத்தனை பேர் மூன்று கடல்மைல்களை நீந்தியிருப்பார்கள் என்பது கேள்விக் குறி. ஆனால் பெண் போராளிகள் ஐந்து கடல்மைல்கள் தூரத்தை நீந்திக் கடந்ததை தமது கண்களால் நேரடியாகவே மக்கள் பார்த்தனர்.


பெண் போராளிகள் வேக மாகப் படகுகளை ஓட்டுகிறார்கள். மக்கள் பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுகிறார்கள் என்பது கிளைலிக் கடல்நீரேரியைக் கடக்கின்ற அத் தனை பொதுமக்களுக்கும் தெரியும். அந்தப் பெண்போராளிகளில் நம்பிக்கை வைத்துத்தான் மக்கள் கடலிலே பயணிக்கின்றார்கள்.

சாதாரணமாக மீனவர்கள் சராசரியாக எட்டிலிருந்து ஐம்பத் தைந்து வரையிலான குதிரை வலுக் கொண்ட இயந்திரங்களைத்தான் இயக்குகின்றார்கள். ஆனால் எமது பெண் பிள்ளைகள் நூற்றைம் பதிலிருந்து இருநூறு வரையிலான குதிரை வலுக்கொண்ட இயந்திரங் களை இயக்கிப் படகுகளை மிக வேகமாகச் செலுத்துகிறார்கள்.

சாதாரணமாக ஒரு படகுக்குப் பின்னால் இரு படகுகளைத் தொடுத்துப் படகை அணைத்தவாறு வேகமாக ஓட்டுவதை எல்லோரும் செய்யமாட்டார்கள். ஆனால் பூநக ரிச் சண்டைக்காக ஏறத்தாள மூன்று வாரங்களுக்குள்ளே படகுக் குப் பின்னால் இரு படகுகளைத் தொடுத்து ஓட்டிப் பழகிவிட்டார் கள். பூநகரிச் சண்டையின் போதும் ஒரு தாக்குதலை நடாத்துவதற்காக அவ்வாறு படகுகளை ஓட்டினார் கள்.

பெண்கள் கடற்கரைக்கு வருவ தும் கடல்நீரில் இறங்குவதும் தவறு, கூடாது என்றெல்லாம் நினைத்த சமூகம் இன்று போராளிகள் கடலிலே சாதாரணமாக நடமாடிக் கொண்டிருப்பதை, இவர்களின் வளர்ச்சியை ஏற்றுக்கொள்கிறது. அண்மைக் காலமாக கரையோரப் பகுதிகளில் பெண்கள் நீந்திப் பழகு வதைக் காணக்கூடியதாக உள்ளது. இது கடற்புலிகள் மகளிர் படைய ணியின் நடவடிக்கைகளால் ஏற் பட்ட மாற்றம்தான் என்பதை நிச்ச யமாக நம்பலாம்.

www.tamilarangam.net




## லெப். கேணல் பாமா

பூநகரியில் புலிகளால் நடாத்தப்பட்ட 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கையில் விழுப்புண் அடைந்து, வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த போது இவர் வீரச்சாவை தழுவிக்கொண்டார். லெப். கேணல் பாமா 1989ம் ஆண்டு காலப் பகுதியில் தன்னை விடுதலைப் புலிகளுடன் முழுமையாக இணைத்துக்கொண்டார். 1990 ஆம் ஆண்டளவில் பலாலி இராணுவத் தளத்தைச் சுற்றி அமைந்திருந்த காவலரண்களில் கடமையாற்றினார். அந்தக் காலகட்டத்தில் இங்கு நடைபெற்ற பல மோதல்களிலும் இவர் பங்குகொண்டார். ஆனையிறவில் ஆகாய, கடல், வெளிச் சமரிலும், மணலாற்றில் 'மின்னல்' இராணுவ நடவடிக்கையின் போதும், புலோப்பளையில் 'ஒப்பிரேசன் யாழ்தேவி' நடவடிக்கையின் போதும் இவர் குறிப்பிடத்தக்க பங்காற்றினார். விடுதலைப் புலிகளின் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் பயின்ற இவர் கடற்புலிகள் மகளிர் படையணியின் துணைப்பொறுப்பாளாராகக் கடமையாற்றினார். கிளாலி கடல்நீரேரியில் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் பணியிலும் குறிப்பிடத்தக்க பங்காற்றினார். இறுதியில் 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கையின் போது விழுப்புண் அடைந்து வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கையின் போது லெப். கேணல் பாமா உட்பட கடற்புலிகள் மகளிர் படையணியின் ஒரு அணியினர் கடலிலே நடந்த மோதல்களில் பங்கேற்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


நீந்துவதையும் படகு செலுத்துவதையும் மக்கள் அறிந்திருக்கிறார்கள். மக்களுக்குத் தெரியாத ஒன்றையும் நான் இப்போது சொல்கிறேன். இருளிலே கடலிலே சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போராளிகள், கண்கள் கட்டப்பட்டது போன்ற நிலையில்தான் இருப்பார்கள். தொலைக் கண்காணிப்புக் கருவிகளை (ராடர்) இயக்குபவர்கள்தான், படகில் இருப்பவர்களைத் தொலைத் தொடர்புச் சாதனங்கள் மூலம் வழிநடத்திக் கொண்டிருப்பார்கள். தொலை கண்காணிப்புக் கருவிகள் மூலம் கடலை அவதானித்து, படகுகளுக்கு உத்தரவுகளைக் கொடுத்துக்கொண்டிருப்பார்கள். இவர்கள்தான் படகில் இருக்கும் போராளிகளின் கண்கள் போன்றவர்கள். கடலை அவதானித்து, படகுகளுக்கு உத்தரவு வழங்குகின்ற வேலையைப் பெண் போராளிகள் தான் செய்கின்றார்கள். மிகவும் நுட்பமான வேலை இது. பெண் போராளிகள் திறமையாகச் செய்கிறார்கள்.

மிக ஆரம்பத்திலே, கடலிலே பெண்போராளிகள் வேலை செய்வது பற்றி எனக்குச் சந்தேகம் இருந்தபோது அதைத் தலைவர் தீர்த்து வைத்தார். தலைவரிடம் கதைத்த பின்னர், பெண்போராளிகளால் முடியும் என்பதை நான் நம்பினேன். ஆனால் இவ்வளவு



வேகமாக, மிகுந்த வலுவுடன் அவர்கள் தம்மை வளர்த்துக்கொள்வார்கள் என்பதை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் தமது திறமையை மட்டுமல்லாது ஆட்பலத்தையும் அதிகரித்திருக்கிறார்கள். ஒன்றரை வருடங்களின் முன் சில பத்துக்கள் என்ற எண்ணிக்கையில் இருந்தவர்கள் இன்று சில நூறுக்கள் என்ற அளவில் தம்மை வளர்த்துள்ளார்கள்.

மிகப்பெரிய கடற்போரென்று இதுவரை எதுவும் நடக்கவில்லை. ஆனால் நடந்துமுடிந்த சிறு சிறு கடற்போர்களில் பெண்கள் மிகத் திறமையாகச் செயற்பட்டார்கள். இந்த வளர்ச்சியை நான் மட்டுமல்ல யாருமே எதிர்பார்க்காத ஒன்று.



நன்றி: சுதந்திரப் பறவைகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எமது பிரதேச மக்களின் உள், வெளி இடப்பெயர்வும் அதன் விளைவுகளும்

சென்ற இதழ் தொடர்ச்சி...

1970 களின் பின்னர் இப்பகுதிகளிலிருந்து, வடக்கு கிழக்கு மாகாணங்களின் தாயக விடுதலைக்காக இளைஞர் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கி அது விரிவு பெறவே, சர்வதேச இடப்பெயர்வு, பெருமளவிற்கு தனிப்பட்ட காரணங்களுக்காக அகதிகள் என்ற போர்வையில் இடப்பெயர்வு, முனைப்புப் பெறத்தொடங்கியது. இத்தகைய இடப்பெயர்வுகள் ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே, நெதர்லாந்து, பெல்ஜியம், சுவிற்சலாந்து, ஐக்கிய இராச்சியம், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு அதிகரித்த அளவில் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இத்தகைய இடப்பெயர்வுகளில் பெரும்பாலானவை பொருளாதாரத் தேட்டத்தை மையமாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டன என்பது, பல்வேறு ஆய்வுகளிலிருந்து தெரிய வருகின்றது. இத்தகைய இடப்பெயர்வாளரை 1983 ஆம் ஆண்டின் தமிழர் தம் பொருளாதாரச் சீரழிப்பு மற்றும் இனப்படுகொலைகளின் விளைவாகவே, இந்நாடுகள் விரும்பியோ விரும்பாமலோ ஏற்க வேண்டியிருந்தது.

பௌதிக ரீதியாக வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கும் தென்னிந்தியாவுக்குமிடையில் சாதகமான தொடர்பு காணப்படுவது போல, பண்பாட்டு ரீதியாக மிக நெருக்கமான உறவுமுறைகள் வரலாற்றுக் காலங்களிலிருந்து காணப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக இனக்கலவரங்கள், ஆயுதப் போராட்டம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்படுவதாகக் கருதியவர்களில் ஒரு பகுதியினர் படகுகள் மூலமாகவும், மறு தொகுதியினர் விமானம் மூலமாகவும் தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்தனர். 1980 களின் முதலரைக் காலப்பகுதியில் இலங்கைத் தமிழர்கள்பால் மிக அனுதாபம் கொண்டிருந்தமையினால், தமிழ்நாட்டு மக்களாலும் தமிழக அரசினாலும் இந்திய அரசினாலும் இவர்கள் வரவேற்கப்பட்டனர். இவர்களில் பொருளாதார ரீதியில் நலிவுற்றோர் அகதிமுகாம்களிலும், ஏனையோர் பெருநகரங்களிலும் வாழ்ந்து வந்தனர். எனினும் மாறி மாறி வரும் அரசியல் சூழலின் விளைவாக அனுதாபம் குறைவடையவே, பலவந்தமான முறையில் மீண்டும் தாயகத்திற்கு அனுப்பிவைக்கும் செயற்பாடு தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

மேலும் 1986 ஆண்டு மதிப்பீட்டின்படி, 150,000 இலங்கைத் தமமிழர்கள் பல்வேறு காரணிகளின் நிமித்தம் மேற்குநாடுகளுக்கு இடப்பெயர்வினை மேற்கொண்டுள்ளதாக, புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. 1990 ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி பிரானஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் 76000 தமிழர் வாழ்ந்துள்ளனர் என உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்திருந்த போதிலும், இது மேலும் அதிகமாயிருக்கலாம் என அந்நாடுகளிலிருந்து வெளிவந்த தமிழர் நிலைபற்றிய சஞ்சிகைகள் எடுத்துக்கூறியுள்ளன. 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில், பிரித்தானியாவில் 38000 இலங்கைத் தமிழர் அகதிகள் அந்தஸ்துடன் உள்வரவினை மேற்கொண்டனர் என அறிக்கைகள் சுட்டிக்காட்டியதிலிருந்து, 1986-1990 ஆம் ஆண்டுக்களிடையில் இப்பிரதேசங்களிலிருந்து விரைவான சர்வதேச இடப்பெயர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இவர்களைத் தவிர ஐக்கிய இராச்சியத்தில் 15000-16000 இற்குமிடையில் மாணவர்களாகவும், 10 வருடத்தைப் பூர்த்தி செய்தவர்களாகவும் இருந்திருக்கின்றனர் என மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. மேலும் நெதர்லாந்தில் 3500 பேரும், சுவிற்சர்லாந்தில் 20000 பேரும், இத்தாலியில் 5000-6000 இற்குமிடையிலும், அவுஸ்திரேலியாவில் 4500 பேரும், நோர்வேயில் 16000 பேரும், கனடாவில் 35000-40000 இற்குமிடையிலுமாக வடக்கு கிழக்கு மாகாணங்களுட்பட நாட்டின் பல பகுதிகளிலிருந்து தமிழர்கள் சென்றடைந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது. மேற்குறித்த நாடுகளில் சுமார் 250,000 தமிழர்கள் வாழ்கின்றனர் என்பதை மதிப்பிடக்கூடியதாகவுள்ளது.

இவைதவிர இந்தியாவில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், 135,000 இலங்கத் தமிழர் வாழ்ந்து வருவதாக இந்திய அரசு தெரிவித்திருந்த போதிலும், இதற்கு மாறாக அரசு சாராத நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி 225,000 இலங்கைத் தமிழர் வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் பெரும்பாலானோர் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்களேயாவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## விளைவுகள்

* வரலாற்றுக் கலாங்களில் அதிகாரப் போட்டி, ஆட்சி அமைப்பு ஆகியவற்றுடன் தமிழர்களும் சிங்களவர்களும் காலத்துக்குக் காலம் ஒற்றுமையுடனும் பகையாளிகளாகவும் காணப்பட்டனர். இதன் விளைவாக அநுராதபுரம் பொலநறுவை இராச்சியங்களின் வீழ்ச்சியுடன் உயிர்கொல்லி நோய்களின் பரவலும், பரவலாக வாழ்ந்துவந்த தமிழர்களைக் கடற்கரையோரம் சார்ந்து வாழ்வதற்கு நிர்ப்பந்தித்ததன் விளைவே, தமிழர் பிரதேசம் பறிபோவதற்கான முக்கிய காரணிகளில் ஒன்றெனக் கொள்ளவேண்டும்.

* ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த தமிழர்களில் கணிசமானோர் தென்மேற்கு, மற்றும் மலையகப் பகுதியினை நாடியதன் விளைவாக அவ்வவ் பிரதேச இன வீதாசாரத்தில் சிறிதளவு மாற்றம் ஏற்பட்டிருந்தது. ஆனால் 1930களிலிருந்து கிழக்கு மாகாணத்திலும் வடமாகாணத்தின் எல்லை மாவட்டங்களிலும் சிங்களவர்களின் உள்வரவானது இன வீதாசாரத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி தாயகக் கோட்பாட்டிற்கு அச்சுறுத்தலாகியுள்ளது.

* ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னர் 'வெள்ளையடித்த' தொழில் மற்றும் வர்த்தக நோக்கம் கருதிய வெளி இடப்பெயர்வினால் தாம் சென்றடைந்த பிரதேசத்தினைவிட தமது ஆரம்ப பிரதேசத்தில் சமூக, பொருளாதார பண்பாட்டு ரீதியில் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக "மணி ஓடர்" பொருளாதார அமைப்பு முறைக்கு இட்டுச் சென்றுள்ளதைக் காணலாம். எனினும் ஆங்கிலேயரிடமிருந்து நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் அடிக்கடி நிகழ்ந்த இனக்கலவரங்களின் விளைவாக, மேற்குறித்த இடப்பெயர்வாளர் கட்டாயப்படுத்தப்பட்ட இடப்பெயர்வுக்குள்ளாக்கப்பட்டனர்.

* வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களவர் உள்வரவிற்கு அரசு- அரசு சாராத நிறுவனங்களால் ஒத்துழைப்பு வழங்கப்படுவது போல, மேற்குறித்த பிரதேசத்தில் தமிழரின் இடப்பெயர்வுக்கு வழங்கப்படாமையே, இன ரீதியிலான பரம்பல் மாறுபாடடைவதற்குரிய முக்கிய காரணிகளில் ஒன்றாகும்.

* 1983 ஆம் ஆண்டின் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெரும் எண்ணிக்கையினர் தாம் வாழ்ந்த பிரதேசங்களை விட்டுத் துரத்தப்பட்டமையால், அகதிகளாக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக 1992 ஆம் ஆண்டு மே மாதம் அம்பாறை மாவட்டத்தில் 30,937 தமிழர்கள் அல்லது மாவட்டத்தின் மொத்தத்தமிழர் குடித்தொகையில் 75.0 வீதமானோர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் 1992 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் 56,462 மக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இதுபோலவே ஏனைய மாவட்டங்களிலும் இவ் அகதி நிலையைக் காணமுடிகிறது.

* கடந்த பத்து ஆண்டுகளாக இடம்பெற்று வரும் போராட்ட நிலையினால் தமது வாழ்விடத்தை விட்டு இடப்பெயர்வினை மேற்கொண்டவர்கள் மீண்டும் தம்மிடம் சென்று குடியிருப்பினை ஏற்படுத்துவதற்கு முடியாத நிலை ஏற்படக்கூடிய நிலைக்கு அவர்கள் தம் பொருளாதார நிலை, உளநிலை இடம்தர மாட்டாது என்பதை ஆய்வின்மூலம் அறியமுடிகின்றது. இதன் விளைவு இன விகிதாசாரப் பரம்பலில் பாதக நிலையை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

*அகதிகளாக இடப்பெயர்வினை மேற்கொண்டு வருவதனால் தொழில் வாய்ப்பின்மை, போசாக்கற்ற உணவு நிரம்பல், நோய் கொள்நிலை அதிகரித்துக் காணப்படல், பிரசவத்தாய்-குழந்தை இறப்புக்கள் அதிகரித்துச் செல்லும் நிலை என்பன தொடர்ந்துவரும் பாதக விளைவாக இருக்கின்றது.

* மலாயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு மேற்கொண்டதும், சுதந்திரத்தையடுத்து நிகழ்ந்த மூளைசாலிகள் மற்றும் இடைத்தர கல்வியறிவு உடையவர்களின் சர்வதேச இடப்பெயர்வும் பொருளாதார, சமூகரீதியான தாக்கத்தினை ஏற்படுத்திய போதிலும் இடப்பெயர்வாளரின் எண்ணிக்கை குறைவாகவிருந்தமையால், அரசியல் மற்றும் குடிப்பரம்பல் ரீதியாக பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கவில்லை. ஆனால் 1980களிலிருந்து மேற்கொள்ளப்

## கப்படன் பண்டிதர் நினைவாலயம் திறப்பு

கப்டன் பண்டிதரின் நினைவு நாளையொட்டி 9-1-1994 அன்று கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் 'பண்டிதர் நினைவாலயம்' ஒன்றும் 'மாவீரர் படிப்பகம்' ஒன்றும் திறந்துவைக்கப்பட்டன. அத்துடன் அன்றைய தினம் மாலை நினைவுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. நாவற்குழி வனிதா குடியிருப்புப் பொறுப்பாளர் திரு. தேவன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. செம்மணன், பண்டிதர் குடியிருப்புப் பொறுப்பாளர் திரு. அற்புதன், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் திரு. ரவி ஆகியோர் நினைவுரை நிகழ்த்தினார்கள். நினைவு நாளையொட்டி பல விளையாட்டுப் போட்டிகளும் நடாத்தப்பட்டன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பட்ட சர்வதேச இடப்பெயர்வானது பல்வேறுபட்ட பொருளாதார, சமூக, பண்பாட்டு, அரசியல் ரீதியாகப் பெரிய மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளமையைக் காண முடிகிறது.

* சர்வதேச இடப்பெயர்வுகளில் 15-40 வயதிற்கிடைப்பட்டவர்கள் குறிப்பாக ஆண்களே பெருமளவிற்கு ஈடுபாடு கொண்டுள்ளமையால், தொழிலாற்றலுள்ள படையினை இழக்கவேண்டி ஏற்பட்டுள்ளது மாட்டுமல்லாது, விவாக நிலையில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்திவருகின்றது. குறிப்பாக ஆண்களிலும் பார்க்க பெண்களின் பங்கு அதிகரித்துள்ளது. சீதனப் பேரம் உச்சக்கட்டத்திற்கு சென்றுகொண்டிருக்கின்றது. விவாகமாகாத பெண்களின் பங்கு அதிகரித்துக்கொண்டு செல்வதை எதிர்கொள்ளவேண்டிய நிலை உருவாகிவருகின்றது.

*அண்மைக்கால இடப்பெயர்வில் மூளைசாலிகளை விட, தாழ்ந்த பொருளாதார வளத்தினையுடைய குறிப்பாக விவசாயத்துடன் தொடர்புடையவர்களின் பங்கு அதிகரிக்கப்பட்டுள்ளமையால், விவசாயப் பொருளாதார அமைப்பில் பாதகநிலை உருவாகியுள்ளமையைக் காணமுடிகின்றது.

* மேலைநாடுகளில் அரசியல் தஞ்சம் என்ற போர்வையில் பொருள் தேட்டமே அவர்களின் முக்கிய குறிக்கோளாகவிருக்கிறது. இதனால் மேற்படி இடப்பெயர்வினை மேற்கொண்டவர்கள் விரைவாக முன்னேற வேண்டுமென்பதற்காக விடுதலை பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதாவது போதை வஸ்து கடத்தலில் ஈடுபாடு கொண்டு சிறைக்கூடத்திற்குள் தள்ளப்பட்டுள்ளவர்களாக ஒரு தொகையினர் காணப்படுகின்றனர்.

*அண்மைக்காலங்களில் இடம் பெற்றுவரும் உள்நாட்டு இடப்பெயர்வாயினும் சரி, சர்வதேச இடப்பெயர்வாயினும் சரி இடப்பெயர்வாளரிடையே உளரீதியாக பாதிப்படைந்தவர்களின் பங்கு அதிகரித்துக்கொண்டு செல்வதை மருத்துவர்களின் கூற்றுக்களிலிருந்து அறியமுடிகிறது. குறிப்பாக ஐக்கிய இராச்சியத்திற்கு இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களைப் பொறுத்தவரை தனிமை, தொழிலின் கடினத்தன்மை, தூக்கமின்மை, போதைவஸ்துப் பாவனை, மதுபான நுகர்வு போன்ற காரணிகளால் 5:2 என்ற ரீதியில் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என மருத்துவர்கள் தெரிவுத்துள்ளனர்.

* மேற்குலக நாடுகளுக்காயினும் சரி, இந்தியாவுக்காயினும் சரி இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களைப் பொறுத்தவரை, தமிழரின் பாரம்பரிய பொருளாதார அமைப்பான கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலை தொடருமாயின் கல்விப் பாரம்பரியத்தை இழக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட வேண்டிவரும்.

*இந்தியாவுக்கான, இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களைப் பொறுத்தவரை இந்திய மற்றும் தமிழ்நாட்டு அரசுகளின் வெறுப்புக்குள்ளானவர்களாக, மீண்டும் தாயகத்திற்கு திரும்ப அனுப்பப்பட்டு வருகின்றனர். இத்தகைய இடப்பெயர்வாளர் தொடர்ந்தும் துன்பப்படுவார்கள் என்பதைத் தெளிவாக்குகின்றது.

* இறுதியாக, வடக்கு கிழக்குப் பிரதேசங்களிலிருந்து சர்வதேச இடப்பெயர்வினை மேற்கொண்டவர்களைப் பொறுத்தவரை, அரசியல் தீர்வு ஏற்படும் பட்சத்தில் அவர்களில் பெரும்பாலானோர் தாயகம் திரும்புவார்கள் எனக் கூறமுடியாது. இதனை ஓர் அரசியல்வாதியின் கூற்றுப்போலவே தொலைந்துபோன சமூகமாக மாறக்கூடிய சூழ்நிலை ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் உருவாகலாம். திரும்பிவரும் பட்சத்தில் அவர்கள் இப் பிரதேசங்களில் தொழில்களைச் செய்யும் ஆற்றல், மன இயல்பு குன்றியவர்களாகக் காணப்பட வாய்ப்புண்டு. ஏனெனில் சமூகத்தில் தம்மை உயர்வாகக் கருதிக்கொள்ளும் பண்பு, உழைப்புக்கேற்ற ஊதியத்தை வெளிநாட்டு நாணயமாற்றில் சிந்திக்கும் நிலை போன்றன முக்கியமான இடத்தைப் பிடிக்கும் என நம்பலாம்.

முற்றும்

நன்றி: 'தமிழீழ நோக்கு'

## உவர் தரை மீட்பு

கோப்பாயில் உள்ள உவர் நிலத்தில் பரீட்சார்த்தமாகப் பயிரடப்பட்டுள்ள நெற்பயிர் செழிப்பாக வளர்ந்திருக்கிறது. கடந்த தைத் திங்களில் அறுவடை விழா நடைபெற்றது.

எதிர்காலத்தில் 800 ஏக்கர் உவர் நிலம் பயன்பாட்டிற்குட்படுத்தப் படுமென தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

★★★

## மூலிகைத் தோட்டம்

பாரம்பரிய வைத்திய முறைகளை ஊக்குவிக்கும் முகமாக ஆயுர்வேத மருந்துகளுக்குத் தேவையான மூலிகைகள் உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்று வலி தென்மேற்குப் பிரதேச சபையினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

★★★

## மரக் கன்றுகள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் காடு வளர்ப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஆனைக்கோட்டைப் பிரதேசத்தில் காக்கைதீவுப் பகுதியில் வசிக்கும் நாற்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வீடுகளில் நாட்டுவதற்கென வேம்பு, புளி, நாவல் போன்ற மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மரக்கன்றுகளுக்கு பாதுகாப்புக் கூடுகள் அமைப்பதற்கு பனைமட்டைகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

www.tamilsangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'சுதந்திரப் பறவைகள்'பார்வையில்...

# விடுதலைப் பயணத்தில் அணிதிரள்வோம்.



தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் ஆயுதம் ஏந்திய போராட்டமாக மாறி இரண்டு தசாப்தங்கள் கடந்துவிட்டன. இந்த ஆயுதப் போராட்டத்தில் பெண்கள் நேரடியாகப் பங்குபெறத் தொடங்கி ஒரு தசாப்தம் முடிவடைகிறது.

தமிழீழத்தில் நடைபெறும் பெண்விடுதலைக்கான போராட்டம் தனித்துவமான பண்புகளைக் கொண்டது. ஈழத்துத் தமிழ்ச் சமுதாயம் மிகவும் இறுக்கமான, பழைமைவாத நடைமுறைகளைக் கொண்டது; அதிலும் பெண்கள் மீது மிகவும் அழுத்தமான நடைமுறைகளைப் பிரயோகித்து வருவது; ஒரு பெண் தான் சம்பந்தப்பட்ட விடயமொன்றில் தன்னிச்சையாக முடிவெடுப்பது கூட அந்தக் குடும்பத்துக்கே அவமானம் தரும் விடயமாக நினைப்பது.

இத்தகைய ஒரு கடும்போக்குள்ள சமூக அமைப்பைச் சேர்ந்த சில பெண்கள், ஏறத்தாழ பத்து வருடங்களின் முன் தம்மீது பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களை உதறித்தள்ளினர். தாம் சம்பந்தப்பட்ட விடயத்தில் தாமே முடிவெடுத்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்திக்கொண்டிருக்கும் ஆயுதப்போரில் இணைந்துகொண்டனர்.

இந்த விடயம் அன்று தமிழீழம் முழுவதுமே ஒரு சர்ச்சையை ஏற்படுத்தியது. தனக்கு மிகப்பெரிய இழுக்கு ஒன்று ஏற்பட்டுவிட்டதாக எண்ணி ஈழத் தமிழ்ச் சமுதாயம் தன்னை நொந்துகொண்டது. இந்தச் சம்பவத்தின் எதிரொலியாக ஏனைய பெண்கள் மீது மேலும் அழுத்தங்களைப் பிரயோகித்தது. படித்துக்கொண்டிருந்த இளவயதுப் பெண்கள் பாலர் பாடசாலையிலிருந்து நிறுத்தப்பட்டு, வீட்டுள் முடக்கப்பட்டனர். போரிலே இணைந்த பெண்களைப் பற்றிப் பேசிய பெண்கள் கூட 'ஓடுகாலிகள்' என்று விமர்சிக்கப்பட்டனர்.

சமூகம் தனது பிடியை இறுக்கிய பின்னரும் பெண்கள் ஆயுதப் போரிலே இணைவது தொடர்ந்தது; தொடர்ந்துகொண்டிருக்கிறது. இதிலிருந்து இரண்டு விடயங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது.

ஒன்று, பெண்கள் செல்ல வேண்டிய சரியான பாதை எது என்பதை பெண்களே வழிகாட்ட வேண்டும். அத்துடன் மிகவும் இறுக்கமான, பிற்போக்கான சமூக அமைப்புக்குள் இருந்துகொண்டும் ஒரு புரட்சியைப் பெண்களால் நடாத்தமுடியும். முதலில் யார் தொடக்கி வைப்பது என்று ஒரு பிரச்சினை இருந்தாலும், யாராவது ஒரு பெண் ஆரம்பித்து வைக்க, அவரைப் பின்தொடர ஏனைய பெண்கள் தயாராக இருக்கிறார்கள்.


மற்றையது, விடுதலை வேகங் கொண்ட, புரட்சி எண்ணங் கொண்ட பெண்களை எந்தக் கட்டுப்பாடுகளைப் பிரயோகிப்பதன் மூலமும் அடக்கமுடியாது. இந்த இரண்டு விடயங்களையும் ஈழத் தமிழ்ச் சமுதாயம் இன்று நன்கு புரிந்துகொண்டிருக்கும்.

தமிழ்ச் சமூகம் மட்டுமல்லாது, முழு உலகுமே எப்படி இந்த மாற்றம் நிகழ்ந்தது என்று வியந்துகொண்டிருக்கின்றது. அதனால்தான் நாங்கள் ஏனைய நாடுகளில் நடந்த, நடந்து கொண்டிருக்கின்ற பெண்விடுதலைப் போராட்டங்களை விட, நாம் நடத்தும் போராட்டம் தனித்துவமானது என்று சொல்கிறோம். ஏனெனில் முன்னேறிய நாடுகளில் கூட வீட்டிலிருந்து ஒரு பெண் வெளியே வருவது, தன்னிச்சையாகச் செயற்படுவது என்பது ஒரு பெரிய விடயமல்ல. ஆனால் தமிழீழத்திலே வீட்டிலிருந்து பெண்கள் வெளியே வருவதற்கும் அந்த மாற்றத்தை சமூகம் ஓரளவுக்காவது ஏற்றுக் கொள்வதற்குமே நீண்ட காலப்பகுதி தேவைப்பட்டது. ஆகவே இந்த மண்ணில் இது பெரிய மாற்றம் தான். ஆனால் இதுதான் பெண் விடுதலையல்ல. அதை அடைய இன்னும் நீண்ட தூரம் போகவேண்டியுள்ளது. ஆகவே அதற்கான பாதையில் அணிதிரள வேண்டியது அனைத்துப் பெண்களினதும் கடமையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பெண் விடுதலை

எமது சுதந்திர இயக்கத்தின் ஆரம்பகாலம் தொட்டே பெண் விடுதலையை ஒரு பிரதான இலட்சியமாக நாம் வரித்துக்கொண்டோம். பெண்கள் விழிப்புற்று, எழுச்சிகொண்டு, தமது சொந்த விடுதலைக்காகவும் தேசத்தின் விடுதலைக்காகவும் போராட வரும்போதுதான் அந்தப் போராட்டம் ஒரு தேசியப் போராட்டமாக முழு வடிவத்தைப் பெறும் என்ற உண்மையை நாம் அன்றுதொட்டே உணர்ந்திருந்தோம்.



நாம் ஒடுக்கப்பட்டுவரும் மக்கள் இனம். அந்நியனின் அடக்குமுறையால் நாம் அழிக்கப்பட்டு வந்தபோதும், எமக்குள்ளே எமது சமூகவாழ்வில் நாம் எம்மவர்களை மோசமான முறையில் அடக்கி ஒடுக்கிவருகிறோம். இப்படியாக எம் மத்தியில் நிலவிவரும் ஒரு ஒடுக்குமுறை வடிவம் தான் பெண் ஒடுக்குமுறை. பழமைவாதத்திலும் மூடநம்பிக்கையிலும் ஊறிப்போன எமது சமூக அமைப்பில் நீண்ட நெடுங் காலமாகப் பெண்ணினம் ஒடுக்கப்பட்டு வருகிறது. எமது வேதாந்தங்களும், மத சித்தாந்தங்களும், மனுநீதி சாஸ்திரங்களும் அந்தக் காலம்தொட்டே பெண்ணடிமைத்துவத்தை நியாயப்படுத்தி வந்திருக்கின்றன. ஆணாதிக்கம், சாதியம், சீதனம் என்ற பல்வேறு பரிமாணங்களில் இந்த ஒடுக்குமுறையானது பெண்களின் வாழ்க்கையை ஊடுருவி நிற்கிறது. அவர்களின் வாழ்க்கையைச் சிதைத்து வருகிறது.

தலைவர் திரு.வே.பிரபாகரன்

# பெண்களுக்கென ஒரு நூல் நிலையம்

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம் பெண்களுக்கான தகவல் மையமாகத் தொழிற்படவுள்ளது. இதன் முதற்கட்டமாக அரிய நூலகம் ஒன்றினை அறிமுகப்படுத்துகிறது.

எமது சமூக அமைப்பின் சரிபாதிக்கும் மேற்பட்ட எண்ணிக்கையைக் கொண்ட பெண்களின் பிரச்சினைகளை தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம் ஆராய்கிறது. இந்த நிறுவனம் எதிர்காலத்தில் தமிழீழப் பெண்களின் முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் ஏதுவான திட்டங்களை முன்வைக்கிறது.

பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காணலும் அதனை ஆய்வு செய்வதும் இதற்கான தீர்வுத் திட்டங்களை வகுத்தலும் பெண்களின் முன்னேற்றங்களுக்கான ஆலோசனைகளை வழங்கலும் இதன் குறிக்கோள்களாக இருக்கின்றன. அதாவது எமது சமூகத்தில் பெண்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள், நலன்கள் பற்றிய புள்ளி விபரங்களை சேகரிக்கவும் பெண்கள் மனம்விட்டு தமது பிரச்சினைகளைக் கூறி அதற்குரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளவும் பெண்கள் தொடர்பான ஆவணங்கள், புத்தகங்களைப் பேணவும் இவ்வமைப்பு நிறுவப்பட்டது.

இதன் முதற்கட்டமாக இந் நிறுவனம் நூல் நிலையம் ஒன்றினை இவ் வருடம் ஜனவரி முதலாம் திகதி திறந்து வைத்துள்ளது.

பெண்களின் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட பல அரிய நூல்களை இந் நூலகம் கொண்டுள்ளது. கோப்பாயிலுள்ள இந் நூலகத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளும் வாசகர்களை இந் நிறுவனம் வரவேற்கிறது. 'பெண்கள் பகுதி' என்ற தனிப்பட்ட பிரிவையும் இந் நூல்நிலையம் கொண்டுள்ளது. இந் நூலகம் பொதுவான பல நூல்களையும், துறைசார்ந்த நூல்களையும் கொண்டிருப்பினும், மேலாக பெண்களை மையப்படுத்திய நூல்களை அதிகளவிற் கொண்டுள்ளது.

பெண்கள் பற்றிய சரியான சமூகப் பார்வையை நாம் அனைவரும் பெற்றிருக்க வேண்டியது எமது சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமானது. அந்த வகையில் இந்த நூலகம் இத்தகைய சமூகப் பொறுப்பைச் செய்ய முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாவீரன் துயிலும் இல்லம்

வெறுமே நிணமும் நீரும் கொண்ட ஒரு பிண்டமல்ல
வீரமும் விடுதலை வேகமும் கொண்டவன்
ஈகமும் மனதில் ஈழமும் கண்டவன்
தானைகள் தகர்த்தொரு தடவழி சமைத்தவன்
எங்கே போர்க்களம் எங்கே பகைவன் - என
வானமும் நடுங்கிட வையகம் நடந்தவன்
மார்பிலே குண்டேற்றி மரணத்தை அணைத்தவன்
உறங்கிடும் கதைசொல்லும் உண்மையின் தலமிது

கற்களும் முட்களும் காலடி நெருட
புற்களும் புழுதியும் பாதம் மறைக்க
கைகளில் சுடுபொறி கருத்துடன் ஏந்தி
விழிகளில் விடுதலைச் செம்பொறி தாங்கி
தலைவனின் காலடித் தடமது தொடர்ந்து - தன்
விழுப்புண் வாங்கிய திண்ணுடல் நோக
காகமும் கழுகும் உண்டிடவென்று
எதிரியைக் கிழித்தவன் உறங்கிடும் பூமி

மக்கள் வாழ
மக்கள் வாழும் மண்ணது மீள
கற்கை மறந்தவன்
தாயின் தழுவல்
பொற்கை மறந்தவன்
சொந்த வீட்டுப்
படுக்கை மறந்தவன்
புதுத்
தளிர்க்கை மறந்தவன்
பந்தபாசம் எல்லாம் ஒன்றாய்
வெந்து மாளும்
வேட்கை நிறைந்தவன்
மண்ணிலே தவழ்ந்து
மண்ணிலே நடந்து
மண்ணையே குருதியால் நனைத்து
மண்ணுக்காய் உரமாகி
கண்ணொத்த விடுதலைக்காய்
விண்ணையே அளந்தவன்
விழிமூடும் தலமிது

மாண்டவர்க்கு மனங்கலங்கி
மண்ணிட்ட சமாதியல்ல
வாழ்பவர்கள் சென்று நிதம்
வழிபடுமோர் சந்நிதி
வீழ்ந்தவர்கள் கதைமுடிக்கும்
விடுகதையின் முடிவல்ல
சேர்ந்து நிதம் களம் புகுவோர்
வழிபடுமோர் பொன்னடி

மாவீரர் பாதங்களை அடிதொழுவோம் நாங்கள்
ஈகச் சுடரதனில் வழிதெளிவோம் நாங்கள்
மானம் பெரியதெனும் படையணியில் செல்வோம்
ஈனம் எதனையுமே இடர்கண்டு ஏற்கோம்
தானம் தவமிரண்டும் போரினிலே காப்போம்
வானம் திரண்டிடினும் வந்தவழி மீளோம்
ஈழம் எமதெனவே இருகண்ணில் ஏற்போம்
தலைவர் வழிகாட்டும் திசை நோக்கிச் செல்வோம்.

*எஸ். ரி. பிறேமராஜன்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









